




# தமிழரசு

16-3-1978 50 காசு


சென்னை, அண்ணா மேம்பாலம்
அரசு சிமெண்ட்
உபயோகித்துக் கட்டப்பட்டது!
● கண்கவர் வண்ணம்
● துல்லியமான பூச்சு
● அதிகப்படி மணல் கலந்து உபயோகிக்கக் கூடியது.
● காங்க்ரீட் சுண்ணாம்புக் கலவை வேலைக்குகந்தது. ● அதிக உழைப்பு உறுதி ● கந்தக நீர் மற்றும் அமில மண்ணால் பாதிப்பு ஏற்படாது.
IS தர நிர்ணயங்களின் படி தரமேன்மையுடன் தயாரிக்கப்பட்டது.
ARASU CEMENT
TIDCO
தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பொரேஷன் லிமிடெட்
ஆலங்குளம் தொழிற்சாலை,
இராமநாதபுரம் மாவட்டம்
மேற்கண்ட சார்பு நிறுவனத்தின் முழு உரிமையாளர்கள்:
தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்,
150-A அண்ணாசாலை, சென்னை — 600 002.

## இந்த இதழில்.....

வணக்கம்.

பயனுள்ள பல கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகிறது, இவ்விதழ்.

'காலம் மலர்ந்தது' என்ற தலைப்பில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 1-3-78 அன்று பல்லாவரத்தில் நடைபெற்ற அனைத்திந்திய இராணுவ ஆள் சேர்ப்பு விழாவில் ஆற்றிய கருத்தாழம் மிக்க உரையிலிருந்து சில பகுதிகள் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன. 'இராணுவத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் தமிழ்நாட்டு இளைஞர்கள் தமிழகத்திற்கு உயர்வளிக்கும் வகையில் பாடுபட்டு நாட்டுக்குப் பெருமை தேடித் தரவேண்டும்' என்ற முதல்வரின் வேண்டுகோளினை இளைஞர்கள் நெஞ்சத்தில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் அளித்த கொள்கை விளக்கக் குறிப்பினை உள்ளடக்கிய 'இணைப்புப் பாலம்', செய்தி-மக்கள் தொடர்புத் துறை ஆற்றிவரும் பணிகளைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறது.

'வளரும் தமிழகம்' என்ற தொடரில், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் 5.3.1978 அன்று வானொலியில் ஆற்றிய உரையில் 'புதுமைத் தமிழகம் மலர' நாம் ஆற்ற வேண்டிய பணிகளைக் கோடிட்டுக் காட்டியுள்ளார்கள். அடிப்படைத் தேவைகளான உண்ண உணவும், இருக்க இடமும், உடுக்க உடையும் வேண்டும்; அத்துடன். குடிநீர்த் தேவையும் நிறைவு செய்யப்பட வேண்டும் என்ற உயரிய கருத்தினை அமைச்சர் அவர்கள் தமது உரையில் வலியுறுத்தியுள்ளார்கள்.

'அண்ணா எனும் இலக்கியவாதி' என்ற தொடர் இலக்கியத் திறனாய்வுக் கட்டுரையில் 'அடிப்படையில் எல்லாப் பேரிலக்கியங்களுக்கும் பேரறிஞர் அண்ணா இதயபூர்வமான விசுவாசியாக விளங்கினார்' என்ற உண்மையை வடித்துக் கொடுக்கிறார், கட்டுரை ஆசிரியர்.

'பத்திரிகையாளர் இங்கே உருவாகிறார்' நல்ல பயனுள்ள கட்டுரை. சென்னைப் பல்கலைக் கழகத்தில் பத்திரிகையாளர்களும் உருவாக்கப்படுகிறார்கள்; அதற்கென்று மேல் பட்டப் படிப்பே உள்ளது என்பது பயனுள்ள செய்தி அல்லவா?

தாம்பரம், ஆவடி விமானப்படை நிலையங்களில் அளிக்கப்படும் பயிற்சி குறித்து 'தாய்நாடு காக்கத் தயாராகிறார்கள்' என்ற கட்டுரை தெளிவாகக் கூறுகிறது.

'அறிவியல் அரங்கம்' என்னும் தொடரில் 'இரத்தம் 'தருவோம்' 'அலைகடல் ஓய்வதில்லை' ஆகிய இரு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

வேளாண்மை, கால்நடை மேம்பாடு பற்றிய கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

கல்வெட்டில் சமையல் குறிப்புகள் — நல்ல ஆராய்ச்சிக் கட்டுரையாகும்.

'அஞ்சல் தலைகளில் அன்னைத் தமிழகம்' என்ற 'கட்டுரைதான் அட்டை சொல்லும் செய்தி!


தமிழரசு

மலர் 8 இதழ் 18

16—3—1978


### உள்ளே...


காலம் மலர்ந்தது .. .. 2

இணைப்புப் பாலம் .. .. 4

அண்ணா எனும் இலக்கியவாதி 7

அலைகடல் ஓய்வதில்லை .. 10

கல்வெட்டில் சமையல் குறிப்புகள் .. .. 11

புதுமைத் தமிழகம் மலர .. 17

பயிர்களுக்கு நுண்ணூட்டங்கள் தேவையா? .. 21

இரத்தம் தருவோம் .. .. 24

இராஜேந்திர பிரசாத் வாழ்விலே 27

தாய்நாடு காக்கத் தயாராகிறார்கள் 29

சோளம் விதைக்கையிலே .. 33

நீரிழிவு நோய் உணவு முறைகள் 37

பத்திரிகையாளர் இங்கே உருவாகிறார்! .. 41

அஞ்சல் தலைகளில் அன்னைத் தமிழகம் .. .. 45

# காலம் மலர்ந்தது!



## முதல்வரின் முழக்கம்

தமிழ்நாட்டவர்கள் சேர, சோழ பாண்டியர் காலத்திலிருந்து வீரப்பரம்பரையினராகத் திகழ்ந்து வருகிறார்கள் என்பதை வரலாறு தெள்ளத் தெளிவாகச் சொல்லி வருகிறது.

மனிதன் என்று பிறக்கின்றானோ அன்றே அவனுக்கு மரணம் என்ற ஒன்று இருக்கிறது என்பது உறுதியாகி விடுகிறது. உலகத்தில், தோன்றுவது மறையும்; வளருவது வாடும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தியத் துணைக்கண்டத்தில் குறிப்பாக தென்னிந்தியாவில்-தமிழகத்தில் இளைஞர்கள் மிகப் பெரிய அளவில்-ஆயிரக்கணக்கில் இலட்சக்கணக்கில் இராணுவத்தில் சேருவதற்காகத் திரண்டு வந்திருப்பது - மகிழ்ச்சிக்குரியதாகும். வீரத்திற்குத் தகுதியுடையவர்களாக அவர்கள் தங்களை ஆக்கிக் கொள்ள முன் வந்திருப்பது போற்றுதலுக்குரியது.

இராணுவத்துக்கு ஆள் எடுப்பது, கூலிக்கு ஆள்பிடிக்கும் வேலை என்ற கருத்து ஒரு காலத்தில் நிலவி வந்தது. இராபர்ட் கிளைவினால் உருவாக்கப்பட்ட படை முதலில் எதற்காக ஏற்பட்டது என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்தியாவிற்கு, வியாபாரம் செய்வதற்காக வந்த ஆங்கிலேயர்கள்-நமது நாட்டை வியாபாரச் சந்தையாக்கிக் கொண்டார்கள்; தங்களது வியாபாரப் பணிக்காக ஒரு சில வீரர்களைத் துணையாக வைத்துக் கொண்டார்கள்; பின்னர் சிறிது சிறிதாக ஒரு படையை உருவாக்கினார்கள்; முதன் முதலில் வங்காளத்திலே படையைத் துவக்கிப் பின்னர் விக்டோரியா ராணியின் காலத்திலே இந்தியத் துணைக் கண்டத்தையே ஆளுகின்ற தகுதியுடையவர்களாகத் தங்களை ஆக்கிக் கொண்டார்கள். அப்போது நமது நாட்டிலிருந்தே வீரர்களைத் தேர்ந்தெடுத்து நம்மை மிரட்டி வந்தார்கள்-அடிமைப்படுத்தி வந்தார்கள் என்ற வரலாற்றினை நீங்கள் நினைவுகொள்ள வேண்டும்.

அவர்களிடமிருந்து 1947-ல் நாடு விடுதலை பெற்ற பிறகு 1950-ல் நாடு குடியரசாக மலர்ந்த பிறகு-குடியரசுத் தலைவரின் ஆட்சி தொடர்ந்தது; இன்று முப்படைத் தளபதிகள் இருக்கிறார்கள். அவர்கள் அந்நியர்களல்லர்-இந்தியத் துணைக் கண்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை நாம் நினைவு கொள்ள வேண்டும்.

தமிழகத்தில், சமீபத்தில் உருவான புயல்-வெள்ளம் ஆகியவற்றினால் ஏற்பட்ட சேதங்களை நீக்குவதற்காக, தமிழக அமைச்சரவை வேண்டுகோள் விடுத்தபோது, இராணுவ வீரர்கள், நண்பர்களைப் போல விளங்கி, பாதுகாப்புச் செய்தார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த நாட்டில் கண்ணியத்தை. கடமையை - கட்டுப்பாட்டைக் காப்பாற்றும் பொறுப்பு இராணுவ வீரர்களுக்கு இருக்கிறது. உலக நாடுகளின் மத்தியில் நாம் உயர்ந்து விளங்க-நமது நாட்டை எதிரிகளிடமிருந்து காக்க-நமது நாட்டில் அமைதி நிலவும் என்ற உத்தரவாதத்தை நல்க-வீரர்கள் வாய்ப்பளிக்கப்படுகிறார்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

1947-க்குப் பின் ஏற்பட்ட பாகிஸ்தான் போராட்டத்திலே—'போர்' அல்ல அது, அதனால் தான் போராட்டம் எனக் குறிப்பிடுகிறேன்-அப்போது, காஷ்மீரிலே-கோவாவிலே நமது இராணுவ வீரர்கள் செய்த தொண்டு மகத்தானது. 1971-ஆம் ஆண்டில் பங்களாதேஷ் விடுதலையடைவதற்கு-இந்திய இராணுவம்தான் உதவி செய்தது என்று கூற வேண்டும். சமாதானப் படை தேவை என்று உலகநாடுகளின் மன்றம் தீர்மானம் செய்தபோது நமது இந்தியத் துணைக் கண்டத்து இராணுவ வீரர்கள் வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று காத்தார்கள்; போரைத் தடுக்க உதவினார்கள்.

அந்நியர் ஆட்சியின்போது இராணுவத்துக்கு ஆள் சேர்த்த விதம் வேறு; தற்போதுள்ள விதம் வேறு. இராணுவத்திற்கு ஆள் எடுப்பதில், தமிழகத்தவர்களுக்கு எடை, உயரம் போன்றவைகளில் சில விதி விலக்குகள் அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தை, நான் முதலமைச்சர் பதவி ஏற்றவுடன் தெரிவித்தேன். என்னுடைய வேண்டுகோளை ஏற்று, இங்குள்ள இராணுவ அதிகாரிகள், தங்களது மேலதிகாரிகளுக்குத் தொடர்பு கொண்டு, இந்த வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தமிழக அரசின் சார்பில் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இராணுவ வீரர்கள், தங்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்றுத் திரும்பும்போது, மத்திய அரசும், மாநில அரசும் அவர்களுக்கு உதவுகின்றன. நிதிநிலை அறிக்கைகளை உருவாக்கும்போது, இராணுவ வீரர்களுக்கெனச் சில திட்டங்களைத் தீட்டுகின்றன; அவர்களுக்கு எந்தெந்த வகையில் உதவி செய்ய முடியுமோ-எங்கெங்கே அவர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தர முடியுமோ அவைகளை எல்லாம்

செய்து தருகின்றன. ஆளுநர் தலைமையில் உள்ள குழு, ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களின் நலனில் அக்கறை செலுத்துகிறது.

நாட்டின் மானத்தைக் காக்கும் தொண்டில்-இராணுவ வீரர்கள் ஈடுபட்டிருக்கின்றனர்; அவர்கள் எல்லை ஓரத்தில் இருந்து நாட்டைக் காத்து வரும் முயற்சியில்தான்-நாம் இங்கே வீடுகளில் நிம்மதியாக இருக்கிறோம்; வீதிகளில் பயமின்றி உலவுகிறோம்.

காலையில் நன்றாக இருக்கும் இளைஞன் ஒருவன் மாலையில் மரணம் அடைகிறான். ஸ்கூட்டரிலே செல்லும்போது லாரி மோதி இறந்து விடுகிறான். இப்படி மரணம் திடீரென்று வந்து விடுகிறது. எனவே அந்த உயிர் நாட்டைக் காக்கும் பணியில் போவது பாராட்டுக்குரியது. இராணுவ வீரர்களின் உயிர் பிரியும்போது அவர்கள் அநாதைகளாவதில்லை. எந்தத் தொண்டும் செய்யாமல் ஓர் இராணுவ வீரன் மடிவதில்லை.

1971-ஆம் ஆண்டிலே யுத்தம் நடைபெற்ற போது இங்கே திரை அரங்குகளில் திரைப்படம் ஓடவில்லையா? அலுவலகங்களில் அலுவல்கள் நடைபெறவில்லையா? அமைச்சர்கள் தங்கள் கடமைகளை ஆற்றவில்லையா? அவையெல்லாம் எப்படி முடிந்தது? இங்கே உள்ள அதிகாரிகளின் பணியினால் மட்டுமல்ல-அங்கே இருந்த இராணுவ வீரர்கள் போராடியதன் விளைவாக-இங்கே நாம் நிம்மதியாக உலவ முடிந்தது; மக்கள் அமைதியாக வாழ்க்கை நடத்த முடிந்தது. ஆலைகள் தடையின்றி ஓடிக்கொண்டிருந்தன. இதற்கெல்லாம் காரணம் இராணுவ வீரர்கள் ஆற்றிய கடமை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இன்றைக்கு இங்கே அகில இந்திய அளவில் இராணுவத்திற்கு ஆள் எடுக்கப்படுகிறது. இந்தியாவிலேயே இதுவரை இவ்வாறு நடந்ததில்லை. இதுதான் முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலுமிருந்து தமிழகத்திற்கு மக்களை வரவழைத்துத் தேர்ந்தெடுக்கும் முறை செயல்படுத்தப்படுகிறது.

ஒருவகையில் எனது நீண்ட கால ஆசை-பல வருட எண்ணம் இன்றைக்கு நிறைவேறுகிறது. ஒருமுறை படப்பிடிப்பிற்காக நான் காஷ்மீர் சென்றிருந்த போது-அங்கே என்னைச் சந்தித்த இராணுவ வீரர் ஒருவர்,



"தமிழகத்திலிருந்து இராணுவத்திற்கு வீரர்கள் அதிகமாக வருவதில்லையே, ஏன்?" என்று கேட்டார்.

அப்போது நான், "காலம் வரும்" என்று அவருக்குப் பதில் சொன்னேன். அந்தக் காலம் இப்போது தான் மலர்ந்திருக்கிறது.

எனக்கு 20 வயதிருந்தபோது, நான் இராணுவத்தில் சேருவதற்கு ஆசைப்பட்டேன். எனக்கு அந்த வாய்ப்புக் கிடைக்காமல் போய்விட்டது; எனக்கு வாய்ப்புக் கிடைத்திருந்தால் நான் எப்படி யிருந்திருப்பேனோ எனக்குத் தெரியாது-இன்று உயிருடன் இருந்திருப்பேனோ என்னவோ! ஆனால் நான் நிம்மதியாக இருந்திருப்பேன் என்பது மட்டும் உறுதி.

இராணுவத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் தமிழ்நாட்டு இளைஞர்கள், சேர, சோழ, பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆதலால் வீரத்திலும் தீரத்திலும் துணிவிலும் யாருக்கும் பின்தங்கியவர்கள் அல்லர் என்பதைக் காண்பிக்க வேண்டும்: வெற்றி வாகை சூடுவதற்கு உரியவர்கள் என்பதை நிரூபிக்க வேண்டும். வெற்றி பெறுங்கள்! நாட்டுக்குப் பெருமையை ஏற்படுத்துங்கள்! தமிழகத்திற்கு உயர்வு தேடித் தாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*(1-3-'78 அன்று பல்லாவரத்தில் நடைபெற்ற அனைத்திந்திய இராணுவ ஆள் சேர்ப்பு விழாவில் முதல்வர் ஆற்றிய உரையின் சில பகுதிகள்).*

சிந்தனை செய்யும் தனித்திறன் காரணமாகவே மனிதன் உயர்ந்தவனாகக் கருதப்படுகிறான். சிந்தனையால் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை. மனிதனாகப் பிறந்தவன் கட்டாயமாகச் சிந்திக்க வேண்டும். சிந்திக்கச் சிந்திக்கத்தான் மனிதனுடைய எண்ணங்கள் உரிய உருப் பெற்றுச் சிறப்படையும். சிந்திப்பது மனிதனுடைய தனி உரிமை! சிந்திக்கத் தெரிந்தவனே மனிதன்!

—ஐன்ஸ்டைன்

# இணைப்புப் பாலம்

## மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர்
## திரு. ஆர். எம். வீரப்பன்



செய்தி-மக்கள் தொடர்புத் துறை, அரசுக்கும் பொதுமக்கள் மற்றும் பத்திரிகை உலகுக்கும் இடையே தொடர்புகளை ஏற்படுத்தும் ஒரு பொதுத் தொடர்பு அமைப்பாக இயங்கி வருகிறது. அரசின் கொள்கைகள், திட்டங்கள், செயல்கள், சாதனைகள் ஆகியவை பத்திரிகைகளுக்கான செய்திக் குறிப்புகள் மற்றும் அறிவிப்புகளாக இத்துறையின் மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. பொது மக்களின் குறைகளை, தேவைகளை அரசுக்கும், அரசின் நிர்வாகத் துறைகளுக்கும் எடுத்து விளக்கும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறு, அரசின் கண்ணாகவும் காதாகவும் இத்துறை விளங்கி வருகிறது.

அரசின் பல்வேறு துறைகளும், அரசின் கீழுள்ள பல்வேறு கழகங்கள், வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவைகளும் தருகின்ற விளம்பரங்கள் அனைத்தும் இந்தத் துறையின் வாயிலாகப் பத்திரிகைகளுக்கு ஒருமுகப்படுத்தப்பெற்று வழங்கப்படுகின்றன. மற்ற அரசுத் துறை விளம்பரங்களை வெளியிடும் ஒரு சாதனமாக இயங்குவது மட்டுமல்லாமல், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தானே பல விளம்பரங்களைத் தயாரித்து வெளியிடுகிறது. இந்த விளம்பரங்கள் பொதுவாக அரசின் கொள்கைகளை, திட்டங்களைப் பொது மக்களுக்கு விளக்கும் முறையில் அமைகின்றன.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விழாக்களையும், தேசியப் பெருந்தலைவர்களின் பிறந்த நாள், நினைவு நாள் கூட்டங்களையும் நடத்தி, பொதுமக்கள் நாட்டுப் பணியில் ஈடுபாடு கொள்ளத் தக்க வகையிலும், நாட்டுக்காக உழைத்தவர்களை அறிந்து பாராட்டும் வகையிலும் இத்துறை ஊக்கமளித்து வருகிறது.

நமது மாநிலத்திலும், பிற மாநிலங்களிலும் நடைபெறுகிற பொருட்காட்சிகளில் அரசின் சார்பாக இத்துறை பங்குபெற்று, அரசின் பல்வேறு துறைகளின் செயற்பாடுகளையும் சாதனைகளையும் விளக்குகிறது. அரசுக்கும், உள்ளாட்சி அமைப்புக்களுக்கும் சொந்தமான பொதுவிடங்களில் தனிநபர்களோ, தனி நிறுவனங்களோ பொருட்காட்சி நடத்த



அனுமதி அளிப்பதில்லையென்று அரசு அண்மையில் முடிவெடுத்துள்ளது. மேலும், தனியார் மற்றும் தனி நிறுவனங்கள் நடத்தும் பொருட்காட்சிகளில் அரசுச் சார்பில் பங்கு கொள்வதில்லை என்ற முடிவும் எடுக்கப்பட்டுள்ளது. எனினும், அரசின் முன்னனுமதி பெற்று, பொது இடங்களில் உள்ளாட்சி அமைப்புகளும், அங்கீகாரம் பெற்ற தொழில் வர்த்தக நிறுவனங்களும் பொருட்காட்சிகளை நடத்தலாம்.

**அரசின் நல்வாழ்வுத் திட்டங்களையும், குடிப்பழக்கத்தினால் விளையும் கேடுகளையும், தீண்டாமை ஒழிப்புப் பற்றியும் பொது மக்களுக்கு எடுத்துக்கூற மாவட்டங்களிலும் தலைநகரிலும் 1978-79-ஆம் ஆண்டில் 100 இசை மற்றும் நாடக நிகழ்ச்சிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.** இந்நிகழ்ச்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட கலைக்குழுவினரால் நடத்தப் பெறும்.

சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கம், காந்தி இல்லம், இராஜாஜி மண்டபம், சீரணி அரங்கம், வள்ளுவர் கோட்டம், வேலூரிலுள்ள அண்ணா கலை அரங்கம் ஆகியவை இத்துறையின் மேற்பார்வையில் உள்ளன. பொதுமக்களுக்கான வசதிகளைப் பெருக்க, கலைவாணர் அரங்கத்துக்கு அண்மையில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இப்போது அரங்கம் புதுப்பொலிவுடன் விளங்குகிறது. வேலூர் அண்ணா கலை அரங்கமும் இது போன்றே புதுப்பிக்கப்பட்டு விரைவில் திறக்கப்படவிருக்கிறது. வள்ளுவர் கோட்ட அரங்கில் ஒலியமைப்பினைச் சீராக மாற்றி, செம்மைப்படுத்த அரசு அண்மையில் ரூ. 2.20 இலட்சம் அனுமதி வழங்கியுள்ளது. இதற்கான வேலை விரைவில் தொடங்கும்.

''தமிழரசு'' இதழ், திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி, தமிழ்நாடு திரைப்படப் பிரிவு ஆகியவை இத்துறையின் மேற்பார்வையில் நடத்தப்பட்டு வருகின்றன.

**''தமிழரசு''**

''தமிழரசு'' இதழ் (தமிழ்-ஆங்கிலம்) அரசின் அதிகாரப் பூர்வமான ஒரே இதழாகும். இந்து அறநிலையத் துறையால் வெளியிடப்படுகிற ''திருக்கோயில்'' எனும் பத்திரிகையைத் தவிர, அரசாங்கத்தின் மற்றப் பத்திரிகைகளையெல்லாம் இணைத்து ''தமிழரசு' 1970-ஆம் ஆண்டு ஜூலையில் துவக்கப்பட்டது.




**திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி**

திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி 1948-ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, கணிசமாக வளர்ச்சி பெற்று வந்துள்ளது. திரைப்படத் தயாரிப்பு சம்பந்தப்பட்ட அனைத்துப் பிரிவுகளிலும் பயிற்சியளித்து, தேர்வு நடத்தி வெற்றி பெற்றோர்க்குச் சான்றிதழ் வழங்குதல், கல்வியை வளர்ப்பதிலும் கலையின்பத்தை நல்குவதிலும் திரைப்படத்திற்குள்ள சக்தியை மக்களுக்கு உணர்த்துதல், திரைப்படத் தொழில் பற்றிய ஆய்வு நிகழ்த்துதல் ஆகியவை இக்கல்லூரியின் குறிக்கோள்களாகும். அரசு அலுவலர்களையும், திரைப்படத் தொழில் தொடர்புடைய அரசுச் சார்பற்ற தொழில் நுட்ப வல்லுநர்களையும் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்று இக்கல்லூரிக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கி வருகிறது. படப்பிடிப்பு, ஒலிப்பதிவு மற்றும் ஒலிப்பொறியியல், படச்சுருள் கழுவுதல், படம் இயக்குதல், திரைக்கதை வசனம் எழுதுதல், படத்தொகுப்பு, நடிப்பு ஆகியவற்றில் இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. தொலைக்காட்சிக்கான திரைக்கதை வசனம் எழுதுதல், படப்பிடிப்பு, ஒலி பொறியியல், ஆகியவற்றில் பயிற்சியளிக்கும் திட்டமொன்று ஆய்வில் உள்ளது. மேலும், ஒப்பனைக் கலையில் ஒரு சான்றிதழ்ப் பயிற்சி (டிப்ளமா) பாடப்பிரிவு துவக்குவதற்கும் ஒரு திட்டம் உள்ளது. இக்கல்லூரியில் பயிலும் மாணவர்கள் திரைப்படத் தயாரிப்பு நிறுவனங்களிலும், ஆய்வுக் கூடங்களிலும் தொலைக்காட்சி நிலையங்களிலும் வேலைவாய்ப்புப் பெறலாம்.

1977-78-ஆம் ஆண்டில் படச்சுருள் காப்பகம் ஒன்று நிறுவுவதற்காக ரூ. 1.40 இலட்சம் அரசால் வழங்கப்பட்டுள்ளது. பல நல்ல தரமான பழைய படங்கள் பழுதுபட்டதாலும், பாதுகாக்கப்படாததாலும் சேதமடைந்துவிடுகின்றன. ஆகவே, அப்பழைய படங்களை விலைக்கு வாங்கியும் இலவசமாகக் கிடைத்தால் அவற்றையும் சேர்த்து, வருங்காலத்தினருக்காகப் பாதுகாத்து வைக்கும் நோக்குடன் இக்காப்பகம் அமைக்கப்படுகிறது.

இக்கல்லூரியிலுள்ள படப்பிடிப்பு வசதிகளும், படப்பிடிப்புத் தளமும், படம் தயாரிக்கும் தனியாருக்கு வாடகைக்கு வழங்கப்படுகின்றன. இப்படி வழங்குவதால், அரசுக்கு வருவாய் கிடைப்பதுடன் புகழ்பெற்ற படத் தொழில் வல்லுநர்களின் செயல் திறன்களை நேரில் அறியவும், அவர்களுடன் படப்பிடிப்பில் பங்கு கொள்ளவும் மாணவர்களுக்கு வாய்ப்பும் கிடைக்கிறது. படத் தயாரிப்பாளர்களுக்குத் தேவைப்படும் இப்படப்பிடிப்புத் தளம், முழுமையாகப் பயன்படுத்தப்படுவதற்குரிய வகையில் வசதிகளைப் பெருக்குவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

**குடிப்பழக்கத்தினால் விளையும் கேடுகள், தேசிய ஒருமைப்பாடு, நாட்டுப்பற்று போன்ற தேசிய அளவில் நலன்தரும் பொருள்கள் பற்றிய தரமான படங்கள் தயாரிப்பதை ஊக்கப்படுத்துவதற்காக,**



இப்படிப்பட்ட தமிழ்ப் படம் ஒவ்வொன்றுக்கும் ஒரு இலட்சம் ரூபாய் வீதம் ஐந்து தமிழ்ப் படங்களுக்கு ஆண்டு தோறும் உதவித் தொகை வழங்க அரசு தீர்மானித்துள்ளது. முதற்கட்டமாக, 1976-77-ல் தயாரிக்கப்பட்டு, தணிக்கை செய்யப்பட்ட படங்கள் இது தொடர்பான தேர்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இதற்கென அமைக்கப்படும் தேர்வுக்குழு, அரசின் நிதி உதவியைப் பெறத் தக்க தயாரிப்பாளர்களின் தகுதிகளை ஆராய்ந்து, அரசுக்கு ஆலோசனை வழங்கும்.

மேலும் சிறந்த படங்களுக்கும், சிறந்த நடிகர்கள், சிறந்த படத்தொழில் நுட்ப வல்லுநர்கள் ஆகியோருக்கும் பரிசு வழங்கும் திட்டத்தை மீண்டும் செயற்படுத்துவது குறித்தும் அரசு ஆலோசித்து வருகிறது.

## தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மாநிலத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்துப் படமாக்கி, செய்திப் படங்களாக மத்திய அரசின் திரைப்படப் பிரிவின்மூலம் வெளியிடுகிறது.

இத்துடன் அரசின் பல்வேறு துறைகளின் செயல்களை, கருத்து விளக்கப்படங்களாக (டாக்குமெண்டரி) எடுத்து இத்திரைப் படப் பிரிவு வெளியிடுகிறது. பல்வேறு அரசுத் துறைகளுக்கான கருத்துவிளக்கப்படங்களை (டாக்குமெண்டரி) தயாரிப்பதற்காக 1978-79 ஆம் ஆண்டில் இரண்டு இலட்ச ரூபாய் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்ய முடிவெடுக்கப் பட்டுள்ளது.

## தமிழ்நாடு திரையரங்குக் கழகம்

1972-ஆம் ஆண்டு துவக்கப் பட்ட தமிழ்நாடு திரையரங்குக் கழகம் பொறுப்பு வரையறுக்கப் பட்ட முற்றிலும் அரசு சார் நிறுவனமாகும். தமிழ்நாட்டில் பகுதி நிலைத் திரையரங்கங்களைக் கட்டவும், நிலையான திரையரங்கங்களாக அவற்றை மாற்றி அமைத்திடவும், நிலையான புதிய திரையரங்கங்களைக் கட்டவும், அத்தகைய திரையரங்கங்களுக்குத் தேவையான கருவிகள் முதலியவற்றை வாங்கவும் நிதியுதவியளிப்பதே இக்கழகத்தின் தலையாய நோக்கமாகும்.

திரையரங்கம் ஒன்றுக்கு, கடன் உதவியின் உச்ச வரம்பு ரூ. 1.20 இலட்சமாகும். தமிழ்நாடு திரையரங்குக் கழகம் இது வரையில் ரூ. 93.90 இலட்சம் கடன் தொகை அனுமதித்துள்ளது. அத்தொகையில் ரூ. 75.30 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

கிராமப் புறங்களில் திரையரங்கங்களைக் கட்டும் பணியை ஊக்குவிப்பதில் திரையரங்குக் கழகம் வெற்றி கண்டுள்ளது.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை அரசையும் பொதுமக்களையும் இணைக்கும் ஓர் இணைப்புப் பாலமாக இயங்கி வருகிறது எனலாம்.

(சட்டப் பேரவையில் வைக்கப்பெற்ற செய்தி - சுற்றுலாத்துறைக் கொள்கைக் குறிப்பிலிருந்து தொகுக்கப்பெற்றது.)


தமிழரசு

1-4-'78 இதழ்

கைத்தறிச் சிறப்பிதழாக மலரும்!




# அண்ணா எனும் இலக்கியவாதி

4

—பி.சி.கணேசன்

கம்ப இராமாயணத்தைஎரிக்க வேண்டுமென்று பெரியார் அவர்கள் ஓர் இயக்கத்தை நடத்தினார்கள். அந்த இயக்கம் தேவையானதா, இல்லையா என்பது இந்தக் கட்டுரைத் தொடரில் நான் எடுத்துக் கொண்டுள்ள விஷயத்திற்குச் சம்பந்தம் இல்லாதது. ஆனால் அந்தச் சமயத்தில் பெரியாரின் தளபதியாக விளங்கிய அண்ணா, அவருடைய இயக்கத்திற்கு வலுச் சேர்க்க வேண்டுமென்பதற்காகக் ''கம்ப ரசம்'' என்கிற தலைப்பில் தொடர் கட்டுரை ஒன்றை எழுதினார். அது பின்னர் நூல் வடிவிலும் வெளிவந்தது. கம்ப ரசம் டோஸ்—1, டோஸ்—2 என்று எழுதினார். கம்பனை விமர்சித்து 'நீதி தேவன் மயக்கத்தில்' அவர் வெளிப்படுத்திய இலக்கியத் தரம் 'கம்ப ரசம்' என்கிற கட்டுரைத் தொடரில் நிச்சயமாக இருக்கவில்லை. ஏதோ வாதம் செய்ய வேண்டும் என்பதற்காகத் தன்னுடைய சாமர்த்தியத்தை எல்லாம் காட்டிக் கம்ப ரசம் எழுதினாரே தவிர, அதை ஓர் இலக்கியத் திறனாய்வு என்று விவரம் தெரிந்த எவரும் ஏற்றுக் கொள்ள முடியாது. மேல் நாட்டு இலக்கியங்களில் 'ஆபாசம்' இடம் அறிந்து அளவோடு கையாளப்பட்டு இருப்பது போலவும், கம்பன் தேவையில்லாத இடங்களில் எல்லாம் வேண்டுமென்றே வலிந்து 'ஆபாச'த்தைப் புகுத்தி இருப்பது போலவும் அண்ணா தொடர்ந்து தன்னுடைய வாதங்களைக் கம்ப ரசத்தில் அடுக்கி இருக்கிறார்.

இதைப் பற்றி நான் அவரிடம் குறிப்பிட்ட போது அவருக்கே உரிய பாணியில் வெற்றிலை பாக்கைக் குழையக் குழையக் குதப்பியபடி, ''கம்ப ரசம் ஓர் இலக்கிய விமர்சனம் என்று உனக்கு யார் சொன்னது?'' எனக் கேட்டு விட்டு மீண்டும் சிரிக்கலானார்.

''பிறகு, அது என்ன?'' என்று நான் கேட்டேன்.

''பிரச்சாரம்'' என்றார்.

''பிரச்சாரத்திற்காக ஒரு மா பெரும் இலக்கியம் குறித்து மக்களின் கவனத்தைத் திசை திருப்பலாமா?''—இது என்னுடைய கேள்வி.

''ஏற்கெனவே திசை திரும்பிப் போன மக்களைச் சரியான திசைக்குக் கொண்டு வர இதுவும் ஒரு வழி''—இது அவருடைய பதில்.

''கம்பனில் நீங்கள் எதை ''ஆபாசம்'' என்று சொல்லுகிறீர்களோ, அதே 'ஆபாசம்' மேல் நாட்டு இலக்கியங்களிலும் நிறைய இருக்கிறதே?''

''ஒரு கட்சிக்காக வாதாடும் வக்கீல் எதிர்க் கட்சி நியாயங்களைப் பேசுவதில்லை —தெரிந்தாலும்! அவனுக்கு எவை சாதகமானவைகளோ அவற்றைச் சாதகமான கோணத்தில் வைத்துக் காட்டும் போது தான் வாதத்தில் வெற்றி பெறமுடியும். ''கம்ப ரசம்''; எடுத்துக் கொண்ட கட்சிக்காக ஒரு வக்கீல் நிகழ்த்தியுள்ள வாதம். அந்த வக்கீலின் திறமை பற்றி உன்னுடைய அபிப்பிராயம் என்ன என்பது பற்றி எனக்குக் கவலை இல்லை. என் கட்சி ஜெயித்ததா? தோற்றதா? அதைச் சொல்!'' என்றார்.

இந்த வாதம் அத்தோடு முடிவுக்கு வந்துவிட்டது. இதிலிருந்து அண்ணாவைப் பற்றி நான் ஒரு மகத்தான உண்மையைத்தெரிந்து கொண்டேன். கம்பனிடம் அவர் அளவற்ற மரியாதைகொண்டிருந்தார். கம்பனை ரசித்தார். கம்பனின் பாத்திரப் படைப்பை வியந்து பாராட்டினார். கம்பனின் சொல் வளம் குறித்துத் தன்னுடைய பிரமிப்பை அவர் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தி இருக்கிறார்.

மற்றொரு சமயம் கம்பனைப் பற்றி நான் அவரிடம் பேசிக் கொண்டிருந்த போது அவர் மனம் விட்டுச் சொன்னார்: ''தமிழ் மொழியில் நல்ல சொல்லாட்சித் திறம் (diction) உனக்குக் கிடைக்க வேண்டுமானால் கம்ப இராமாயணத்தையும், திருவாசகத்தையும் நீ ஊன்றிப் படிக்க வேண்டும்.''

அப்போதுதான் கம்பனிடம் அண்ணாவுக்கு இருந்த ஈடுபாட்



டினை என்றால் சரியாகப் புரிந்து கொள்ள முடிந்தது. அதற்காகவே கம்ப இராமாயணத்தை ஆர்வத்தோடு நான் படிக்க ஆரம்பித்தேன். பல கம்ப இராமாயண பாடல்களும் என்னை அறியாமலே எனக்கு மனப்பாடம் ஆயின.

அதற்குப் பிறகு அண்ணாவைச் சந்தித்த போது கம்பனின் பெருமையை அவரிடத்தில் நான் பேசத் தொடங்கினேன். அவர் சிரித்துக் கொண்டே சொன்னார்! "ஒரு முறை கம்ப இராமாயணத்திற்குள் நுழைந்து விட்டோமானால் மறுபடியும் அதிலிருந்து வெளியே வருவது என்பது முடியாத காரியம். நம்முடைய தமிழ்ப் பெரியவர்கள் சில பேர் கம்பனுக்கு இப்படித்தான் அடிமையாகிப் போனார்கள். நீயும் உன்னை ஒரு கம்ப இராமாயண உபந்நியாசகராக மாற்றிக் கொண்டு விடாதே!"

ஆக, கம்பனின் பெருமையினையும் தமிழ் இலக்கியத் துறையில் கம்ப இராமாயணத்தின் இடத்தினையும் அண்ணா ஒருபோதும் குறைத்து மதிப்பிட்டது கிடையாது. இது சம்பந்தமாக அவர் கூறிய இன்னொரு கருத்தினையும் இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவது அவசியம் என்று கருதுகிறேன்.

'கம்பன் ஓர் தெய்வீகவாதி என்பதை விட அவன் ஓர் இலக்கியவாதி என்பது தான் மெய்யான விஷயமாகும். ஏன் எனில் அவன் வெறும் தெய்வீகவாதியாக இருந்திருந்தால் தெய்வீகத் தன்மை ஏற்றிச் சொல்லப்பட்ட வால்மீகி இராமாயணத்தை அப்படியே தமிழில் எழுதி இருக்க வேண்டும். அவன் ஓர் இலக்கியவாதியாக இருந்த காரணத்ினால் தான் இலக்கியச் சிறப்புக்குஎன்னென்ன செய்ய வேண்டுமென்று கருதினானோ அந்த மாற்றங்களையும் செய்து கம்ப இராமாயணத்தைப் படைத்தான்'.

இதுவும் அண்ணாவின் கருத்துக்களில் ஒன்று.

அண்ணா ஏற்றுக் கொண்ட அரசியல் பணிகளுக்கு ஏற்பச் சில சந்தர்ப்பங்களில் இலக்கியச் சர்ச்சைகளில் நிலை எடுத்திருந்தாலும் அடிப்படையில் எல்லாப் பேரிலக்கியங்களுக்கும் இதய பூர்வமான விசுவாசியாகவே அவர் விளங்கினார். அவரோடு நெருங்கிப் பழகி உரையாடும் வாய்ப்பைப் பெற்ற அனைவரும் இந்த உண்மையினைத் தெள்ளத் தெளிவாக உணர்வார்கள்.

—தொடரும்.



## சுற்றுலா மேம்பாட்டுக்கு...

ஏராளமான சுற்றுலா மையங்களையும் எழில் குலுங்கும் இடங்களையும் தமிழகம் கொண்டு விளங்குகிறது. வான் முட்டும் கோபுரங்களைக் கொண்ட வழிபாட்டு ஆலயங்களும், அற்புதச் சிற்பக் கலைக் கூடங்களும், வண்ணக் களஞ்சியங்களாக அருவிகளும், அடவிகளும், வாழும் வன விலங்குகளும், கோல எழில் கொழிக்கும் குறிஞ்சி நகர்களும், நலப் புகலிடங்களும், நெஞ்சைக் கவரும் நீண்ட கடற்கரைப் பகுதிகளும், வளம் கெழுமிய நம் தமிழகத்தை அலங்கரிக்கிறது.

மேலை நாட்டினரைப் போலவே சுற்றுலாப் பலன்களையும் அனுபவ வளர்ச்சியையும் நம் நாட்டினரும் பெற வேண்டும். மாவட்டந் தோறும் சுற்றுலா மையங்களை ஏற்படுத்தி வார விடுமுறைகளை நமது மக்களில் எல்லா நிலையினரும் அந்த மகிழ்விடங்களுக்குச் செல்வதன் மூலம் ஓய்வைப் பயனுள்ளதாக்கிக் கொள்ள வேண்டும். நம்மோடு ஒரு மாவட்டத்தில் பல ஆண்டுகளாக வாழ்பவர்களில் பலர் கூட இன்னொரு மாவட்டத்தின் சிறப்புக்களையோ இயல்புகளையோ கூட அறிந்துகொள்ளாமல் இருக்கின்ற நிலைமைகளை மாற்றவேண்டும். நாம் அறியாத இடங்கள், தெரியாத தலங்கள், விளம்பரப்படுத்தாமற் போன கலைக்கூடங்கள் என்று விடுபட்டுள்ள பல இடங்களை மக்களுக்கு அறிமுகப்படுத்தும் பணியையும் அரசு செய்யக் கருதியுள்ளது. சிற்பங்களைக் கொண்ட சிற்றூராகப் பத்து ஆண்டுகளுக்கு முன்வர் வெளி உலகிற்குத் தெரியாதிருந்த மத்திய பிரதேசத்திலுள்ள கஜுராஹோ சுற்றுலாத் துறையின் தொடர்பினால் இலட்சக்கணக்கான அயல் நாட்டுப் பயணிகளைக் கவரும் அழகு புரியாக இன்று அமைந்ததோடு ஆண்டுக்கு ரூ. 60 இலட்சம் வருவாயையும் ஈட்டித் தருகிறது. இதனால் சுற்று வட்டாரத்தில் பொது மக்களுக்குப் பெரும் பயன்களும் வாழ்க்கைக்கான வேலை வாய்ப்புக்களும் விளைந்துள்ளன. இந்த வகையில் இது வரை அறிமுகமாகாத தமிழகத்தில் உள்ள இடங்களைக் கண்டறிந்து சுற்றுலாத்துறை ஆவன செய்ய உள்ளது. அவ்வகையில் தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரத்தை அடுத்துள்ளதும் பேரறிஞர் அண்ணாவின் சிந்தை கவர்ந்த கடற்கரைப் பகுதியான பிச்சாவரத்தையும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஏலகிரியையும் தமிழகச் சுற்றுலாத் துறை மேம்படுத்த முற்பட்டுள்ளது.

# மூப்புக் கால உதவித் தொகை



வாழ வழியற்று, மரபுப்படியோ காப்பாற்று வதற்குக் கடமைப்பட்ட உறவினரற்று அனுதையான நிலையில் உள்ள முதியவர்களுக்குச் சமூகப் பாது காப்பு நடவடிக்கையாக அவர்களுக்கு உதவி அளிப் பதற்காக, ''மூப்புக் கால உதவித் தொகைத் திட்ட மொன்றை'' 1.4.1962 முதற்கொண்டு அரசு செயலுக்குக் கொண்டுவந்தது.

புகலற்ற நிலையில் குருடு, தொழுநோய், மன நோய், பக்கவாதம் அல்லது உறுப்பு இழப்பு இவை எதனுலாவது உழைத்துப் பிழைக்க முடியாத ஏலாமை நிலையில் 60 வயதும் அதற்கு மேற்பட்டும் உள்ளவர்களுக்கும், புகலற்ற நிலையில் 65 வயதும் அதற்கு மேற்பட்டும் உள்ளவர்களுக்கும் இத்திட்டத் தின் கீழ் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. கணவனும் மனைவியும் புகலற்றவர்களாய் இருந்து அவர்களுக்கு வேறு உறவினர் எவரும் இராவிட்டால், அவர்கள் இருவருக்கும் உதவித் தொகை அளிக்க இத்திட்டம் வகை செய்கிறது. அத்தகைய ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு 20 ரூபாய் உதவித் தொகை கொடுக்கப்படும்; இத்தொகை அரசுச் செலவில் பண அஞ்சல் மூலம் கொடுக்கப்படுகிறது.

''மூப்புக் கால உதவித் தொகைக்கான'' விண்ணப்பங்களைப் பரிசீலிப்பதற்குப் பின்பற்றப்படும் நடைமுறை கீழே விவரிக்கப்பட்டு உள்ளது:—

புகலற்றேர் இயல்பாக வசிக்கின்ற வட்டத்தின் தாசில்தாருக்குத் தங்கள் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும். விண்ணப்பங்கள் குறித்து விசாரணை நடத்தி சரிபார்த்த பின்னர், அந்த விண்ணப்பங்கள் மீது ஆணை வேண்டி தாசில்தார் தனது அறிக்கையை வருவாய்க் கோட்ட அதிகாரிக்கு அனுப்புவார். உதவித் தொகையை வழங்குவதற்கு வருவாய்க் கோட்ட அதிகாரியே பொருத்தமான அதிகாரி யாவார். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தத்தம் மாவட்டங்களில் இத் திட்டத்திற்கு மேற்பொறுப்பு வகிக்கிருர்கள்.

விண்ணப்ப நாளைப் பொறுத்து மூப்புக் கால உதவித் தொகை தற்போது வழங்கப்படுகிறது. இதனுல் அதிக வயதில் ஆதரவற்றவர்களாகி உதவித் தொகை கேட்டு விண்ணப்பிக்கும் சிலர் உரிய நேரத்தில் உதவித் தொகை பெற முடிய வில்லை. எனவே, மூப்புக் கால உதவித் தொகையை அனுமதிக்கும்போது 70 வயதும் அதற்கு மேற் பட்டும் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் அனைத்தும் (விண்ணப்ப நாள் எவ்வாருயிருப்பினும்) முதலில் முடிவு செய்யப்பட வேண்டும் என்றும், 65 முதல் 69 வயதுள்ளவர்களின் விண்ணப்பங்கள் அவை வரப்பெற்ற நாட்களையொட்டி முடிவு செய்யப்பட வேண்டும் என்றும் அரசு ஆணை இட்டுள்ளது. மாவட்ட உச்சவரம்பில் 1 சதவீதம் வரை ஆண்டொன்றுக்குக் குறைந்தது 10 பேர்கள் என்ற குறைந்தபட்ச அளவிற்குட்பட்டு மிகவும் தகுதியுள்ள வர்களுக்கு மூப்புக் கால உதவித் தொகை அனுமதிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக் கப்பட்டுள்ளது. 31-12-77 அன்றுள்ளபடி, மொத்தம் 60,820 பேர்களுக்கு உதவித் தொகை அளிக்கப்பட்டுள்ளது.

இந்த உதவித் தொகை பெற உரிமையுள்ள அனைவருக்கும் அத் தொகை அளிக்கப்படுவதற்காக நிதி ஒதுக்கீட்டினை உயர்த்தும் பொருட்டு, இந்த உதவித் தொகை பெறுபவர்களின் மொத்த எண்ணிக் கையை அவ்வப்போது அரசு மறுபரிசீலனை செய்து வருகிறது.



# அலைகடல் ஓய்வதில்லை!

**சி. டி. கணேசன்,**
**விரிவுரையாளர்,**
**பொறியியற் கல்லூரி,**
**கிண்டி,**

**"அலைகடல் ஓயட்டும். பிறகு குளிக்கலாம்'' என்று சொன்னானும் ஒருவன்! அலை எப்போது ஓயப் போகிறது! எப்பொழுது இவன் கடலில் குளிக்கப் போகிறான்!**

**ஓய்வு ஒழிவின்றி, இரவு பகலின்றி நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அலைகள் வீசிக் கொண்டிருக்கின்றன! இதைவிட அற்புதம் வேறு என்ன இருக்கிறது!**

கடல் அலைகளைக் காற்றலைகள் என்றும், கடல் ஏற்ற இறக்க அலைகள் என்றும், நில அதிர்வுப் பேரலைகள் என்றும் பல வகையாகப் பிரிக்கலாம். இவ் வகையான அலைகளின் தோற்றம், தன்மை முதலியன பற்றிச் சிறிது கவனிப்போம்.

காற்றின் உந்தும் சக்தியால் ஆழ் கடல் பரப்பில் சிறு அலைகள் தோற்றுவிக்கப்படுகின்றன. இப் பகுதியை ஆங்கிலத்தில் Fetch என்று கூறுகிறோம். இச் சிறு அலைகள் கரைகளை நோக்கி நாற்புறமும் செல்லும்போது கடலாழம் குறைவதால் பேரலைகளாக மாற்றம் பெறுகின்றன. கடலின் ஒரு குறிப்பிட்ட ஆழப் பகுதிக்கு இப் பேரலைகள் வரும்போது அதன் நீர்த் துளிகளின் வேகம், அலைகளின் வேகத்தையும் மிஞ்சிவிடுகின்றன. இந் நிலையில் பேரலைகளின் முறிவு ஏற்பட்டு தனது உள்ளடக்கிய மாபெரும் சக்தியை இரைச்சல் மூலமாகவும், வெண்மையான நுரைகள் மூலமாகவும் வெளிப்படுத்துகின்றன.

அலைகள் முறிவுறும்போது சராசரி கடல் மட்டம் முறிவுறும் அலைகளின் உயரத்தில் சுமார் 1.3 மடங்காகும். அலைகளின் வேகத்தை ஆழ் கடல் பகுதியில் அலைகளின் நீளத்தைக் கொண்டும், கரையோரப் பகுதிகளில் கடலாழத்தைக் கொண்டும் கணக்கிடலாம். அலைகள் கரை நோக்கி வரும்போது பல வித விதிகளுக்குக் கட்டுப்பட்டு மாற்றங்கள் பெறுகின்றன. கரையோரத்தில் அமைப்பிற்கு ஏற்றவாறும், கடலாழ நிலப்பரப்பின் தன்மைக்கு உகந்தும் திசைத் திருப்பம் அடைகின்றன. கரைகளை நோக்கி வரும் அலைகள் சில சமயம் செங்குத்தான கட்டுமான சுவர்கள் மீது மோதி பிரதிபலிக்கப்பட்டு திரும்புகின்றன. சில சமயங்களில் சுவர்களின் ஓரத்தில் சிதைவுற்ற அலைகளாக வளைவுறுகின்றன. சீரான பயணத்தில் இத்தகைய தடுமாற்றங்கள் ஏற்படும்போது அலைகள் தனது சக்தியை இழக்க நேரிடுகிறது.

பருவக் காலங்களில் சுழற்காற்றும் சூறாவளியும் உண்டாவதைப் பார்த்திருக்கிறோம். சுழற்காற்றின் மையத்தில் காற்றழுத்தக் குறைவு ஏற்பட்டு கடல் கொந்தளிப்பும் பேரலைகளும் உண்டாகின்றன. 1972ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இத்தகைய சுழற்காற்றும் பேரலைகளும் ஒரிசா கடற்கரையைத் தாக்கிமாபெரும் சேதத்தை விளைவித்தது. அகில இந்திய வானொலி நிலையம் முன்னெச்சரிக்கை விடுத்து உயிர்ச் சேதத்தைத் தடுத்தது.

சில சமயங்களில் ஆழ்கடல் பகுதிகளில் நில அதிர்ச்சி, எரிமலைகளின் சீற்றம், நிலச் சரிவு, போன்ற புவியியற் செயல்கள் நிகழ்வதுண்டு. அணுகுண்டுகள் வெடித்து சோதனைகள் நிகழ்த்தப்படுகின்றன. இச் செயல்களினால் ராட்சத அலைகள் உண்டாகக் கூடும். ஜப்பானிய மொழியில் Tsunamis எனப்படும் இவ்வலைகள் பசிபிக் கடற்பகுதியில் அடிக்கடி தோன்றுகின்றன.

சூரியன், சந்திரன் போன்ற கிரகங்களின் ஈர்ப்புச் சக்தியால் கடல் நீர் மட்டம் உயர்வதும், தாழ்வதும் ஒரு நாளுக்கு இரு முறை வீதமும், சில இடங்களில் ஒரு முறையும் ஏற்படுகின்றன. இவ்வாறான கடல் நீர் ஏற்ற இறக்கத்தைக் கடல் ஓதம் என்றும் ஆங்கிலத்தில் Tidal Waves என்றும் கூறுவர். உலகின் பல இடங்களில் உதாரணமாய், பிரான்ஸ், கனடா போன்ற இடங்களில் கடல் ஏறற இறக்க சக்தியைக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்கின்றனர். நம்நாட்டில் குஜராத் மாநிலத்தில் பவநகர் என்ற இடத்தின் கடற்கரையில் இத்தகைய மின் உற்பத்தி செய்யும் சூழ்நிலை ஏற்றவாறு அமைந்துள்ளது.

சில நாட்களுக்கு முன்பு சென்னைப் பட்டினப்பாக்கத்தில் கடல் அரிப்பு என்ற நிகழ்ச்சி அனைவருக்கும் பரபரப்பூட்டியது. கடல் அரிப்பு விபத்துகள் கேரளா கடற்கரையோரங்களில் மிகுந்து காணப்படுகின்றது. கடந்த சில ஆண்டுகளாகச் சென்னை இராயபுரம்கடற்கரை அரிக்கப்படுதலும் அடையாற்றில் பெரும் மணல் குவிக்கப்படுதலும் நடைபெற்று வருகின்றன. சென்னை நகரத்தின் வடிகாலான பக்கிங்காம் கால்வாய் மணற் குவியல்களால்அடைபட்டு கழிவுப் பொருட்களைத் தேக்கி சென்னையின் சுகாதாரத்தைப் பெரிதளவு பாதித்து விடுகின்றது.

எனவே, அலைகளின் வேகம், சக்தி, தன்மை, போக்கு இவற்றைப் புரிந்துகொண்டால் ஓரளவு அழிவிற்குத் தடையிடலாம். எதிர்காலத்தில் கடலோரப் பாதுகாப்பும், சீரமைப்பும் நீரியல் வல்லுநர்களால் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை. அலைகள் ஓய்வதில்லை ; ஆதலால் அலைகளின் இயக்கத்தை நாம் ஏன் நல்லதொரு ஆக்கச் சக்திக்குப் பயன்படுத்தக்கூடாது?

''மண்ணிற் பிறந்தார்
பெறும் பயன் மதிசூடும்
அண்ணலா ரடியார்
தினம் அமுதுசெய்வித்தல்''

—சேக்கிழார்.

என்று கடவுளுக்குப் படைக்கும் பல வகை நிவந்தத்தில் அமுது முக்கியமான இடத்தைப் பெற்று உள்ளது என்பதைக் காட்ட ஏராளமான இலக்கிய எடுத்துக் காட்டுக்கள் உள்ளன.

கோயில்களில் கடவுளுக்கு அமுது செய்வித்தல் நம் மக்களிடையே தொன்றுதொட்டு நிலவிவரும் பழக்கமாகும். இராஜராஜ சோழன் காலம் முதல் (1070—1120)காலத்தது. அவர் கல்வெட்டுக் கூறும் பணியாரம்,

''திருப்பணியாரத்துக்குத் தேங்காய், கருப்புக்கட்டி''

இக்கல்வெட்டிலிருந்து சோழர் காலத்திலே பணியாரம் தயாரிக்க இன்றைய கருப்பட்டி போன்ற கருப்புக் கட்டியைத் துணைப் பொருளாகப் பயன்படுத்தினர் என்பதை அறிகின்றோம்.

பராக்கிரம பாண்டியன் காலத்தில் பணியாரம் கடவுளுக்குப் படைக்கப்பட்டது. இதில் சில பொருட்கள் சிறிது வேறு பட்டிருப்பதைக் காணலாம். திருப்பணியாரம் செய்யத் தேங்காய், கதலிப்பழம், சீரகம், மிளகு,

வீரபாண்டியன் கல்வெட்டில பணியாரம் செய்வது பற்றிக் குறிப்பிடப்பட்டிருப்பது இது:

''ஸ்ரீ வீரபாண்டிய தேவரின் இரண்டாவதின் எதிர்பதின் ஒன்ருவது திருப்பணியாரம் செய்யப் பன்னிரண்டுக்கு அமுதுபடி, நாழியும், பலம் ஏழு தேங்காய் அமுது ஒன்றும், நெய்யமுது ஒன்றும்.''

விஜயநகர அச்சுத தேவராயன் காலத்திய திருப்பதிக் கல்வெட்டில் :

''திருப்பணியாரத்துக்கு அவல் அமுது இரண்டு மரக்கால், பயறு 2 மரக்கால், கரும்பிளநீர், தேங்காய், வாழைப்பழம்'' உள.



# கல்வெட்டில் சமையல் குறிப்புகள்

—அர. ரங்கம்மாள் & ஜெயந்தி

விஜய நகர மன்னர் காலம் வரை கிடைக்கும் பலவகையான கல்வெட்டுக்களில் பல வகையான புத்தம் புதுப் பலகாரங்களின் பெயர்களும், அளவுகளும், எண்ணிக்கைகளும் அழகாகக் கூறப்பட்டுள்ளன. கல்வெட்டின் மூலம் ஏராளமான பலகாரங்கள் கிடைப்பினும் உங்களுக்குப் பிடித்தமாய் இருக்கும் என்று சிலவற்றை இங்கு உங்களுக்குப் படைக்கின்ரேம்.

இவற்றுள் பணியாரம் இனிப்புப் பண்டமாக அன்றும் இன்றும் இருந்து வருகிறது. சோழர், பாண்டியர், விஜய நகர மன்னர் கல்வெட்டுகளில் பணியாரம் கடவுளுக்கும், மக்களுக்கும் விழாக்களில் படைக்கும் உணவாகத் திகழ்ந்தது.

திருப்பணியாரம் செய்வது பற்றிக் கிடைக்கும் முதல் கல்வெட்டு, திரிபுவனச் சக்கரவர்த்திகள் குலோத்துங்க சோழன் சுக்கு, சர்க்கரை,ஆரஞ்சுப் பழம், கரும்பு.

இதிலிருந்துபணியாரம்செய்யப் பழங்களும் உபயோகப்படுத்தப் பட்டதை அறிகிரேம்.

சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு மாநில வரலாற்றுக் கருத்தரங்கில், தொல்பொருள் ஆய்வுத்துறையின் கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவியர்களான செல்வி அர. ரங்கம்மாள், செல்வி ஜெயந்தி ஆகிய இருவரும் சேர்ந்து கல்வெட்டுகளில் சமையல்கலைக் குறிப்புகளைத் தொகுத்து அரிய விருந்தைப் படைத்தனர். அவ்வாராய்ச்சிக் கட்டுரையினை இங்கு வெளியிடுகிரேம்.

திருப்பணியாரத் தட்டு, இளநீர், தேங்காய், கரும்பு, வாழைப் பழம், மாம்பழம், பலாப்பழம்.

இவ்வாறு காலத்துக்குக் காலம் செய்முறை சேர்க்கைப் பொருட்கள் வேறுபடுகின்றன என்பது இங்கு கவனிக்க வேண்டிய தொன்ருகும்.

அதிரசம் முக்கியமான இனிப்பு; இன்றும் திருப்பதி போன்ற கோயில்களில் அதிரசம் கடவுளின் முக்கிய நிவந்தமாகப் படைக்கப்படுவதை நாம் காண்கிரேம். அதிரசம் செய்யப்படும் முறை பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ளது. அதிரசம் இன்றும் அதே முறையில் செய்யப்படுவது நாம் ஈண்டு வியப்புடன் நோக்கத் தக்கது.

அதிரசம் பற்றிய தமிழகக் கல்வெட்டுக்கள் அவ்வளவாகக் கிடைக்கவில்லை. திருப்பதிக்

கோயில் கல்வெட்டுகளிலேயே அதிரசம் என்ற பெயர் அதிகமாகக் காணப்படுகிறது. அதிரசம் செய்ய இறையிலி நிலம், பணம் ஆகியவை அளிக்கப்பட்டமை,

'அதிரசம் உளக்கு' (தென்னிந்தியக் கோயில் சாசனம்') எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிருஷ்ண தேவராயன் கல்வெட்டுஅதிரசம்செய்யத்தேவையான உணவுப் பொருட்கள் பற்றிக் கூறும். அதிரசம் செய்ய உபயோகித்த அரிசி அதிரசப்படி எனப்பட்டது. இதிலிருந்து அதிரசம் செய்யத் தனி வகை அரிசி ஒன்று உபயோகித்தது தெரிகிறது.

அதிரசப்படி — 1 மரக்கால் (அரிசி).

வெண்ணெய் (நெய்) —2 நாழி.

சர்க்கரை — 100 பலம்.

மேற்கூறியதை வைத்து ஓர் அதிரசம் செய்தனர். இதே போல் 34 அதிரசம் செய்ய,

'அதிரசப்படி 34க்கு 1 வட்டி, 14 மரக்கால் அரிசி; 8 நாழி நெய், 3500 பலம் சர்க்கரை; 4 நாழி, 1 உழக்கு மிளகு,'

இன்றும் அதிரசம் இம்முறையில் செய்யப்படுவதை நீங்கள் தெரிந்திருக்கலாம்.

தோசை அக்கால மக்களின் சிறந்ததொரு உணவாகக் கொள்ளப்பட்டது. இதற்கு ஏராளமான கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. விஜய நகர மன்னர்களை தோசைப் பிரியர்கள் என்றே அழைக்கத் தோன்றும் வண்ணமாக ஏராளமான தோசைபற்றி கல்வெட்டுகள் அவர்கள் காலத்திலேயே பொறிக்கப்பட்டுள்ளன. இன்றும் பல கோயில்களில் காலை பூஜைக்குத் தோசை நிவந்தமாக படைக்கப்படுவது காணலாம்.

தோசைக்கு, அரிசி, உளுந்து, எண்ணெய் எனத் திருப்பதிக் கல்வெட்டு, தோசை பற்றிக் குறிக்கிறது.

'கோவிந்தராஜனும் ஆச்சிமாரும் சூடிக்கொடுத்தனுச்சி யாரும் திருமஞ்சனம் கொண்டருளி'

தோசைப்படிக்கு விடும் அமுதுபடி உளுந்து (முன்னடி ஆழாக்கு) பயிற்றமுதி சர்க்கரை,. நெய், உரி

(அச்சுதராயன் கல்வெட்டு)

''தோசைப் படிக்கு விடும் (அச்சுதராயன் கல்வெட்டு) உளுந்து பலம்

கொதி பயிறு

சர்க்கரை பலம் மிளகு நெய்

—அச்சுதராயன் கல்வெட்டு.

'திருக்கல்யாணத்துக்கு தோசை படி உளுந்து நெய்'

— ஸ்ரீராம நவமி,

நாள் தோசைப்படிக்கு படி மரக்கால் உளுந்து நெய் —(அச்சுதராயர் கல்வெட்டு).

மேற்குறித்த கல்வெட்டுக்களில் தோசை செய்யப்படும் முறையும் கொடுக்கப்பட்ட அளவுக்குக் கிடைக்கும் தோசைகளின் எண்ணிக்கையும் நமக்கு நன்ருகப் புலனுகிறது. அக்கால கல்வெட்டுகளிலே தோசை செய்யும் முறையை நமக்குக் கற்றுத் தந்தன என்று கூறின் அது மிகையாகாது.

இன்றைய, நமது உலகப் புகழ் பெற்ற இட்லி இன்றிலிருந்து 500 வருடங்களுக்கு முன்பே இருந்திருக்கிறது என்பதை விஜய நகர கிருஷ்ண தேவராயன் கல்வெட்டுக் குறிக்கிறது.

''இட்லி ஒன்றுக்கு அமுதுபடி 2 மரக்கால், உளுந்து 1 மரக்கால் நெய்யமுது உரி, சர்க்கரையமுது பலம் 10

கிருஷ்ணதேவராயர் கல்வெட்டு

இங்கு இரண்டு மரக்கால் அரிசி, 1 மரக்கால் உளுந்து, நெய் 1 உரி, சர்க்கரை பத்து பலம் உபயோகித்து ஒரே ஒரு இட்லி செய்தனர் என்ருல் அது எவ்வளவு பெரிய இட்லியாக இருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

பராந்தக சோழன் காலத்தில் பிட்டு என்பது குறிக்கப்படுகிறது. திருமுடி சோழ பல்லவராயன் என்பான் திரைமூர் சபையினர் மாற்றும் திருவிடை மருதூர் நகரத்தார் ஆகியவரிடமிருந்து 14 வேலி நிலத்தை வாங்கிக் கோயில் நிர்வாகத்திற்குரிய பல செலவுகளுக்கும் இறைவனுக்குப் பிட்டமுது நிவேதிப்பதற்கும் இந்நிலத்தை வழங்கியதாக முதலாம் பராந்தக சோழனின் கல்வெட்டுக் கூறும். (திருவிடைமருதூர் கல்வெட்டு).

வீரகண்ட கோபாலன் என்பான் இறைவனுக்குப் பிட்டுப் படைப்பதற்கு நிலம் தானம் வழங்கினுன் என்று ஏகாம்பர நாதர்கோயில்கல்வெட்டுக்கூறும். இந்தப் பிட்டு நமது இன்றைய 'குழாய்ப் பிட்டே' தவிர நமது புதியதோர் கண்டுபிடிப்பல்ல.

## இராமநாதபுரம் மாவட்டத்தில்...

இராமநாதபுரம் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 5.75 இலட்சம் ஏக்கர் நிலத்தில் நெல் விளைவிக்கப்பட்டுள்ளது. சென்ற பத்து ஆண்டுகளில் இவ்வளவு அதிகமான பரப்பில் நெல் விளைவிக்கப்படவில்லை. மாநிலத்திலேயே நெல் உற்பத்தியில் இம் மாவட்டம் இப்பொழுது 5வது இடத்தைப் பெற்றுள்ளது.

ஆங்காங்கே கண்மாய்களில் தேங்கியுள்ள பாசன நீரின் உதவியால் வரும் கோடையில் குறுகிய கால நெல் 10,000 ஏக்கரிலும், சோளம், கம்பு, ராகி முதலிய சிறு தானியங்கள் 30,000 ஏக்கரிலும் நிலக்கடலை 20,000 ஏக்கரிலும், எள் 17,500 ஏக்கரிலும் சூரியகாந்தி 22,500 ஏக்கரிலும் பயிர் செய்வதற்கான முயற்சிகளில் வேளாண்மைத் துறை ஈடுபட்டுள்ளது.

சிவகெங்கை, திருப்பத்தூர், ராமநாதபுரம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய நான்கு வட்டங்களில் தென்னை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 900 ஏக்கரில் தென்னை வளர்க்கத் தமிழக அரசு 27.84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டத்தை அங்கீகரித்துள்ளது. தென்னை பயிரிட விரும்பும் விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 3,000 வீதம் கடன் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் அரசு சிறு விவசாயிகளுக்கு25சதவிகிதம் மானியமாகவும் வழங்குகிறது. ஆர்வமுடைய விவசாயிகள் சம்பந்தப்பட்ட கூட்டுறவு நில அபிவிருத்தி வங்கிகளை அணுகிக் கடன் பெறலாம். கிராமப் புறச் சாலைகள் அமைப்புத் திட்டத்தின் கீழ் இம் மாவட்டத்தில் 25 இலட்ச ரூபாய் செலவில் 18 கிராமங்களில் புதிய மெட்டல் சாலைகள் போடப்படுகின்றன.

சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நடப்பு நிதியாண்டு முடிவதற்குள் 20,000 ஆடுகள் சிறிய விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

செயற்கை முறையில் கால்நடை இன விருத்தியை அபிவிருத்தி செய்யும் நோக்கில் மானுமதுரை, திருப்புவனம் ஊராட்சி ஒன்றியப் பகுதி கிராம மக்களின் வசதிக்காக மானுமதுரை கால்நடை பராமரிப்புக் கேந்திர நிலையம் ஒன்று சமீபத்தில் துவக்கப்பட்டிருக்கிறது.

கும்மாயம் அல்லது பயற்றுப் பொங்கல் மிக முக்கிய உணவாகத் திகழ்ந்தமை கல்வெட்டுக்களி லிருந்து நன்கு விளங்குகிறது. கும்மாயம் என்பது பயிற்றுப் பொங்கல். கும்மாயத்தைப் பற்றிய குறிப்பு, முதன் முதலில் அம்பாசமுத்திரம் கல்வெட்டில் காணப்படுகிறது. அதில் கும்மாயம் செய்யத் தேவையான பொருட்கள் பற்றிக் கூறப்படுகின்றன :

செந்நெல் தீட்டல் அரிசி — நாலு நாழி.

பயிற்றுப் பருப்பு — 1 உரி.

பசுவின் நெய் — 1 உழக்கு.

தயிர் — 1 உரி.

வாழைப்பழம் — : 4

சர்க்கரை — 1 பலம்.

இக் கல்வெட்டு வரகுண பாண்டியன் காலத்தது. கும்மாயம் பயிற்றுப் போனகம் என்று அழைக்கப்பட்டதைத் திருப்பைங்கிளிகல் வெட்டு விளக்கும். (அம்பா சமுத்திரம் கல்வெட்டு). இதே பலகாரத்தில் பயிற்றுப் பருப்பின் அளவே சர்க்கரையும் சேர்க்கப் பட்டால் அது சர்க்கரைப் பொங்கல் அல்லது அக்கார வடிசில் எனப்பட்டது. அது அக்காலக் கல்வெட்டுக்களில் பல முறை காணப்படுகிறது.

சோழப் பெருங்காவதி என்பான் திருச்சாந்துறை இறைவனுக்கு அக்காரவடிசில் படைக்க 145 கழஞ்சு பொன் தானமாக அளித்தான். இப்பொன்னிலிருந்து பெறப்பட்ட வட்டியிலிருந்து அக்காரவடிசில் இறைவனுக்கு அளிக்கப்பட்டது. அவ்வட்டியிலிருந்து வாங்கப்பட்ட பொருட்கள் குத்தர் அரிசி, பருப்பு, பால், சர்க்கரை, வாழைப்பழம், விறகு, நெல், அடைக்காய் அமுது, உப்பு.

இதிலிருந்து அக்கார வடிசில் செய்ய மேற்குறித்த பொருட்கள் உபயோகிக்கப்பட்டமை புலனுகிறது.

ராஜ ராஜ சோழன் திருவாமத்தூர் கடவுளுக்கு அக்காரவடிசில் படைக்க நெல் தானமாக அளித்ததைக் கூறும். (திருவாமுத்தூர் கல்வெட்டு).

''நித்தம் நானுழி அரிசியும், பருப்பிரு நாழியும், பால் நானுழியும், வாழைப்பழம், பத்தும், சர்க்கரை, நெய் உழக்கும்.

(உடையார்குடி காட்டுமன்னுர் கோயில் கல்வெட்டு).

இக் கல்வெட்டு அக்காரவடிசில் செய்யத் தேவையான பொருட்களையும் அளவுகளையும் விளக்கும். இன்றும் நாம் கோயில்களில் அக்காரவடிசில் முக்கிய உணவாகப் பரிமாறப்படுவதை காண்கிறோம். அதிலிருந்து 1,000 வருடங்களுக்கு முன்பே சர்க்கரைப் பொங்கல் செய்யப்பட்டதை அறிந்துகொள்ள முடிகிறது. அக்கார வடிசில் இன்னும் கல்வெட்டு முறையிலேயே செய்யப்படுவதை நாம் காண்கிறோம்.

இட்லி தின்று பெருத்த உடம்பைக் குறைக்க, பூரியும் உணவாகப் பயன்படுத்தப்பட்டது. ஆனல் இது கடவுளுக்குப் படைத்த அரிசிப் பூரியாம். இதுகுறித்து கோனேரிராஜபுரம் இராஜேந்திரன் கல்வெட்டு கூறுகிறது.

''சிறுகாலே ஸந்தியில் திருவமிர்து அரிசி நானுழியும், உச்சியும் போது ஸந்தியில் அரிசி நானுழியும் இராவை ஸந்தியில் அரிசி இரு நாழியும், ஆக குத்தல் பூரி பதி நாழியும் (பத்து நாழி) ஆக மூன்று வேளைக்கும் நெய்யமுது 1 பிடியும். (கோனேரி ராஜபுரம் கல்வெட்டுக்கள்).

இது பரகேசரி வர்மன் காலக் கல்வெட்டு. பல நூறு ஆண்டுகள் தொன்மை வாய்ந்தது.

இங்ஙனம் கல்வெட்டுகளின் மூலம் பல வகையான உணவுப் பொருட்களின்பெயரையும் அவை செய்யப்படும் முறையையும் கண்டோம். சமையற் கலைப் புத்தகங்கள் அக்காலத்தில் இல்லாத குறையைக் கல்வெட்டுக்கள் தீர்த்து வைக்கின்றன.



## பத்திரிகையாளருக்கு உதவி நிதி

நீண்ட காலம் பணியாற்றி உடல் நலம் குன்றிய — ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்கள் மற்றும் எதிர் பாராமல் இயற்கை எய்திய பத்திரிகையாளர்களின் குடும்பங்கள் வறுமையில் வாடுவதைப் போக்கி அவர்கள் நலனுக்கான வழிவகைகள் காண அரசு முயற்சி எடுத்து வருகிறது.

இந்த முயற்சியின் முதற்கட்டமாக, குறைந்த பட்சம் ரூ. 5 இலட்சம் கொண்ட '' பத்திரிகையாளர் உதவி நிதி '' ஒன்றினை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. அரசு கொடுக்கும் ஆரம்பத்தொகை பத்திரிகை நிர்வாகங்களும், பத்திரிகையாளர்களும் வழங்கும் பங்கு மூன்றையும் அடிப்படையாக வைத்து, இந்த நிதி ஆரம்பிக்கப்படும்.

இந்த உதவி நிதியின் முதலீட்டுத் தொகைக்கு அரசின் பங்காக ரூ. 2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும். இந்த நிதியிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு மாதம் ஒன்றுக்கு ரூ. 100-க்குக் குறையாமலும் ரூ. 250-க்கு மேற்படாமலும் உதவித் தொகை வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தின் விவரங்கள் பத்திரிகை நிர்வாகத்தினருடனும் பத்திரிகையாளர் பிரதிநிதிகளுடனும் பேசி முடிவு செய்யப்படும். இத்திட்டத்தை நிர்வகிக்க ஒரு குழுவும் நியமிக்கப்படும்.



# கன்றுகளில் கழிச்சல் நோய்

டாக்டர்
கே. எம். செல்வராஜ்,
இணைப் பேராசிரியர்,
கால்நடை மருத்துவக் கல்லூரி.

பால் உற்பத்தித் தொழிலில் காளைக் கன்றுகள், கிடேரிகள் இருவகையும், முக்கிய இடத்தை அடையப் பெற்றுள்ளன. இவைகளே தரமிகுந்த அதிகப் பால் உற்பத்திக்கான வருங்காலச் சந்ததிக்கு அடிப்படையாக விளங்குகின்றன. கடந்த கால; தரக் குறைவான கால் நடைகளை அகற்றுவதற்கு இக்கன்றுகளைப் பேணிக் காப்பது அவசியமாகின்றது. ஆனால் நமது விவசாயிகளின் தகுந்த வளர்ப்பு முறைகளில் உள்ள குறைபாடுகளால், பல சிறந்த மரபுகளுடைய கன்றுகளை நாம் இழந்து வருகின்றோம். இதனால் இன்று பால் உற்பத்தித் தொழிலில் பெரும் அளவில் முதலீடு செய்தும், ஒரு கவலைக்குரிய எதிர்காலத்தை எதிர் நோக்கியுள்ளது.

கன்றுகள் பலவகை நோய்களுக்கு ஆளாகும் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. இவைகளில் கழிச்சல் நோய் மிக முக்கியமானது. தகுந்த காலத்தில் இந்நோய்க்குச் சிகிச்சை அளித்தல் நோய் வராமல் இருப்பதற்கான தடுப்பு முறைகள் ஆகியவைகளைக் கையாண்டால் மாட்டுச் செல்வம் அருகிப் போவதைக் கணிசமான அளவுக்குக் குறைக்கலாம்.

இந்நோய்க்குண்டான காரணங்களை இரு வகைகளாகப் பிரிக்கலாம். முதலாவது, வளர்ப்பு முறைகள். இவ்வளர்ப்பு முறைகளில் குறைபாடு இருப்பின், கழிச்சல் நோய்க்குக் கன்று ஆளாவதற்கு வேண்டிய சூழ்நிலைகளை எளிதில் உருவாக்கும். இரண்டாவது — நோயை ஏற்படுத்தும் நோய்க் கிருமிகள். இக்கிருமிகள் கன்றுகளின் உடலில் எண்ணிலடங்காமல் பெருகி, இறுதியில் அவைகளின் இறப்புக்கும் காரணமாகிவிடுகின்றது.

மெலிந்தே பிறத்தல், தட்ப வெப்ப மாற்றம், கன்றுக் கொட்டிலில் சுகாதாரமின்மை, ஒரே கன்றுக் கொட்டிலைத் தொடர்ந்து உபயோகித்தல், தாய்ப் பசுவுடனேயே சுகாதார மற்ற இடத்தில் கன்றையும் வைத்திருத்தல்; (இந்தச் சூழ்நிலை தாய்ப் பசுவைப் பாதிக்காது. ஆனால் கன்றைப் பாதிக்கலாம்.) கன்று சீம்புப் பால் (Colostrum) உட்கொள்வதைத் தடுத்தல், கன்று சீம்புப் பால் அருந்துவதிலிருந்து சாதாரணப் பாலிற்கு மாறும்போது ஏற்படும் வாய்ப்புகள், ஒழுங்கற்ற தீவன முறை, ஏ வைட்டமின் போன்ற உயிர்ச்சத்துக் குறைந்த தீவனங்களை அளித்தல் ஆகியவை வளர்ப்பு முறைகளில் உள்ள சில குறைபாடுகள் ஆகும்.

சினையாக இருக்கும்போது தாய்ப் பசுக்களுக்குச் சத்தற்ற தீவனம் அளித்தல், நோயால் பீடித்தல் போன்றவைகளே மெலிந்த வலுவற்ற கன்றுகளுக்கு காரணங்களாகும். மெலிந்து வலுவற்ற கன்றுகள் நோயால் விரைவில் பாதிக்கப்படக் கூடியவை. கன்றுகளுக்கான கொட்டகைகள் தகுந்த முறையில் அமைக்கப் படாமலிருந்தால், வெளியில் ஏற்படும் திடீர் தட்ப வெப்ப மாற்றங்கள், கன்றுகளையும் எளிதில் பாதிக்கும். ஆனால் இதையும் குறைவற்ற அமைப்பு வசதிகள் கூடிய கொட்டில்களைக் கொண்டு தடுத்திடலாம். திடீர் தட்ப வெப்ப மாற்றம் கன்றுகளுக்கு அதிர்ச்சியை விளைவித்து நோய் எதிர்ப்புச் சக்தியைக் குறைக்கின்றது.

சுகாதாரக் குறைவுள்ள கன்றுக் கொட்டில்கள், ஒரு கொட்டிலையே தொடர்ந்து கன்றுகளை வைத்திருக்கப் பயன்படுத்தல், கன்றுகளை, தாய்ப் பசுக்களுடனேயே வைத்திருத்தல் ஆகியவை நோய்க் கிருமிகள் அதிகமாகக் கன்றுகளை அணுகுவதற்கு உதவுகின்றன. ஒழுங்கற்ற காற்றோட்ட வசதி மற்றும் கொட்டில்களில் பயன்படுத்தப்பட்ட கிருமி நாசினிகள், தரையில் தேங்கியிருத்தல், துண்டுத் துணிகள், சாக்குப்பைகள், நார்ப் பொருள்கள், காகிதம், பிரஷ், மற்றும் செரிக்க முடியாத பொருட்கள் கன்றுகளின் அருகில் இருத்தல் போன்றவை கன்றுகளுக்கு நோயுண்டாக்கும் வடிகால்களாக விளங்குகின்றன.

கன்றுகள் சீம்புப்பால் உட்கொள்வதைத் தடுப்பது, அவைகளின் உடலில் இடைக்கால நோய் எதிர்ப்புச் சக்தி உண்டாவது தடைபடுகிறது. கால்நடை வளர்ப்போரின் தப்பெண்ணமும் அறியாமையுமே இதற்குக் காரணமாகும். கன்று சீம்புப் பால் குடிப்பதால், தாய்ப் பசு நச்சுக் கொடியை வெளியேற்றுவதில் தடையேற்படுகிறது என்ற தப்பெண்ணமும் இதற்கு ஒரு காரணமாகும். இது கன்றின் உயிருக்கே அபாயத்தை ஏற்படுத்தலாம்.

கன்றுகளுக்குக் கழிச்சல் ஏற்படுத்தும் நுண்ணுயிர்களில், பாக்டீரியா, வைரஸ், குடற் புழுக்கள், காக்ஸிடியா எனப்படும் ஒட்டுண்ணி, கருப்பையில் உள்ள நோய்க் கிருமிகள் முதலியன முக்கியமானவை.

கன்றுக் கழிச்சல் அல்லது வெள்ளைக் கழிச்சல் எனப்படும் நோய் கன்றுகளில் மிக அதிகமாகக் காணப்படுகின்றது. இது ஈகோலை ( E. Coli ) மற்றும்

உணவுக் குழலில் வாழும் நுண்ணுயிர்களால் உண்டாக்கப்படுகின்றது. சீம்புப் பால் கிடைக்காமை உட்பட வளர்ப்பு முறையில் உள்ள பல குறைபாடுகள் இந்நோய் விளைவை ஊக்குவிக்கின்றன. கன்றுகளின் தொப்புள் பகுதியில் காயம், அழுக்கடைந்த தரை, ஈக்கள் மற்றும் நோய்ப் பட்ட வேலையாட்களின் கைகள் மூலமாகவும் இந்நோய் பரவுகின்றது.

இளங்கன்றுகள், 3 மாதத்திற்குக் கீழ்ப்பட்டவை, இந்நோயால் பீடிக்கப்படுகின்றன. நோயுற்ற கன்றுகளில் முதலில் அதிகக் காய்ச்சல் காணப்படும்; பிறகு படிப்படியாகக் குறையும். அவை மந்தமாக, சுரத்தின்றி இருக்கும். கழிச்சல் வெண்மை அல்லது மஞ்சளாக, திரவ நிலையில் கெட்ட நாற்றத்துடன் காணப்படும். கழிச்சலின்போது கன்று மிக கடினப்படும். இதற்கு உடனடியாகச் சிகிச்சையளிக்காவிட்டால் கன்று இறக்கவும் நேரிடலாம். சில கன்றுகளில் நிமோனியா அறிகுறிகளும் உண்டாகலாம்.

இக்கொடிய நோயை முழுவதுமாகத் தடுக்க, கன்று வளர்ப்போர் வகைப்படுத்தப்பட்ட வளர்ப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டும். கன்றுக் கொட்டில்களை மிகச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். மற்றும் அவை சுகாதாரத்துடனும், நல்ல காற்றோட்ட வசதியுடனும் இருத்தல் அவசியம். கன்றுக் கொட்டில்கள் நேரடி தட்ப வெப்ப மாறுதலில் உண்டாகும் விளைவுகள் கன்றுகளைப் பாதிக்கா வண்ணம் சிறந்த வடிகால் வசதிகள் கொண்டதாயும் அமைந்திருத்தல் வேண்டும். கழிவுப் பொருட்களை உடனுக்குடன் அகற்றுதலும், கிருமி நாசினிகளைக் கொண்டு ஒழுங்காகச் சுத்தம் செய்தலும் மிக அவசியம்.



இளங்கன்றுகளின் இனிய தொகுப்பு

செரிக்க முடியாத பொருள்களைக் கன்றுகளின் அருகிலிருந்து அகற்ற வேண்டும்.

கன்றுப் பராமரிப்பு, கருப்பையிலிருந்தே தொடங்குகின்றது. சூலுற்ற பசுக்களைச் சுத்தமான கொட்டில்களில் வைத்தல் வேண்டும். மற்றும் அவை பால் வினை நோய்களிலிருந்தும் காத்தல் அவசியம். கன்று ஈனுவதற்கு முன்பு கன்று ஈனும் கொட்டிலை நோய்க் கிருமிகளிலிருந்து சுத்தப்படுத்த வேண்டும். தாய்ப் பசுவின் பின் பகுதி, வெளி உறுப்புகள் ஆகியவைகளைக் கிருமி நாசினிகளால் கழுவுதல் அவசியம்.

புதிதாகப் பிறந்த கன்று, எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் சீம்புப் பாலை உட்கொள்ள அனுமதித்தல் வேண்டும். இது குறைந்தது 72 மணி நேரமாவது நீடித்தல் அவசியம். கன்றின் உடலின் எடையில் 10 சதவீத அளவுக்கு ஒரு நாளைக்கு சீம்புப் பால் உட்கொள்ள வேண்டும். சீம்புப் பாலிலிருந்து சாதாரணப் பாலிற்குத் திடீர் மாற்றத்தைத் தவிர்த்தல் வேண்டும். கன்றுகளுக்கு இள வயதில் அதிக தீவனமளித்தல் கழிச்சல் போன்ற நிலையை உண்டாக்கும். அதிக தீவனம் அளித்தால் சீரணிக்கப் படாத, அல்லது பகுதி சீரணிக்கப்பட்ட பால், கழிச்சலில் காணப்படும். வைட்டமின் போன்ற உயிர்ச் சத்துக்களும், அன்டிபையாடிக் மருந்துகளும் (Anti biotics) கன்றுத் தீவனத்தில் கலத்தல் அவசியம். கன்றின் உணவில் சுண்ணும்பு நீரையும் (Lime water) காட் லீவர் (Codliver) எண்ணெய்யையும் சேர்ப்பது, பல நோய்களை எதிர்ப்பதில் கன்றுக்கு உதவும். புதிதாகப் பிறந்த கன்றுகளின் தொப்புள் கொடியை அறுப்பதிலும் சுத்தப்படுத்தலிலும் தகுந்த முறையைக் கையாளுதல் வேண்டும்.

அடிக்கடி மாட்டின் மலத்தைப் பரிசோதித்து, ஒட்டுண்ணிகளின் முட்டைகள் ஏதேனும் இருப்பின் அதனை நீக்க, தகுந்த மருந்து கொடுத்தல் அவசியம்.

## தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூல் நிலையம்

தஞ்சாவூர், மகாராஜா சரபோஜி சரஸ்வதி மகால் நூல் நிலையம் மதிப்பு மிக்க கையெழுத்துப் பிரதிகளைக்கொண்ட முதன்மையான நூல் நிலையம். அதில் 30,377 சமஸ்கிருதக் கையெழுத்துப் பிரதிகளும், 2081 தமிழ்க் கையெழுத்துப் பிரதிகளும், 778 தெலுங்குக் கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன. இவற்றைத் தவிர சமஸ்கிருதத்தில் 6,682 புத்தகங்களும், ஆங்கிலத்தில் 10,244 புத்தகங்களும், வேறு மொழிகளில் இன்னும் சில புத்தகங்களும் அந்நூல் நிலையத்தில் உள்ளன. அருங்கையெழுத்துப் பிரதிகளையும் புத்தகங்களையும் பாதுகாப்பதும், அவற்றை அட்டவணையிடுவதும் நன்முறையில் கையெழுத்துப் பிரதிகளை அச்சிட்டு வெளியிடுவதும் அதன் முக்கிய அலுவல்கள் ஆகும்.

# 11 + 1

# சிறந்த வசதிகள்

- முதலீட்டு சாதனங்கள் வரிவிலக்குப் பெறுகின்றன.
- மூலப்பொருள்கள் வரிவிலக்குப் பெறுகின்றன.
- இறக்குமதி தடை செய்யப்பட்ட மூலப் பொருள்களேயும் நாட்டில் கட்டுப்பாடுகளுக்குள்ளான பொருள்களேயும் நீங்களே இறக்குமதி செய்து கொள்ளலாம்.
- லாபத்திலும் அனுகூலங்கள் மீதும் பத்து வருடங்களுக்கு 20 சதவிகித வருமான வரி தள்ளுபடியுண்டு.
- நகராட்சி வரி, ஆக்ட்ராய், விற்பனேவரி போன்றவற்றிலிருந்து விதிவிலக்குண்டு.
- தொழில் சம்பந்தமாகச் செலுத்த வேண்டிய எல்லா சுங்கவரியிலிருந்தும் விலக்குண்டு.
- நிலேயான சொத்துக்கள் மீது ஒரு கோடி ரூபாய்வரை குறைந்த வட்டியில் கடன் பெறலாம்.
- தொழிலுக்கான இயந்திரங்கள், மூலப் பொருள்கள், உதிரி சாதனங்கள், கருவிகள் இதர பாகங்கள் போன்றவற்றை ஏற்றுமதி விலேயில் வாங்கலாம்.
- ஏற்றுமதி செய்யும் பொருள்களின் மதிப்பில் ஒரு சதவிகிதத்தை மான்ய அடிப்படையும் பணமாகப் பெறலாம்.
- ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வெளிநாட்டு பிரயாணங்களுக்கு மொத்தமாக அந்நியச் செலாவணி பெற விசேட சலுகைகள் பெறலாம்.
- பொதுவான லேசென்ஸ் மூலம் இயந்திரங்கள், உதிரி சாதனங்கள், மூலப் பொருள்கள் போன்றவற்றை இறக்குமதி செய்யலாம்.

\+ 1-11-1977-க்கு பின் நிறுவப்பட்ட எல்லா தொழில்களின் நிரந்தர மூலதனத்திற்கு அதிகபட்சம் ரூ. 25 இலட்சம் வரை ரொக்க மான்யம் கொடுக்கப்படுகிறது; சிறுதொழில் நிறுவனங்களுக்கு 10 சதவிகிதமும், நடுத்தர மற்றும் பெரிய தொழில் நிறுவனங்களுக்கு 15 சதவிகிதமும் இந்த உதவி கிடைக்கிறது.

தாங்கள்

தொழிலில்

ஈடுபட்டிருந்தால்

**கண்ட்லா**

**ப்ஃரீ டிரேட்**

**ஸோன்**

**பகுதியில்**

**முதலீடு செய்யவும்.**

எல்லாவற்றிற்கும் மேலாக அந்நியச் செலாவணிபெற தாமதமில்லா சேவை வசதிகள் உள்ளன. ரிசர்வ் பேங்க், தொழில் லேசென்ஸ், எம். ஆர். டி. பி. போன்றவைகளுக்கு இந்த வசதியுண்டு. கவர்ச்சி மிக்க சலுகைகள் இவை. கண்ட்லா ப்ஃரீ டிரேட் ஸோன் பகுதியில் செய்த முதலீடு பாதுகாப்பாக இருக்கும். ரெடிமேட் ஆடைகள், மருந்துகள், கைவேலே இயந்திரங்கள், கைப் பின்னல் பொருள்கள், பிளாஸ்டிக், ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள், பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்கள் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளன. விசேடமான சாதனங்களே அமைக்க மேலும் அதிக வாய்ப்புகள் உள்ளன.

இதர விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**டெவலப்மெண்ட் கமிஷனர்,**
**கண்ட்லா ப்ஃரீ டிரேட் ஸோன்,**
**காந்திதாம்,**
**கட்ச்.**

DAVP.

## வளரும் தமிழகம்

'தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாய் என்று கும்பிடடி பாப்பா' என்று அமர கவி பாரதி நாட்டுப்பற்றைச் சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு ஊட்டிடும் வகையில் பாட்டு எழுதி விட்டுச் சென்றார். நாட்டுப்பற்று என்பது நாட்டின் மீது கண் மூடித்தனமான பக்தி செலுத்துவதோடு நின்றுவிடக் கூடாது. நாடு வளர வேண்டுமானால் நல்ல திட்டங்கள் தேவை; நல்ல திட்டங்களை ஏட்டிலே தீட்டிவிட்டால் மட்டும் சுபிட்சமான வாழ்வு மக்களுக்குக் கிடைத்து விடாது. திட்டங்களியாக வேண்டும். மக்கள் தொகை விரைந்து பெருகிடும் சமூகத்தில் அந்த மக்களின் பெருக்கத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் வசதிகளும் பெருகாவிட்டால் அந்தச் சமுதாயம் பின் தங்கிய சமுதாயம் எனும் நிலைக்குத் தாழ்ந்து விடும்.

உண்ண உணவும், இருக்க இடமும், உடுக்க உடையும் அடிப்படைத் தேவைகள் என்கிற கருத்துக் குறித்து வேறுபாட்டுக்கு இடமில்லை. இந்தத் தேவைகளையும் விட மற்றொரு அடிப்படையான தேவை ஒன்று உண்டு. அது தான் குடி நீர்த் தேவை. ''நீர் இன்றி அமையாது உலகு'' என்பது சான்றோர் வாக்கு. சுதந்தரம் பெற்று 30 ஆண்டுகள் முடிந்த பிறகும் மக்களின் இந்த அடிப்படைத் தேவையினைப் பூர்த்தி செய்து விட்டோமா என்று கேட்டால், இல்லை என்று



# புதுமைத் தமிழகம் மலர....

மாண்புமிகு
தொழிலாளர் நல அமைச்சர்
திரு. இராகவானந்தம்

வேதனையோடு சொல்ல வேண்டிய கட்டத்தில்தான் நாம் இருக்கிறோம். தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்தின் பட்டி தொட்டிகளெல்லாம் பம்பரமாகச் சுற்றி வந்து பாமர மக்களின் குறைகளை நேரில் கண்டும் மக்கள் கூறக் கேட்டும் அறிந்தவர். எனவே தான் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டு அரசு ஊழியர்களிடம் அவர் ஆற்றிய முதல் சொற்பொழிவில் தெளிவாகச் சொன்னார்:

''நான் சென்ற கிராமப் புறப் பகுதிகளிலெல்லாம் மக்கள் என்னிடம் தங்களுடைய தேவைகளை மனம் விட்டுச் சொன்னார்கள். அவர்கள் மாட மாளிகைகள் கேட்கவில்லை. கூட கோபுரங்கள் கேட்கவில்லை. குடிப்பதற்கு நல்ல தண்ணீர் வேண்டும் என்று கேட்டார்கள்.''

இதுதான் இன்றைய தமிழகத்தின் கிராமப்புற மக்களின் நிலை என்றாலும் மக்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் எந்த அளவுக்கு இன்றியமையாதது என்பதை நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே தமிழக அரசு தன்னுடைய உடனடித் திட்டங்களில் ஒன்றாகக் குடிநீர் இல்லாமல் ஏங்கித் தவிக்கும் சிற்றூர்களே இல்லை என்கிற நிலையினை உருவாக்கிட முனைந்து செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. பார்ப்பதற்கு இந்தத் திட்டம் சாதாரணமானது போலத் தோன்றினாலும் இதை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் அனுபவங்கள் சற்று விந்தையானவையே என்று சொல்ல வேண்டும்.

சில சிற்றூர்களில் சில மைல்கள் சுற்றளவுக்குத் தண்ணீரைக் காண்பதே அரிதாக இருக்கிறது. சில சிற்றூர்களில் நீர்நிலைகள் உள்ளன. ஆனால் குடிப்பதற்கு, குளிப்பதற்கு, கால்நடைகளைக் குளிப்பாட்டுவதற்கு இப்படியாக அனைத்துக் காரியங்களுக்கும் அந்த நீர்நிலைகளே பயன்பட்டு, ஆரோக்கிய மற்ற சூழ்நிலைகளை உருவாக்கிக் கொண்டு இருக்கின்றன. கடலை அடுத்துள்ள சில சிற்றூர்களில் கண்ணுக்கு எட்டிய தூரம் நீர்ப்பரப்பு இருக்கின்ற பெருமை இருக்கிறதே தவிர அத்தனையும் உவர் நீர் என்பதால் குடிநீருக்கு ஏற்ற விசேஷத் திட்டங்களை அங்கே தீட்டுவது அவசியமாகிறது. இந்த நிலை குறித்துத் தமிழக அரசு விரிவான ஆய்வினை மேற்கொண்டு இந்தச் சிற்றூர்களைப் பல்வேறு நிலைகளில் வகைப்படுத்தி நீர் வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இம்மாதிரி உள்ள ஊர்களில் வசிக்கும் மக்களுக்குச் சுகாதாரப் பாதுகாப்புக் கொண்ட குடிநீர் வழங்க 640 லட்ச ரூபாய் செலவிட அரசு முன் வந்துள்ளது. இந்தத் திட்டத்தால் பயனடையப் போகும்

டம் மக்களுக்கு ஈடுபாட்டினை ஏற்படுத்துவதும் அவசியம். கடுமையான உழைப்பின்றி எந்தக் காரியமும் நிறைவேறாது. ஆகவே தான் தமிழ்ச் சான்றோர்கள் உழைப்பே உயர்வு தரும் என்றும், 'முயற்சி தன் மெய் வருத்தக் கூலி தரும்' என்றும் தெளிவாகச் சொல்லி வைத்தார்கள்.

''வளரும் தமிழகம்'' என்று தமிழக வானொலி நிலையம் தேர்ந்தெடுத்துள்ள தலைப்பே பொருள் பொதிந்தது. இது வளரும் தமிழகம், வளர்ந்து கொண்டே இருக்கும் தமிழகம், தொடர்ந்து வளரப் போகும் தமிழகம்.

தமிழகத்தின் வளர்ச்சி பெருமளவில் அரசுப் பணிகளை நம்பி இருக்கிறது என்றாலும், மக்கள் இல்லாமல் அரசு என்று ஒன்று இருக்க முடியாது. நவீன சமுதாயம் சீரோடும், சிறப்போடும், செம்மையோடும், செழுமையோடும், உயர்வோடும், உறுதியோடும் வளர்ச்சி பெற வேண்டுமானால் மக்கள் வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி

மக்களின் எண்ணிக்கை 9 லட்சமாக இருக்கும்.

இப்படி நான் சொல்லுகின்றபோது நகர்ப்புற மக்களின் குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டதாகச் சொல்வதாக அர்த்தம் இல்லை. உதாரணமாகச் சென்னை நகரில் குடிநீர்ப் பிரச்சினையில் தன்னிறைவு ஏற்படுத்த சென்னைப் பெருநகர் குடிநீர் வடிகால் குழுமம் விரைவில் தன் பணியைத் தொடங்க இருக்கிறது; நீர் வசதிகளைப் பெருக்கும்போது வடிகால் வசதிகளையும் இணைத்துச் செயல்படுத்துவது இன்றியமையாதது என்பதை உணர்ந்து அரசு செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. எவ்வளவு தான் வசதியினை இந்தத் துறையில் செய்து கொடுத்தாலும் சிக்கனமாக நீரினைப் பயன்படுத்தும் பழக்கத்தை மக்கள் மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால் நீர் என்பது சாதாரணமான விஷயம் போல் தோன்றினாலும், மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று இது என்பதாலும், விரையப்படுத்தாமல் நீரைப் பயன்படுத்தினால்தான் எல்லோருடைய தேவையும் பூர்த்தியாகும் என்பதாலும் இது விஷயத்தில் மக்கள் விசேஷமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர் வசதிகளைப் போலவே குடியிருப்பு வசதியும் இன்றியமையாதது என்பதை நான் எடுத்துச் சொல்லத் தேவையில்லை. மத்திய தர வர்க்கத்தினரிலிருந்து குப்பங்களில் குடியிருக்கும் ஏழை எளிய மக்கள் வரை அனைவருக்கும் குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க இந்த அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது. பொருளாதாரத் துறையில் பின் தங்கி உள்ளோருக்குக் குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க ஏறத்தாழ 607 லட்ச ரூபாய் செலவில் தமிழக அரசு திட்டம் ஒன்றைத் தீட்டி உள்ளது. அது போலவே குறைந்த வருமானம் உள்ளவருக்கும் நடுத்தர அளவில் வருமானம் உள்ளோருக்கும் பயன்படும் வகையில் நடப்பு ஆண்டில் மட்டும் வீட்டு வசதி வாரியம் 455 லட்ச ரூபாயினையும் 476 லட்ச ரூபாயினையும் முறையே செலவிட ஏற்பாடு செய்துள்ளது. இந்தக் கடமையினைத் தமிழக அரசு மட்டும் தனியாக நிறைவேற்றிவிடும் என்று சொல்லி விட முடியாது. தனியாரும் தங்களுக்குத் தேவையான வீடுகளைக் கட்டிக் கொள்ள மலிவாக இடங்கள் கிடைக்கும் வகையில் நகரியங்களை உருவாக்குகின்ற திட்டங்களிலும் அரசு விசேஷ கவனம் செலுத்தி வருகிறது. இம்மாதிரித் திட்டங்களுக்கு உலக வங்கியும் பொருளுதவி செய்ய முன் வந்து இருப்பதை இந்த நேரத்தில் குறிப்பிட்டுச் சொல்ல நான் கடமைப்பட்டு இருக்கிறேன். அரசு ஊழியர்கள் சென்னை நகரம் அல்லாத இதர பகுதிகளில் வாழ்கின்ற மக்கள், தொழிலாளர் பிரிவினர் ஆகிய எவரின் தேவையினையும் அரசு புறக்கணித்து விடவில்லை. கிராமப் புற வீட்டு வசதிகளைப் பெருக்குவதற்காகத் தமிழக அரசு 1977 ஜூலையில் வெளியிட்ட நிதிநிலை அறிக்கையில் 50 கிராமப் புற வீடு கட்டும் சங்கங்கள் (Rural Housing Societies) அமைப்பது என்று அறிவிப்புச் செய்தது. இந்தத் திட்டத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகமும் ரூபாய் 400 லட்சம் வரை நிதியுதவி அளிக்க முன் வந்துள்ளது.

> இந்த உலகில் மிகவும் புரட்சிகரமானது எதுவென்றால், அது தான் கல்வி. ஓர் எழுத்தைக் கற்றுத் தருவது ஒரு புரட்சிக்கு வித்திடுவதாகும். ஒரு பள்ளியைத் தோற்றுவிப்பது என்பது எதிரியைத் தாக்க ஒரு கோட்டை கட்டப்படுகிறது என்று பொருளாகும்.
>
> —இங்கர்சால்

தமிழக அரசு குடிசை மாற்று வாரியப் பணியில் இப்போது தனிக் கவனம் செலுத்திக் கொண்டு இருக்கிறது. சென்னை நகரில் வசிக்கும் மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் குப்பங்களில் வசித்து வருகிறார்கள் என்கிற உண்மையினை இந்த வாரியத்தின் பணியினுடைய அவசியத்தைக் கோடிட்டுக் காட்டப் போதுமானது என்று கருதுகிறேன். இந்தப் பணியினை மேலும் விரிவாக்கிச் செயல்படுத்த அரசு பல புதிய திட்டங்களையும் தீட்டிக் கொண்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு சமூகம் சிறந்து மேம்பாடு அடைய வேண்டுமானால் தொழிலாளர் நலன் பாதுகாக்கப்படுவது அவசியம். அண்ணா அவர்களின் மொழியிலே சொல்வோமானால் ‘‘கோழி கூவி எழுந்து, கோட்டான் அலறும் போது உறங்கச் செல்லுகின்ற தொழிலாளியின் துயரத்தினை நீக்காத எந்தச் சமுதாயத்தையும் முன்னேற்றம் அடைந்த சமுதாயமாகக் கருத முடியாது. தொழிலாளர்கள் ஆரோக்கியமான வாழ்வு வாழவும் உற்பத்தியைப் பெருக்கி மக்களின் வாழ்க்கையைச் சிறப்பாக்கவும் தொழிலாளர் துறை உறவு செம்மையான முறையில் அமைய வேண்டும் 1.3.78-ல் எடுத்துள்ள கணக்குப்படி 10,374 தொழிற்சாலைகளில் 12 மட்டுமே தான் வேலை நிறுத்தத்தாலும், கதவடைப்பாலும் பாதிக்கப்பட்டுள்ளன என்கிற விஷயம் தொழிலாளர் நல உறவினைப் பேணிக் காப்பதில் இந்த அரசு எவ்வளவு புரட்சிகரமான சாதனை புரிந்து இருக்கிறது என்பதற்குச் சரியான எடுத்துக் காட்டாகும். இதுவரையில் தொழிலாளருக்குப் பல சலுகைகளை அளிக்க இந்த அரசு முன் வந்துள்ளது. சிறு நிறுவனங்களில் பணி புரியும் தொழிலாளர்கள் யாவரும் போனஸ் சட்டத்தின் பலன்களைப் பெறுதல், தொழிலாளர்கள் அளிக்கும் மனுக்களுக்கு நீதி மன்றக் கட்டணத்திலிருந்து விலக்கு, சிறிய காரணங்களுக்காகத் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்படாமல் அவர்களுக்குப் பாதுகாப்புப் போன்ற பல சலுகைகளை இந்த அரசு நிறைவேற்றித் தந்துள்ளது. பேச்சு வார்த்தைகளுக்குச் சென்னைக்கு வரும் தொழிலாளர் தலைவர்களும், தொழிற்சங்கத் தலைவர்களும் தங்குவதற்கு வசதியாகவும் குறைந்த செலவிலும் இட வசதி செய்து தரத் தொழிலாளர் நல வாரியத்திற்கு அரசு உதவி அளிக்க முன் வந்துள்ளது.

கைத்தறி நெசவாளர்கள், பீடி சுற்றுபவர் போன்றவர்களுக்கு முறையான பாதுகாப்பு இல்லை. இவர்களுக்கும் மருத்துவ உதவி அளிக்கும் வகையில் நடமாடும் மருத்துவப் பிரிவுகள் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றன. இவ்வாறு பல்வேறு நிலைகளிலெல்லாம் தமிழக அரசு மக்களின் நல்வாழ்வுக்கான திட்டங்களை முறையோடு உருவாக்கித் தீவிரமாகச் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறது. உடனடியாகச் செய்ய வேண்டிய காரியங்களை ஒத்தி போடுகின்ற பழக்கம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அறியாத ஒன்று. ஆகவே அவருடைய சீரிய தலைமையில் இயங்குகிற அமைச்சரவை மக்களின் கோரிக்கைகளை உடனுக்குடன் பரிசீலித்துத் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது

வளரும் தமிழகம் மேன்மேலும் வளர்ந்து, புதுமைத் தமிழகமாக வளர, அரசின் அனைத்துத் திட்டங்களுக்கும் மக்களின் நல்ல ஆதரவு தேவை என்பதைக் கூறி கருத்துக்களைத் தெரிவிக்க வானொலி நிலையத்தார் அளித்த வாய்ப்பினுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

(வானொலியில் 5-3-1978ல் ஆற்றிய உரை.)



# வியப்பிலாழ்த்திய வியட்நாம்

சென்னையில் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் பிப்ரவரி 26, 27 ஆகிய நாட்களில் வியட்நாம் நாட்டுக் கலைக் குழுவினர் நாட்டிய நிகழ்ச்சிகளையும், இசை நிகழ்ச்சிகளையும் நடத்திக் காட்டிக் கண்டோரை பரவசமடையச் செய்தனர்.

விடுதலைக்காகவும், தேசீய மறுமலர்ச்சிக்காகவும் போராடிய தென் வியட்நாம் மக்களின் தேசீய விடுதலை முன்னணியில் புகழ்க் கொடியின் கீழ் 'பாங் சென்' இசை நடனக் குழு 1960ல் அமைக்கப்பட்டது. இளைஞர்களையும் பெண்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட இந்தக் குழுவினர் போர் முனையிலும் மக்கள் முன்னிலையிலும் இசை நடன நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டி வந்தனர். கலை மக்களுக்காகவே; ஒரு சிலரின் ஒய்யார வாழ்வுக்காக அல்ல; நாட்டை உயர்த்தவே கலை என்ற உன்னத இலட்சியத்தினை முன்னிறுத்தி, பற்பல இன்னல்களையும் பொருட்படுத்தாமல் சென்று கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து தீவிரமாக நடத்தினர். இதன் பொருட்டு மாவீரத்துடன் உயிர்த் தியாகம் செய்த கலைஞர்கள் பலர்.

தற்காப்புப் போருக்கான முதல் தரப் பதக்கமும், வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் சார்பில் இரண்டு பதக்கங்களும் பாங் சென் குழுவினருக்கு வழங்கப்பெற்றன. தென் வியட்நாம் தேசீய விடுதலை இயக்கத்தின் சார்பில் வெற்றி வைராக்கியப் பதக்கங்கள் இரண்டும் இக் குழுவிற்குக் கிடைத்தன.

இந்தக் குழுவினர் ஆசியா, ஐரோப்பா, லத்தீன், அமெரிக்கா ஆகியவற்றில் பல நாடுகளுக்கு விஜயம் செய்து தம் சிறந்த கலை நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டும் பேறு பெற்றனர். பல்கேரியாவில் சோஃபியா நகரில் நடைபெற்ற ஒன்பதாவது இளைஞர் திருவிழாவிலும், பெர்லினில் நடைபெற்ற பத்தாவது திருவிழாவிலும்இந்தக் குழுவினர் பல சிறப்பு விருதுகளையும் பதக்கங்களையும் பெற்றுள்ளனர்.

தற்போது வியட்நாம் நாட்டின் சமதர்மக் குடியரசின் கலாச்சார செய்தி அமைச்சகத்தின் சார்பிலும், ஹோ சி மின் நகர மக்கள் குழுவின் சார்பிலும், பாங் சென் குழு வியட்நாம் கலைஞர்களின் திறமையை வளர்ப்பதில் சிறந்த முயற்சி எடுத்து வருகிறது.

பாரம்பரியமான பாடல்கள், நடனங்கள், இசை முதலிய படைப்புக் கலைகளைப் பாதுகாத்துப் புதுப்பிப்பதில் இந்தக் குழு முனைந்துள்ளது. அயல் நாட்டுக் கலைகளின் தன்மையை ஆராய்வதிலும் இந்தக் குழு மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டுள்ளது.

பல்லாண்டுகளாக நிலைத்துள்ள நேர்த்தியான கலை மரபுகளைப் பூரணமாகப் பாதுகாத்து வருவதில் பாங் சென் குழு, தன் கலைத் திறனை வளர்த்து, மக்களின் அமைதியான உழைப்புக்காகவும், சமதர்மப் புனரமைப்புக்காகவும் பாடுபட்டு வருகின்றது. இதன் மூலம் வியட்நாம் மக்களுக்கும் உலகெங்கும் உள்ள மற்ற தேசங்களுக்கும் இடையே ஐக்கிய மனப்பான்மையும் நட்புறவும் வலுவடைய வழி வகுக்கின்றது.






# புத்தாண்டினைப் புதுப் பொலிவுடன் கொண்டாடுவோம்! சிறப்புக் குலுக்கலில் வியப்பூட்டும் பரிசுகளை வென்றிடுவீர்!

ஒளியூட்டும் நல்வாழ்வைப் புத்தாண்டு நல்கட்டும். வாழ்க்கை வசதிக்கும், வளமான எதிர்காலத்திற்கும் தீட்டியுள்ள திட்டங்களைச் செயல் படுத்த அரிய வாய்ப்பு! புத்தாண்டுச் சிறப்புக் குலுக்கலில் தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம் எண்ணற்ற பரிசுகளை அள்ளித் தருகிறது.

இச்சிறப்புக் குலுக்கலில் கிடைக்கும் வருமானம் முன் போலவே ஏழை எளிய கிராம மக்களின் வசதியைப் பெருக்க 4,000 கிராமங்களில் குடிநீர் வழங்கும் திட்டத்திற்குப் பயன்படுத்தப்படும்.

ரூ. 41 லட்சம் மொத்த மதிப்பு கொண்ட 13,075 பரிசுகள்.

எல்லா வரிசைகளுக்கும்
பொதுவான சிறப்பு பரிசுகள்:

## 2 முதற்பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 5 லட்சம்.

## 3 இரண்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 1 லட்சம்

மற்றும் பத்து வரிசைகளில் (BB யிலிருந்து BK வரை)
ஒவ்வொரு வரிசையிலும் அளிக்கப்படும் பரிசுகள்:

| | |
|---|---|
| 2 முதற் பரிசுகள் ஒவ்வொன்றும் | ரூ. 50,000 |
| 2 இரண்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் | ரூ. 10,000 |
| 3 மூன்றாவது பரிசுகள் ஒவ்வொன்றும் | ரூ. 5,000 |
| 50 நான்காவது பரிசுகள் ஒவ்வொன்றும் | ரூ. 1,000 |
| 50 ஐந்தாவது பரிசுகள் ஒவ்வொன்றும் | ரூ. 500 |
| 200 ஆறாவது பரிசுகள் ஒவ்வொன்றும் | ரூ. 100 |
| 1,000 ஏழாவது பரிசுகள் ஒவ்வொன்றும் | ரூ. 50 |

பரிசுச் சீட்டு
ஒன்றின் விலை: ரூ. 1

குலுக்கல் தேதி:
20-4-78




வெளியிட்டோர்:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம்,
சென்னை 600 002

தமிழ்நாடு
பரிசுச் சீட்டு
ஒன்றை வாங்குங்கள்
-மக்களின் நல்வாழ்வுக்கு
உதவுங்கள்.



பயிர்கள் நன்கு செழித்து வளர சிலவகை ஊட்டகங்கள் இன்றியமையாதவை. இவற்றில் தழைச்சத்து, மணிச்சத்து, மற்றும் சாம்பல்சத்து ஆகியவற்றைப் பற்றிப் பெரும்பாலோர்க்கு நன்கு தெரியும். இவை பேரூட்டகங்கள் ஆகும். இவற்றினைச் செடிகளுக்கு அம்மோனியம் சல்பேட், சூப்பர் பாஸ்பேட் பொட்டாஷ் போன்ற இரசாயன உரங்களின் மூலமாக அளிக்கிறோம். இவற்றைத் தவிர பயிர்களின் வளர்ச்சிக்கு நுண்ணூட்டகங்கள் எனப்படும் சிலவகை ஊட்டச்சத்துக்கள் இன்றியமையாதவை. அவற்றில் துத்தநாகம், தாமிரம், இரும்பு, மாங்கனீசம் போரான் ஆகியவை சிலவாகும். இவற்றை துத்தநாக சல்பேட், தாமிர சல்பேட், இரும்பு சல்பேட் (அன்னபேதி), மாங்கனீசு சல்பேட் போன்ற உர உப்புக்களின் மூலம் பயிர்களுக்கு அளிக்கலாம். பேரூட்டகங்களான தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகியவற்றை எந்த எந்தப் பயிருக்கு எந்த அளவில் தேவை, எந்தப் பட்டத்தில் எந்த முறையில் அளிக்கலாம் என்பனவற்றைப் பற்றிய ஆராய்ச்சிகள் பலகாலமாக நடந்து வந்திருக்கின்றன. பரிந்துரைகளும் வழங்கப்பட்டு அதன் பலனாக நல்ல மகசூல் கிடைத்து வந்திருக்கிறது.

## நுண்ணூட்டகங்களின் அவசியம்

பேரூட்டகங்களான தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகியவை தேவையான அளவு இடப்பட்ட பொழுதும் கூட சில காலமாக தற்போது பயிரிடப்படும் பயிர்வகைகளின் முழுப்பலன் கிடைக்காமல் இருந்து வந்தது. இதனை ஆராய்ந்தபோது பயிர்களுக்கு நுண்ணூட்டகத் தேவை தற்போது அதிகரித்திருப்பது தெரிய வந்தது. அம்மோனியம் சல்பேட், சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ் ஆகியவற்றிலும் மாட்டு எரு, கம்போஸ்ட், இலை, மக்கிய குப்பை ஆகியவற்றிலும் இந்நுண்ணூட்டகங்கள் உள்ளன. ஆதலின் இவற்றை நிலத்திற்கு இடும்பொழுது நம்மையறியாமலேயே நாம் இந்நுண்ணூட்டகங்களை ஓரளவு பயிர்களுக்கு இட்டு வந்திருக்கிறோம். அந்த அளவே பலவகைப் பயிர்களுக்குப் போதுமானதாக இருந்தது. ஆனால் தற்போது கிடைக்கும் உர வகைகளான காம்ப்ளக்ஸ் டை-அமோனியம் பாஸ்பேட் ஆகியவற்றில் இவை இருப்பதில்லை. இரண்டாவதாக நாம் இப்பொழுது உயர் விளைச்சல் நெல் மற்றும் தானிய வகைகளைப் பயிரிட ஆரம்பித்திருக்கிறோம். அவற்றிற்கு அதிக அளவு உரமிட வேண்டியிருக்கிறது. இதனால் பேரூட்டக, நுண்ணூட்டகத் தேவை அதிகரித்துள்ளது. மூன்றாவதாக, தற்போது இடைவிடாது தொடர்ச்சியாக பயிர் விளைச்சல் முறையை மேற்கொண்டிருக்கிறோம். முன்பு ஒரு போகப் பயிர் விளைந்த நிலத்தில் இரண்டு அல்லது மூன்று போகப் பயிர் விளைவிக்கப்படுகிறது. இதனால் மண்ணிலிருந்து எல்லா ஊட்டச் சத்துக்களும் வெகுவேகமாக அதிக அளவில் நீக்கப்படுகின்றன. அவற்றை ஈடுசெய்யும் அளவிற்கு மீண்டும் அவை மண்ணில் போடப்படுவதில்லை.

ஆக இக்காரணங்களால் பயிர்கள் ''நுண்ணூட்டகப் பசியினால்'' வாடுகின்றன. இத்தேவை அதிகமாய் இருப்பதால் பயிர்கள் நல்ல பலன் கொடுப்பதில்லை. சில சமயங்களில் பயிர் வளர்ச்சியே தடைப்படுகின்றது.

## நுண்ணூட்டகத் தேவையை அறிதல் :

மண்ணில் இந்நுண்ணூட்டகக் குறைபாட்டினை இருமுறைகளின்

# பயிர்களுக்கு நுண்ணூட்டகங்கள் தேவையா?

டாக்டர் கே. கே. கிருஷ்ணமூர்த்தி & மூசாயூசுப்
மண்ணியல் மற்றும் வேளாண் வேதியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயமுத்தூர்-3.



கண்டறியலாம். (1) நுண்ணூட்டகக் குறைபாடு அறிகுறிகள்'' (2) மண்பரிசோதனை மூலம்.

சிறுவகைப் பயிர்கள் நுண்ணூட்டகத் தேவையினைச் சிலவகைப் பற்றாக்குறை அறிகுறிகளால் காட்டுகின்றன. சில பயிர்கள் அவற்றைக் காட்டாமலேயே ''மறைவுப் பசியினால்' வாடுகின்றன. இதனால் ஏற்படும் 'பயிர்த் தவிப்பினால்' பயிர்கள் நல்ல பலனைக் கொடுப்பதில்லை. முக்கியமாக, சிலவகை உயர் விளைச்சல் பயிர் வகைகள் நல்ல பலன் தராததற்கு ஒரு காரணம் இந்நுண்ணூட்டகக் குறைவே ஆகும். இக்குறைவு அறிகுறிகளை நாம் தெரிந்திருந்தால் அவற்றிலிருந்தே நம் தேவையை அறிந்து அதற்குத் தேவையான நுண்ணூட்டகத்தைத் தகுந்த முறையில் தக்க தருணத்தில் கொடுத்துப் பயன் அடையலாம்.

பயிர்களுக்கு நுண்ணூட்டகங்களை அளிப்பதில் அதிகக் கவனம் தேவை. நுண்ணூட்டகங்கள் சிறிய அளவில்தான் தேவைப்படுகின்றன. ஆனால் அவசியம் தேவைப்படுகின்றன. நுண்ணூட்டகங்களில் சில அதிக அளவிலும் (உதாரணமாக துத்தநாகம் தாமிரம் மற்றும் இரும்பு போன்றவை) சில குறைவான அளவிலும் (உதாரணமாக போரான், மாலிப்டினம் ஆகியவை) தேவைப்படுகின்றன. மேலும் பயிர்களுக்குத் தகுந்தாற்போலும் நுண்ணூட்டகத் , தேவையின் அளவு, மாறுபடுகிறது. உதாரணமாக நெல்லுக்குத் தேவையான அளவைவிட சாதாரணமாகக் கோதுமைக்கு அதிக அளவில் துத்தநாகம் தேவைப்படுகிறது. சில நுண்ணூட்டகங்களின் தேவையான அளவும், தீங்கு ஏற்படக் கூடிய அளவும் மிகக் குறுகியதாக இருக்கிறது. அதாவது போரான் நுண்ணூட்டகம் 3-5 கிலோவரையில் பயிர்களின் தன்மைக்குத் தகுந்தவாறு நன்மை பயக்கிறது. சில சமயங்களில் இந்த அளவிற்கு மேல் மிகச் சிறிதளவு அதிகமானாலும் பயிர்கள் பாதிக்கப்படுகின்றன. ஆகையால் இதனை மிகக் கவனமாக உபயோகிக்க வேண்டும்.

இதைத் தவிர பயிருக்கு நுண்ணூட்டகக் குறைவினாலும் அல்லது அதிகத்தினாலும் தீங்கு ஏற்படாதிருக்க பேருட்டக, நுண்ணூட்டக விகிதம் மிக முக்கியமாகும். இவ்விகிதத்தில் மாறுபாடு இருந்தால் பயிர்கள் பாதிக்கப்படும். ஆகையால் எக்காரணத்தைக் கொண்டும் தேவையற்ற நுண்ணூட்டகத்தை அளிப்பதையோ அல்லது தேவைக்கு அதிகமாக இடுவதையோ தவிர்க்க வேண்டும். சிலவகை நுண்ணூட்டகங்கள் மண்ணிலிருந்து பயிரினாலும் மற்ற மண்ணின் தன்மையாலும் நீக்கப்படாமல் தங்கிவிடுகின்றன. ஆகையால் எந்த அளவு அவை மண்ணில் தங்கிவிடுகின்றன என்பதை ஆராயாமல் ஒவ்வொரு வருடமும் இந்நுண்ணூட்டகங்களை இடுவதால் மண்ணில் அவற்றின் அளவு அதிகரித்து பயிருக்குத் தீங்கு ஏற்படும். இதே போல் தேவையான அளவைவிட அதிக அளவு போடுவதனாலும் கெடுதல் ஏற்படும். உதாரணமாக, கோவை மாவட்டத்தைச் சேர்ந்த ஈரோட்டை அடுத்த முடக்குறிச்சி வட்டாரத்தில் களர்நிலத்தில் துத்தநாகம் நெற்பயிருக்குத் தேவையான வளர்ச்சியைக் கொடுத்ததைக் கண்டு மிக அதிகமான அளவில் அதை வயல்களுக்கும் போட்டுவிட்டனர். இதன் பயனாக, துத்தநாகச் சத்து மண்ணில் அதிகமாகச் சேர்ந்து பின்பு பயிரிடப்பட்ட பயிரில் மகசூலை வெகுவாக (10 முதல் 20 சதவிகிதம் வரை) குறைத்துவிட்டது. ஆகையால் எக்காரணத்தைக் கொண்டும் தேவையான நுண்ணூட்டகத்தில் அளவை அதிகரிக்கக் கூடாது. மேலும் குறிப்பிட்ட நுண்ணூட்டகம் போடும் முன் நாம் கடைப் பிடிக்கும் பயிர்ச் சுழற்சியினை நினைவில் கொள்ள வேண்டும். ஒரு பயிருக்குக் குறைவாக உள்ள நுண்ணூட்டகம் அடுத்து வரும் பயிருக்குத் தேவைக்கு அதிகமாக இருக்கக்கூடும். அதனால் பயிர் பாதிக்கப்படலாம்; அல்லது தேவையற்ற இருக்கலாம். மேலும் எல்லா மண்ணிலும் எல்லாக் காலங்களிலும் எல்லா நுண்ணூட்டகங்களும் குறைவாக இருப்பதில்லை. எல்லாப் பயிர்களிலும் அவற்றின் பற்றாக்குறை ஏற்படுவதில்லை. ஒருசில இடங்களில் ஒரு சில பயிரில் பற்றாக்குறை காணப்படலாம். ஆகையால் மண்ணின் தன்மையைச் சோதிக்காமல் பல நுண்ணூட்டகங்கள் கொண்ட கலவையைப் போடுவதும் சிறந்ததல்ல. ஏனெனில் பயிருக்குத் தேவையற்ற நுண்ணூட்டகம் வீணாவதுடன் அது மண்ணிலிருந்து நீக்கப்படாமல் அதிக அளவில் சேர்ந்து நேரடியாகக் கெடுதலை விளைவிக்கலாம் அல்லது மற்ற நுண்ணூட்டக, பேருட்டக விகித மாறுபாட்டை ஏற்படுத்தி பலவகைப் பற்றாக்குறைகளை உண்டு பண்ணலாம். உதாரணமாக மனிதர்களாகிய நம் உடம்பில் நமக்கு ஏ., பி., சி., டி., போன்ற பல உயிர்ச் சத்துக்கள் தேவைப்பட்டாலும் அவை எல்லாவற்றிலும் ஒரே சமயத்தில் பற்றாக்குறை ஏற்படுவதில்லை. எல்லோரும் எல்லாக் காலங்களிலும் மல்டி வைட்டமின் மாத்திரைகளைச் சாப்பிட வேண்டிய அவசியமில்லை. எப்பொழுது எந்த வைட்டமின் தேவைப்படுகிறதோ அப்பொழுது அதை மட்டும் உட்கொண்டால் போதும். இதைப் போலவே மண்ணிற்கு எல்லா நுண்ணூட்டகங்களையும் சேர்த்து, கலவையாகப் போடுவது என்பது அவசியமற்ற ஒன்றாகும். ஆகையால் பல நுண்ணூட்டகங்கள் கொண்ட கலவையைத் தவிர்க்க வேண்டியது மிக அவசியம்.

மேற்கூறியவற்றைத் தவிர, மண்ணின் அமில, காரத் தன்மையைக் கொண்டு நுண்ணூட்டகங்களை இடவேண்டும். ஏனெனில் காரத்தன்மை அதிகமாக இருக்கும்போது பயிர்கள் நுண்ணூட்டகங்கள் எடுத்துக் கொள்ள முடிவதில்லை. ஆகையால் இவற்றை அதிக அளவு போட வேண்டியதாகிறது. இந்த காரத் தன்மை உர உப்புக்கள் போடுவதாலும், மற்றும் பல வகை உழவியல் முறைகளைக் கையாளுவதாலும் குறையும் வாய்ப்பிருக்கின்றது. அப்போது அதிக அளவில் இடப்பட்ட மண்ணிலுள்ள நுண்ணூட்டகம் அதிக அளவில் பயிரால் கிரகிக்கப்பட்டுத் தீமையடைகின்றது. இதனையும் மனத்திற்கொள்ள வேண்டும்.

ஆகையால் நுண்ணூட்டக உரமிடும் முறையில் பலவித சிக்கல்கள் இருப்பதால் மண்ணின் தன்மை, பயிரின் தேவை, நுண்ணூட்டகத்தின் தன்மை ஆகியவற்றை உணர்ந்து மண் பரிசோதனை செய்து தேவைக்குத் தகுந்தாற்போல் இட்டுப் பலன் அடையலாம்.

## சிறைகளைச் சீர்படுத்த மூவர் குழு

தமிழ்நாட்டிலுள்ள சிறைகளின் நிலைமை பற்றி ஆராயவும், அவற்றின் சீர்திருத்தங்களுக்கான கருத்துரை கூறவும், மூவர் கொண்ட குழு ஒன்றைத் தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது.

ஒரிசா மற்றும் பாட்னா உயர்நீதி மன்றங்களின் முன்னாள் தலைமை நீதிபதி திரு ஆர். எல். நரசிம்மன் (ஓய்வு பெற்ற ஐ.சி.எஸ். அதிகாரி) அவர்கள் இக்குழுவின் தலைவராக இருப்பார்.

தமிழ்நாட்டின் முன்னாள் சிறைத்துறைத் தலைவர் திரு எஸ். எம். டயஸ், உள இயல் வல்லுநர் டாக்டர் கே. வெங்கோபராவ் ஆகியோர் மற்ற உறுப்பினர்களாவர்.



# கலப்பு மீன் வளர்ப்பு முறையில்



# பொருளாதார இலாபம்


**வே. நடராசன்,**
**துணைப் பேராசிரியர்,**
**மீன் வள அறிவியல் துறை,**
**தமிழ்நாடு வேளாண்மைப்**
**பல்கலைக் கழகம், கோயமுத்தூர்-3.**


**வே**கமான வளர்ச்சியும் வேறுன உணவுப் பழக்கங்களும் உடைய பல வகை மீன் இனங்களை ஒருங்கிணைத்து குறிப்பிட்ட அடர்த்தி, விகிதத்தில் வளர்க்கும்முறைக்குக் 'கலப்பு மீன் வளர்ப்பு' எனப் பெயர். சிறிய மற்றும் பெரிய குளங்களில் 'கலப்புமீன் வளர்ப்பு முறையில்' மீன் உற்பத்தி அளவு, பொருளியல் பற்றிய ஆராய்ச்சிகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டன. சிறிய குளங்கள் நீளம் 15 மீ, அகலம் 12 மீ, ஆழம் 1.5மீ (180 சதுர மீட்டர்). பெரிய குளங்கள் 40 மீ. நீளம், 25 மீ. அகலம், 1.5 மீ ஆழம் (1,000 சதுர மீட்டர்) ஆகிய அளவுகளைக் கொண்டவை. சிறிய குளங்கள் இரண்டில் ஒன்றின் பக்கங்களில் மட்டும் நீர்க் கசிவைத் தடுக்க, மண்-சிமெண்ட் கலவை பூசப் பெற்றது. பெரிய குளங்கள் நான்கும் சிறிய குளம் ஒன்றும் முழுவதும் தோண்டி எடுக்கப்பட்ட மண் குளங்களே ஆகும்.

எல்லாவற்றையும்விட, சிறிய மண் குளத்திலேயே அதிக மீன் உற்பத்தி கிடைத்தது. அதன் மீன் உற்பத்தி ஓர் எக்டரில் ஆண்டுக்கு 5,170 கிலோ என்ற அளவில் இருந்தது. சாதாரணமாகப் பரிந்துரை செய்யப்படும் விரைவாக வளரும் ஆறு மீன் இனங்கள் இக் குளத்தில் இருப்பு செய்யப்பட்டன. தோப்பா, ரோகு, மிர்கால், சாதாக் கெண்டை, வெள்ளிக் கெண்டை, புல்கெண்டை முதலியனவே மேற்குறிப்பிட்ட ஆறு மீன் இனங்கள். பின்னர் பெரும் அளவு உற்பத்தியாகும் வேண்டாத சிறுமீன்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் அவைகளை உண்ணும் அவுரி மீன்களும் குளத்தில் விடப்பட்டன. இவ்வாறுக இருப்புசெய்யப்பட்ட மீன் குஞ்சுகளின் எண்ணிக்கை ஓர் எக்டருக்கு 6,100. மீன்களின் எண்ணிக்கை, விகிதம் மற்றும் ஒரே பராமரிப்பு முறை கொண்ட இதே அளவுள்ள மண்—சிமெண்ட் கலவை பூசப் பெற்ற மற்ருெரு குளத்தில், மீன் உற்பத்தி ஓர் ஆண்டில் எக்டருக்கு 3,940 கிலோ என்ற அளவிலேயே இருந்தது. இதிலிருந்து மண் குளங்கள், உற்பத்தி அளவை உயர்த்த உறுதுணை புரிந்தன என அறியலாம்.

பெரிய மண் குளங்களில் மீன் உற்பத்தி ஓர் ஆண்டில் எக்டருக்கு 2,500 கிலோவிலிருந்து 3,300 கிலோ வரை இருந்தது. ஓர் எக்டரில், 4,750 என்ற அடர்த்தியில் முன் குறிப்பிட்ட ஆறு இன மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட குளத்தில் மீன் உற்பத்தி 3,303 கிலோ ஆக அதிகமாகக்கிடைத்தது. இதேபோன்ற பிறிதொரு குளத்தில் உற்பத்தி 2,830 கிலோ ஆகக் குறைந்து காணப்பட்டது. இறுதி அறுவடையின்போது, மீன்களின் எண்ணிக்கைக் குறைத்ததே, மீன் உற்பத்திக் குறைவுக்குரிய காரணமாகும்.

மற்ற இரண்டு பெரிய குளங்களில் மீன் இனங்களும் அடர்த்தியும் மாற்றம் செய்யப்பட்டன. இங்கு ரோகு, சாதாக்கெண்டை, வெள்ளிக் கெண்டை, புல்கெண்டை ஆகிய நான்கு இனங்களுடன் தமிழ்நாட்டில் எளிதாகக் கிடைக்கின்ற மிதமாக வளரும் சேல் கெண்டையையும் இணைத்து ஐந்து இனங்கள் மட்டுமே ஓர் எக்டருக்கு 4,000 என்ற எண்ணிக்கையில் இருப்பு செய்யப்பட்டன. இருந்தும், மீன் உற்பத்தி எக்டருக்கு ஓர் ஆண்டில் 3,140 கிலோ ஆக இருந்தது. மற்ருெரு குளத்தில் 2,500 கிலோ அளவே கிடைத்தது.

மேற்குறிப்பிட்ட மீன் உறபத்தி அளவுகள் ஓர் ஆண்டில் எக்டருக்குக் கிடைப்பதாகக் கணக்கிடப்பட்டன. ஆனுல், சிறு குளங்களில் 9 மாத மீன் வளர்ப்பில் உண்மையான உற்பத்தி 53 கிலோ, 70 கிலோ ஆகவும், பெரிய குளங்களில் 187 கிலோ, 212 கிலோ, 235 கிலோ, 248 கிலோ ஆகவும் இருந்தன. இத்தகைய உற்பத்தி அளவுகளையும், வேளாண் மக்கள் தமது தேவை, வசதி, பண்ணையில் கிடைக்கும் நிலம் முதலியனவற்றையும் கருத்திற் கொண்டு, தேவையான குளங்களின் அளவுகளை நிச்சயித்துக் கொள்ளலாம். மீன் குஞ்சுகள், உணவுகள், உரங்கள் ஆகியவற்றுக்கான செலவினங்களைக் கணக்கிட்டால், ஒரு கிலோ மீன் உற்பத்திச் செலவு ஒரு கிலோவுக்கு ரூ. 2 முதல் 2.50 வரை ஆகிறது. மீன் விற்பனை விலை ஒரு கிலோவுக்கு ரூ. 4.50 முதல் 5.00 எனவும், ஆண்டு மீன் உற்பத்தி ஓர் எக்டருக்கும் பொதுவாக 3,000 கிலோ என்ற அளவிலும் கொண்டால், இம் முறையில் மீன் வளர்ப்பதன் மூலம் ஆண்டுக்கு ஓர் எக்டரில் ரூ. 7,500 வரை நிகர இலாபம் பெற முடியும் என அறியப்பட்டுள்ளது. வேளாண் பண்ணையின் பணியாட்களைக் கொண்டே மீன் வளர்ப்புக்குத் தேவையான மேற்பார்வையையும் கவனித்துக்கொண்டு, புரதச் சத்துடைய மீன் உணவு உற்பத்தி செய்வதுடன், வருவாயும் பெற்றுப் பயன் அடையலாம்.

அறிவியல் அரங்கம்

# இரத்தம் தருவோம்



டாக்டர் பி. சிவராஜ்,
எம்.பி. பி.எஸ்., டி.சி.பி.,
மருத்துவ அலுவலர்,
அரசினர் பொது மருத்துவமனை.

'நீரின்றி அமையாது உலகு' என்பதைப் போல் ''நல்ல இரத்தமின்றி அமையாது நல்வாழ்வு'' என்பது இன்றைய மருத்துவ உலகின் மகத்தான கருத்தாகி விட்டது.

மனித உடலின் இயக்கத்திற்கு இரத்தம் ஓர் இன்றியமையாத தேவையாகும்.

முழுமையாக வளர்ந்து விட்ட மனிதனின் உடலில் ஏறத்தாழ 5 லிட்டர் இரத்தம் சுற்றி வந்து கொண்டே இருக்கிறது. இரத்த ஓட்டமும் இரத்தத்தின் அளவும் ஒரே சீராக இருந்தால்தான் மனிதன் ஆரோக்கியமாக இருக்க முடியும். ஏதாவது ஒரு காரணத்தால் இரத்தத்தின் அளவு குறைந்து விட்டால் மனித உடல் தளர்ந்து போகிறது. செயலற்றுப் போகிறது. அல்லது நோய்வாய்ப் படுகிறது. இவ்வாறு ஏற்படும் சந்தர்ப்பங்களில் மற்ருெரு மனிதனுடைய இரத்தத்தை, பாதிக்கப்பட்ட உடலில் செலுத்தினுல் தளர்ச்சி நீங்கி மறுபடியும் ஒரே சீரான நிலையில் அந்த உடல் இயங்க ஆரம்பித்து விடுகிறது. இவ்வாறு ஒருவரிடமிருந்து பெற்ற இரத்தத்தை மற்ருெருவருக்குச் செலுத்துவதை இரத்தம் செலுத்துதல் (Blood Transfusion) என்று கூறுவர்.

மனித உடலில் இரத்தத்தைச் செலுத்தலாம் என்பதை ஆதி காலத்திலிருந்தே மக்கள் அறிந்திருந்தனர். நமது நாட்டில் மட்டுமின்றி மேலை நாடுகளிலும் இப் பழக்கம் இருந்தது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. ரோம் நாட்டு மக்கள் போர்க் களத்தில் விழுப் புண் பெற்ற வீரர்களின் குருதியைக் குடித்தால் தங்களுக்கு வீர உணர்ச்சி வரும் என்று கருதினுர்கள். சில நாட்டு இளவரசர்கள் இரத்தத்தில் குளிப்பதனுல் தங்கள் உடல் மிகவும் ஆரோக்கியமாக இருக்குமென்று நம்பினர். விஞ்ஞானம் இன்னும் சற்று வளர்ச்சி அடைந்தபோது கி.பி.1628ஆம்ஆண்டில்வில்லியம் ஹார்வே என்ற விஞ்ஞானி, மனித உடலில் இரத்தம், இரத்தக்குழாய்களின் மூலமாகத்தான் உடம்பின் வெவ்வேறு பாகங்களுக்குச்சுற்றிச் செல்லுகிறது என்பதைக் கண்டு பிடித்தார். இந்தக் கண்டு பிடிப்பின் அடிப்படையில் இரத்தத்தை நேரிடையாக இரத்தக் குழாய்களுக்குள் செலுத்தினுல்தான் பலன் கிட்டும் என்பதை அறிந்தனர்.

ஆகவே பலவிதமான பிராணிகளின் இரத்தத்தையும் மனித உடலில் செலுத்த முற்பட்டனர். ஆனுல் இரத்தம் செலுத்தப்பட்டவர்கள் இறந்து பட்டனர். பிறகுதான் மனிதனுக்கு மனித இரத்தம்தான் பொருந்தும் என்ற கருத்து விஞ்ஞானிகளுக்கு ஏற்படலாயிற்று. இந்த முறையைக் கையாண்ட பொழுதும் பெரும் பான்மையோர் இரத்தம் செலுத்தப்பட்ட உடனேயே இறந்து விட்டனர்.

19ஆம் நூற்ருண்டின் ஆரம்பத்தில் 'லேண்டு ஸ்டீனர்' என்ற உடற்கூறு வல்லுநர் ஒவ்வொரு மனிதனுடைய இரத்தமும் தனித்தன்மை வாய்ந்தது என்பதையும், ஒரே தன்மையுள்ள, மற்ருெரு மனிதனுக்குச் செலுத்த முடியும் என்பதையும் கண்டுபிடித்தார். பரிசோதனைகள் மூலம் இரத்தத்தின் தனித் தன்மை என்கிற அடிப்படையில் மனித இனத்தில் 'ஏ', 'பி', 'ஓ' என்ற மூன்று பிரிவுகள் இருப்பதாகவும் இவர் கண்டறிந்தார்.

விஞ்ஞானம் வளர வளர ''ஏபி'' என்ற மற்ருெரு பிரிவு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த நான்கு பிரதான பிரிவுகள் மட்டுமின்றி 'ஆர்எச்' மற்றும் 'எம்', 'என்'. போன்ற உப பிரிவுகளும் இருப்பது தெரிய வந்தது. இவற்றில் 'ஆர்எச்' என்பது தான் மிக முக்கியமானது. ஏ, பி, ஓ, ஏபி என்ற நான்கு பிரிவுகளில் ஒவ்வொன்றையும் 'ஆர்எச்' நெகட்டிவ், 'ஆர் எச் பாசிட்டிவ்' என்னும் இரு வகைகளாகப் பிரித்துள்ளனர்.

ஒருவருடைய இரத்தம் மற்றவருக்குச் செலுத்தப்படும்போது செலுத்தப்படும் இரத்தமும் பெற்றுக் கொள்பவரின் இரத்தமும் ஒரே பிரிவாகவே இருக்க வேண்டும். இதைத்தான் 'கிராஸ் மேட்ச்சிங்' அல்லது இரத்த இசைவு என்று கூறுகிருேம்.

முக்கியமாக பெண்களுக்கு இரத்தம் செலுத்தும்போது முக்கியப் பிரிவுகள் மட்டுமின்றி 'ஆர் எச்' என்கிற பிரிவும் இசைவாக இருத்தல் இன்றியமையாதது.

ஏனெனில், 'ஆர்எச்' நெகட்டிவ்' உள்ள பெண்ணிற்கு பாசிட்டிவ் இரத்தம் செலுத்தப்பட்டால் அவள் உடலில் 'ஆர்எச்' பாசிட்டிவை எதிர்க்கும் சக்திகள் உண்டாகின்றன. இந்த நிலையில் அப் பெண் 'ஆர்எச்' பாசிட்டிவாக உள்ள கருத்தரிக்க நேரிட்டால் அவள் உடலில் உள்ள எதிர்ப்புச் சக்தியினுல் கரு பாதிக்கப்பட்டு கருவின் இரத்த அணுக்கள் சிதைந்து போக நேரிடும். இதை எரித்ரோ பிளாஸ்டோஸிஸ் ஃபீடேலிஸ் என்று சொல்வர்.

அடுத்து ஒருவர் உடலில் ஏன் இரத்தம் செலுத்தப்பட வேண்டும் என்ற காரணங்களை ஆராய்வோம். முதலாவதாக காயங்கள் காரணமாக இரத்தம் சேதமாகும் போது ஏறத்தாழ 600 மில்லிலிட்டருக்கும் மேலாகச் சேதமா

குமேயானால் உடலின் முக்கிய பாகங்களாகிய மூளை, இதயம், சிறு நீரகங்கள் போன்ற உறுப்புகள் பழுதடையலாம். ஆகவே இரத்தம் செலுத்தப்படுவதற்கு மிக முக்கியக் காரணமாகக் கருதப்படுவது இரத்த சேதமேயாகும்.

மாற்றான் படையெடுப்பிலிருந்து தாய்த் திருநாட்டைக் காக்கும் முயற்சியில் ஈடுபட்டுப் பகைவர்களின் குண்டு மாரிகளை மனம் தளராமல் ஏந்திக் கையிழந்து, கால் இழந்து, விழுப் புண் தாங்கும் வீர மறவர்களின் உயிரைக் காக்க, இரத்தம் மிக மிகத் தேவைப்படுகிறது.



எனக்கு உரிய நேரத்தில் இரத்தம் கிடைத்திருந்தால் நான் இந்த நிலைமைக்கு ஆளாகியிருக்க மாட்டேன்; இந்த நிலை மற்றவர்களுக்கு வராமல் இருக்கத் தாராளமாக இரத்த தானம் செய்யுங்கள்

'ஈன்று புறந் தருதலைத் தம் தலையாய கடனாகக் கொண்டு உள்ள தாய்மார்களுக்குப் பிள்ளைப் பேறு, மறு பிறவியாகவே அமைகிறது. சில தாய்மார்களுக்குப் பிள்ளைப் பேற்றிற்கு முன்னும் பின்னும் இரத்தம் தேவைப்படும். அறுவை முறையில் குழந்தை பெறும் பெண்களுக்கு, பேறு காலத்தில் பெருமளவில் இரத்தம் தேவைப்படுகிறது.

விபத்து என்பது எதிர்பாரா வகையில் ஏற்படுகிற ஒன்று. இது எங்கு, எப்போது, எப்படி நிகழும் என்று வரையறுத்துக் கூற முடியாது. விபத்துக்களில் சிக்கியவர்களுடைய உடலில் இருந்து பெருமளவு இரத்தம் வெளியேறுவதால் அவர்கள் உணர்விழக்கின்றனர். உடனடியாக அவர்களுக்கு இரத்தம் செலுத்தப்படாவிட்டால் அவர்கள் உயிரையே இழக்க வேண்டியவர்களாகி விடுகின்றனர்.

மருத்துவம் வளர்ந்து விட்ட இன்றைய நிலையில் எத்தனையோ வியாதிகளைச் சரி செய்ய மாபெரும் அறுவைச் சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. சொல்லப் போனால் இதயத்தைப் பிளந்தோ அல்லது இதயத்தையோ, சிறு நீரகத்தையோ மாற்றி அமைத்தோ அறுவைச் சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. இவ்வித சிகிச்சைகளை மேற்கொள்ளும் போது மிக அதிகமான அளவு இரத்தம் செலுத்தப்பட வேண்டும். இதைப் போலவே தீவிர தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், சோகை போன்ற வியாதிகளால் பீடிக்கப்பட்டோர்களுக்கும் இரத்தம் செலுத்துதல் அவசியமாகும்.

பிறவியிலேயே இரத்த அமைப்பில் கோளாறு உள்ள சிசுக்களுக்கும், மற்றும் தீவிர மஞ்சள் காமாலை வியாதி வந்தவர்களுக்கும் அவர்கள் உடம்பில் உள்ள கெட்ட இரத்தத்தை அகற்றி விட்டு அவர்களுக்கு இசைவாகப் புது இரத்தத்தை உட்செலுத்தி உயிர் காக்க வேண்டிய நிர்பந்தமும் ஏற்படுவதுண்டு. இதை மாற்று இரத்தம் செலுத்துதல் Exchange transfusion என்று கூறுவர்.

அடுத்து எந்த வகைகளில் இரத்தத்தை உட்செலுத்தலாம் எனபதைக் கவனிப்போம். இரத்தம் செலுத்தப்பட வேண்டிய ஒவ்வொரு காரணத்திற்குத் தக்கவாறு முழு இரத்தமாகவோ அல்லது இரத்தத்தின் பாகங்களாகிய பிளாஸ்மா, சிவப்பணுக்கள், துளி அணுக்கள் (Pleatelet concentrate) முதலியவற்றைத் தனித் தனியாகப் பிரித்தெடுத்தோ உட்செலுத்தலாம். ஆகவே தேவைப்படும் போது உடனடியாக உபயோகப்படுத்துவதற்குத் தயாராக இரத்தத்தைச் சேமித்து வைக்க வேண்டியது அவசியமாகிறது. இதற்காகவே இரத்த சேமிப்பு நிலையங்கள் உள்ளன.







இங்கு ஆரோக்கியமான நிலையில் உள்ளவர்கள் உடலிலிருந்து ஏறத்தாழ 275 மில்லி லிட்டர் அளவு இரத்தம் எடுக்கப்பட்டு அது உறைந்து விடாமல் இருப்



பதற்காக 'ஏ.சி.டி.' என்ற திரவத்தை அதனுடன் சேர்த்துக் குளிர் சாதனப் பெட்டிகளில் பாதுகாத்து வைக்கப்படுகிறது.

ஆகவே எவ்வளவு இரத்தம் எடுக்கப்பட்டாலும் தக்க முறையில் பாதுகாத்து வைக்க நவீன மருத்துவ முறையில் வசதிகள் உள்ளன. எனவே நாட்டு மக்கள் மனமுவந்து குருதி கொடுக்க முன் வர வேண்டும்.

இரத்த தானம் எவ்வித துன்பமும் இல்லாதது. இரத்த தானத்திற்குப் பிறகு ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளை எவ்விதக் குறையுமின்றி இயல்பாகச் செய்ய முடியும். இறைத்த கிணற்றில் சிறிது நேரத்தில் நீர் மட்டம் பழைய நிலையை அடைவது போல இழந்த இரத்தமும் 48 மணியளவில் ஈடுகட்டப்பட்டு உடலில் இரத்த அளவு முன்னைய நிலையை அடையும். ஒருவர் மூன்று மாதங்களுக்கொரு முறை இரத்த தானம் செய்வதால் அவர் உடல் நலம் எந்த விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை. வாழ்நாளில் ஒரே ஒரு முறையாவது இரத்த தானம் செய்ய வேண்டுமென்ற குறிக்கோளை, நல்லெண்ணத்தை ஒவ்வொருவரும் தவறாது கொள்ள வேண்டும். இதனால் நாம் இழப்பது மீண்டும் பெறக் கூடிய சிறிதளவு இரத்தமேயாகும். ஆனால் அது பயன்படுவதோ ஓர் உயிரைக் காப்பாற்ற! இரத்தம் தொடர்பாக பலப் புதிய ஆராய்ச்சிகள் இன்று உலகெங்கும் நடந்து வருகின்றன. ஜப்பான் போன்ற நாடுகளில் 'பி' பிரிவு இரத்தத்தை 'ஓ' பிரிவு இரத்தமாகமாற்றுவதற்கும், தாவரப் புரதத்தைப் பயன்படுத்திச் செயற்கை 'ஹிமோகுளோபின்' செய்து மனிதனுக்குச் செலுத்துவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மனித சக்தியால் முடியாத காரியம் என்று கருதப்பட்ட நிலவுப் பயணம் இன்று வெற்றி முரசு கொட்டுவதைப் போல், செயற்கை இரத்தம் கண்டு பிடிக்கப்படும் முயற்சியும் வெற்றி பெறலாம். அது வரை நாம் இரத்த தானம் முறையைப் பின்பற்றித்தான் தீர வேண்டும்.

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்பது நம்முடைய முதுமொழி. அந்த உண்டியை உயிர்களுக்கு ஏற்ற வகையில், ஏற்ற நிலையில் உதவினால் தான் வாழ முடியும். தாய், சேய்க்குத் தன் உடலில் சுரக்கும் பாலை உணவாக அளித்துப் பாதுகாக்கிறாள். சில வேளைகளில் பாலும், சோறும் உயிர் காக்கப் பயன்படுவதில்லை. அக்காலங்களில் அவற்றின் சத்தாகிய இரத்தமே உயிர் காக்கத் தேவைப்படுகிறது.

இரத்தம் உயிர் காக்கத் தேவைப்படுவதை அறிகின்ற நாம் பிற உயிர்களைக் காக்க நம் இரத்தத்தைக் கொடுக்கும் மன நிலையைப் பெற வேண்டும். இந்தச் சீரிய செயலுக்கு, வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்



வாடும் இளகிய உள்ளம் —பிணியாளரைக் கண்ட போதெல்லாம் பெரிதும் உழலும் நெஞ்சம் — யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையம் என்ற வளம் மிக்க மனம் —தமக்கென வாழாப் பிறர்க்கென வாழும் பேருள்ளம், — 'எல்லோரும் இன்புற்றிருப்பதல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே' என்ற தாயுள்ளம் கைவரப் பெறல் வேண்டும்.

இரத்தம் கொடுப்பதால் ஏற்படும் பயன்களைச் சிறிதும் எண்ணிப் பார்க்காமல் இரத்தம் கொடுத்தால் ஆண்மையை இழந்து விடுவோம் என்று ஆண்களும், தாய்மையை இழந்து விடுவோம் என்று பெண்களும் மிகத் தவறாகக் கருதிக் கொண்டு உள்ளனர்.

இரத்தம் கொடுப்பதால் உடல் நலம் கெடும் என்பது உண்மையில் ஒரு தவறான கொள்கை; ஒவ்வொருவர் உடலிலும் சற்று ஏறக்குறைய ஐந்து லிட்டர் இரத்தம் உள்ளது. இதில் 500 சி.சி.யிலிருந்து 600 சி.சி. வரை உடலுக்கு எவ்வித ஊறும் நேரிடாத வண்ணம் எடுக்கலாம். எனினும் முன்னெச்சரிக்கையாக யாரும் 300 சி.சிக்கு மேல் எடுப்பதில்லை. ஓருடலிலிருந்து இரத்தம் எடுக்கப்பட்டால் அந்த இரத்தத்தை ஈடு செய்து கொள்ளும் ஆற்றலை உடல் இயல்பாகவே பெற்றுள்ளது. இரத்தம் எடுக்காமலிருந்தால் அதனால் ஏதேனும் அதிகப் பயன் விளைகிறதா என்றால் அதுவும் இல்லை. இரத்தத்திலுள்ள சிவப்பணுக்கள் 110 நாட்களுக்கு மேல் உயிர் வாழ்வதில்லை. அவை 110 நாட்களுக்குப் பிறகு பயனின்றி அழிந்து விடுகின்றன. எனவே இயல்பாக அழியும் தன்மையுடைய இரத்தத்தைத் தானமாகத் தந்து பிற உயிர்களை வாழ வைப்பது பெரிய அறமல்லவா? இறைக்கிற கிணறே சுரக்கும் என்பதைப் போல இரத்தம் எடுக்கப்படுகிற உடலே புதிய இரத்தத்தைப் பெற்று வலிவும் பொலிவும் பெறும்.

18 வயது முதல் 55 வயதுக்குட்பட்டு, 45 கிலோ கிராமுக்குமேல் எடையுள்ள, நோயற்ற எந்த ஆணும் பெண்ணும், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை 300 சி.சி. அளவு இரத்தம் வழங்கலாம். அதனால் வழங்குவோர் உடலுக்கோ, உயிருக்கோ, எவ்வித இடையூறும் ஏற்படுவதில்லை. வாழ்வில் ஒருவரே பல முறை இரத்தம் வழங்கலாம்.

நீந்தக் கற்றுக் கொள்ளும் ஒருவன் முதன் முதலில் நீரில் இறங்குவதற்கு அச்சப்படுகிறான். பிறகு தொல்லை இல்லை என்பதை அறிந்து, மணிக் கணக்கில் நீந்திக் கொண்டேயிருக்க விரும்புகிறான், அதைப் போன்றே இரத்தம் கொடுப்பவரும் முதன் முறை மிகவும் பயப்படுகின்றனர். அதனால் தீங்கொன்றுமில்லை—இழப்பொன்றுமில்லை. என்று அறிந்த பிறகு, தாமே விரும்பிக் கொடுக்க முன்வருகின்றனர். ஒரு முறை கூட இரத்தம் கொடுக்காதவர்களை முதன் முறையாக இரத்தம் கொடுக்க வழிகாட்டவேண்டியது இரத்தம் கொடுத்தவர்களின் கடமையாகும்.

ஒவ்வொருவரும் ஆண்டிற்கு ஒரு முறையாவது அல்லது வாழ்நாளில் ஒரு முறையாவது இரத்தம் கொடுக்க வேண்டும் என்ற நிலைக்கு மனப்பக்குவம் பெற வேண்டும். முயற்சி திருவினையாக்கும், இரத்தம் வழங்கும் முயற்சியில் நம் இரத்தத்தைத் தந்து பிற உயிர்களைக் காத்து உயர்வடைய வழி வகுப்போமாக!

# இராஜேந்திர பிரசாத்தின் வாழ்விலே...



**நமது நாட்டின் முதல் குடியரசுத் தலைவரான டாக்டர் இராஜேந்திர பிரசாத் அவர்கள், அண்ணல் காந்தியடிகள் வகுத்த அன்பு வழியில் போரிட்டு இந்திய நாட்டின் விடுதலையைப் பெற்றுத் தந்த தலைவர்களில் குறிப்பிடத் தக்கவர். மார்ச் முதல் நாள் அவரது நினைவு நாளாகும். அவரது புனித வாழ்வின் புகழ் மிக்க சில நிகழ்ச்சிகளை இங்கே நினைவு கூர்கிறோம்**

இராஜேந்திர பிரசாத் கல்லூரி மாணவராக இருந்த காலம். கல்கத்தா மாநிலக் கல்லூரியில் எம். ஏ. ப்டித்துக் கொண்டிருந்தார். பல்கலைக் கழகத்தில் பயிலும் பீகார் மாநிலத்தைச் சார்ந்த மாணவர்கள் அனைவருக்கும் அவர் வழிகாட்டியாக விளங்கினார். வங்க மாணவர்களும்—பீகார் மாநில மாணவர்களும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்று விரும்பிய பிரசாத், பீகார் மாணவர் சங்கத்தின் சார்பில் மாநாடு ஒன்றைக் கூட்டினார். அம்மாநாட்டிற்கு வங்க மாணவரையும் அழைத்தார். வங்கத்திற்கும் பீகாருக்கும் ஒற்றுமை வளரத் தொடங்கியது. அதனைக் கண்ட அரசப் பிரதிநிதியான கர்ஸான் பிரபு வங்கத்தைப் பிரித்து, வங்க மக்களின் ஒற்றுமையைக் குலைக்க வழி தேடினார். அந்தப் பிரிவினையை எதிர்த்து — வங்க மக்கள் பெருங் கிளர்ச்சி செய்தனர். நாட்டின் ஒற்றுமை அந்நியர்களால் குலைக்கப்படுவதை உணர்ந்த பிரசாத் கிளர்ச்சியில் ஈடுபட்டார். பீகார் மாணவர்களையும் திரட்டிப் போராட்டத்தில் ஈடுபடச் செய்தார்.

தன்னலம் இன்றி நாட்டுக்காக உழைக்கும் பிரசாத்தின் தொண்டு கோகலேயைக் கவர்ந்தது. இந்திய ஊழியர் சங்கத்தில் அவரைச் சேர்த்துக் கொள்வதற்கு கோகலே முயன்றார். ஆனால், பாவம் தமையனார் மகேந்திர பிரசாத் அவருக்கு அனுமதி தர மறுத்து விட்டார். மூத்தோர் வார்த்தை அமுதமெனக் கருதியவர் பிரசாத். அதனால் தமையனாரின் விருப்பத்தை மீறவில்லை.

* * *

பீகாரில் சம்பரான் என்ற இடத்தில் உழவுத் தொழிலாளர்களை ஐரோப்பிய நில உடைமையாளர்கள் கசக்கிப் பிழிந்து கொண்டிருந்தார்கள் கொடுமைப் படுத்தி வந்தார்கள். அந்தக் கொடுமையைத் தடுக்க ஓர் அறப் போரை நடத்தினார் அண்ணல் காந்தியடிகள். அவரைச் சிறையிலிட்டது ஆங்கில அரசு. உடனே இராஜேந்திர பிரசாத் கொதித்து எழுந்தார். ''ஒரு காந்தியைச் சிறையில் போட்டால், லட்சக் கணக்கான காந்தியடிகள் தோன்றுவார்கள்'' என்று ஆங்கில அரசுக்கு எச்சரிக்கை செய்தபடி அறப் போரில் ஈடுபட்டார். அண்ணலின் போராட்டத்திற்குப் பொது மக்களிடமிருந்து அமோகமான ஆதரவு ஏற்படுவதைக் கண்டு ஆங்கில அரசு அஞ்சியது; அண்ணலை விடுதலை செய்தது ; அவர் மீது தொடர்ந்த வழக்கைக் கைவிட்டது. உழவர்களின் குறைகளை அறிந்து அவற்றைப் போக்குவதற்காக ஒரு குழுவை நியமித்தது.

சம்பரானில் அண்ணல் நடத்திய அறப் போரில், துவக்கத்திலிருந்து இறுதி வரை உறுதியான உள்ளத்துடன் நின்று உதவியவர் இராஜேந்திர பிரசாத். இதனை காந்தியடிகள் உணர்ந்திருந்தார். தமது உள்ளத்தில் இராஜேந்திர பிரசாத்துக்கு ஓர் இடத்தை அளித்ததுடன், தமது சுய சரிதையில், ''இராஜேந்திர பிரசாத்தின் உதவி இல்லாது போனால் சம்பரான அறப்போரில் வெற்றி கண்டிருக்க முடியாது'' என்று பாராட்டு வழங்கியிருக்கிறார் அண்ணல்.

* * *

நாட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட பிரசாத் நீண்ட காலம் சிறைவாசத்தை அனுபவித்தார் ; சிறை அவருக்கு ஆஸ்த்துமா நோயை வழங்கி விட்டது. அவரது இறுதிக் காலம் வரை அந் நோய் அவரை வருத்தியது ; என்றாலும் அந் நோயைக் குறித்து எந்தக் கவலையும் கொள்ளாது தமது பணிகளை—தொண்டுகளை அவர் நிறைவேற்றி வந்தார்.

என்றாலும், அந் நோயினால் தமக்கு இருமல் வரும்போதெல்லாம் அது பிறருக்குத் தொல்லையாக இருக்கிறதே என்று எண்ணி அவர் வருந்தியதுண்டு.

ஒரு முறை அலகாபாத்துக்குச் சென்றிருந்த அவர், பண்டித நேருவின் இல்லமான ஆனந்த பவனத்தை அடைந்தார். அவர் அங்குச் சென்றபோது இரவு நெடு நேரமாகிவிட்டது. எனவே வீட்டுக்குள் சென்று யாருக்கும் தொல்லை தரக் கூடாது என்று முடிவு செய்தார். அதனால் உள்ளே செல்லாமல் வராந்தாவிலேயே படுத்துவிட்டார். ஆனால் பிரசாத் அங்கு வந்திருப்பது நேருவுக்குத் தெரிந்து விட்டது. உடனே நேரு மாடியிலிருந்து இறங்கினார்; கதவைத் திறந்தார்; வெளியே வந்தார் ; பிரசாத் வராந்தாவில் படுத்திருப்பதைப் பார்த்தார். அவரை அன்புடன் கண்டித்து உள்ளே அழைத்துச் சென்றார்.

பிரசாத் அங்கே வந்திருந்தது நேருவுக்கு எப்படித் தெரிந்தது? வேலையாட்கள் எவரும் பார்த்துச் சொல்லியிருப்பார்களோ என்று தானே எண்ணத் தோன்றுகிறது? அதுதான் இல்லை! இராஜேந்திர பிரசாத் ஆஸ்த்துமா நோயாளி அல்லவா? அதனால் அவரது இருமலே அவர் அங்குவந்திருப்பதைக் காட்டிக் கொடுத்துவிட்டது.

* * *

கடமையில் மிகுந்த நாட்டம் உள்ளவர் இராஜேந்திர பிரசாத். சொந்த விஷயங்கள் குறுக்கிட்டால், அவற்றை உதறித் தள்ளி விட்டுக் கடமையை நிறைவேற்றும் உறுதி படைத்த நெஞ்சம் பிரசாத்துக்குச் சொந்தம்!

அவர் குடியரசுத் தலைவராக இருந்த காலம். அவரது சகோதரி நோய்வாய்ப்பட்டிருந்தார். அந்த நேரத்தில் குடியரசு நாள் விழா வந்தது. பிரசாத் அணிவகுப்பைப் பார்வையிடப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். ஆனால் அவரது சகோதரியின் உடல் நிலையோ மிகவும் சீர் கேடு அடைந்து கொண்டிருந்தது. உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்து அவரது மனம் கலங்கியது; என்றாலும் கடமை உணர்வுடன் அணிவகுப்பைப் பார்வையிடச் சென்றுவிட்டார். குடியரசு விழா முடிந்த பின்னர், சகோதரியைக் காண விரைந்தார். அதற்குள் சகோதரியின் ஆவி பறந்துவிட்டது!

* * *

இராஜேந்திர பிரசாத் புகழ் பெற்ற வழக்குரைஞராக விளங்கியவர்; நல்ல வருமானம் அவருக்கு இருந்தது; அவரது குடும்பம் பெரியது ; அதனைப் பராமரிக்கும் பொறுப்பும் அவரைச் சார்ந்திருந்தது. என்றாலும் நாட்டு விடுதலைப் போரில் ஈடுபட வேண்டுமென்று அண்ணல் காந்தியடிகள் அழைப்பு விடுத்ததும், அனைத்தையும் உதறி விட்டு நாட்டுப் பணியில் ஈடுபட்டார்.

நில உடைமையாளர் குடும்பத்தில் பிறந்தவர் பிரசாத். ஆனால் விவசாயிகளுக்காகப்போராட்டம் நடத்தினார். எந்தச் சூழ்நிலையிலும், ஆத்திரம் அடையாத அமைதி வடிவம்! அதே நேரத்தில், எதற்கும் அஞ்சாத நெஞ்சமும் வலுவான மன உறுதியும் படைத்தவர். 'அச்சமில்லாமல் கடமையை ஆற்றுதல், தன்னம்பிக்கை—எளிய வாழ்க்கை' ஆகியவை இராஜேந்திர பிரசாத்தின் குண நலன்கள். இவற்றை அண்ணலிடமிருந்து கற்றுக் கொண்டதாக தமது சுயசரிதையில் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

1930ஆம் ஆண்டு காந்தியடிகள் உப்புச் சத்தியாக்கிரகத்தைத் துவக்கினார். பீகாரில் சட்ட விரோதமாகத் தயாரிக்கப்பட்ட உப்பை இராஜேந்திர பிரசாத் விற்றார். ஆனால், காவல் துறையினர் அவரைக் கைது செய்யவில்லை.

பிரசாத், பொதுக் கூட்டத்திற்குச் சென்று கொண்டிருக்கும் போது அவரது கார் பழுதாகி விட்டது. அவரைத் தங்களது காரிலேயே ஏற்றிச் சென்றார்கள் காவல் துறையினர்.

இதற்கெல்லாம் காரணம் பிரசாத்தின் மீது காவல் துறையினருக்கு ஏற்பட்ட கருணை உணர்வு அல்ல. அன்பு நெறியில் அசைக்க முடியாத பற்றுக் கொண்டுள்ள பிரசாத்தை மக்களிடையே நடமாடவிட்டால் வன்முறை உணர்வுகள் மக்களிடையே தோன்றாமல் அணைபோட முடியும் என்று காவல் துறையினர் நம்பினர்.

காவல் துறையினரின் எண்ணம் இவ்வாறிருக்க, அவர்களிடம் பிரசாத் மிகவும் கருணை காட்டியிருக்கிறார் என்பதை ஒரு நிகழ்ச்சி எடுத்துக் கூறுகிறது.

காவல் துறையில் அந்தக்காலத்தில் ஏராளமான கிறிஸ்துவர்கள் பணிபுரிந்து வந்தார்கள். அறப் போர் நடத்தப்பட்டு வந்த காலத்தில் புனித வெள்ளிக்கிழமை விழாவும் வந்தது. காவல் துறையில் பணிபுரியும் கிறிஸ்தவ சமயத்தினரின் நலன் கருதி — ''புனித வெள்ளிக் கிழமையன்று அறப்போர் நடைபெறாது'' என்று அறிவித்தார் பிரசாத்.

* * *

பிரசாத், பேச்சாளர் மட்டும் அல்லர்—மிகச் சிறந்த எழுத்தாளர் 'இந்தியா பிரிக்கப்பட்டால் ( India divided )' 'அண்ணல் காந்தியின் அடிச்சுவட்டில்', 'சுய சரிதை', 'சம்பரான் சத்தியாக்கிரகம்' ஆகியவை அவர் எழுதிய ஆங்கில நூல்கள். பல வருடங்களுக்கு முன்பே 'தேசம்' என்று ஒரு பத்திரிகையை அவர் இந்தி மொழியில் நடத்தி யிருக்கிறார்.

—தி.பி.

## சாமிநாயக்கன்பட்டி வழிகாட்டுகிறது !



மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு காளிமுத்து அவர்கள் 26-2-'78 அன்று சேலம் வருகை தந்தபோது அந்நகரை ஒட்டியுள்ள சாமிநாயக்கன்பட்டியில் சேலம் பொறியியல் கல்லூரி தேசிய சேவைத் திட்ட மாணவ—மாணவியர்களின் அரிய முயற்சியினால் அரசின் நன்கொடை எதுவும் பெறாமலே சுமார் ரூபாய் 10,000 மதிப்பில் கட்டி முடிக்கப் பட்ட பள்ளிக் கட்டிடம் ஒன்றைத் திறந்து வைத்தார்கள். மாணவர்கள் பொதுமக்களிடமிருந்து ரூ. 2,150ம், தனது ஒரு வேளை உணவைத் தியாகம் செய்த வகையில் ரூபாய் 400ம் திரட்டினர் ; ஓமலூர் ஊராட்சி ஒன்றியம் சுமார் ரூபாய் 1,000 மதிப்புள்ள சிமெண்ட் மூட்டைகளைத் தந்து உதவியது. மாணவர்களே சித்தாள் வேலைகளைச் செய்தனர். பாழடைந்த பழையகட்டிடத்தை அப்புறப்படுத்தவும் பள்ளி விளையாடுமிடத்தைச் சமப்படுத்தல், அருகில் ஒரு சாக்கடை வாய்க்கால் வெட்டல்—ஆகிய பணிகளையும் அவர்களே செய்தனர். இந்தப் பணிகளின் மதிப்பு ரூ. 7,000. ஆக மொத்தம் ரூ. 17,000 மதிப்புள்ள ஆக்கப் பணியினை மாணவ மணிகள் செய்துள்ளனர். மேற்படி பள்ளிக் கட்டிடத்தைத் திறந்து வைத்த போது மாணவர்களின் சேவையை அமைச்சர் பெரிதும் பாராட்டினார்.

''மாணவர்களால் முடியாதது ஒன்றுமேயில்லை. அவர்கள் நினைத்தால் எந்தக் காரியத்தையும் செய்து முடிப்பர். அரசின் நன்கொடையை எதிர்பாராமல் தமது சொந்த முயற்சியாலேயே மாபெரும் பணிகளைச் செய்து முடிக்கும் ஆற்றல் மாணவ மணிகளுக்கு நிரம்ப உண்டு. இந்த ஆற்றலை இத்தகைய ஆக்கப் பணிகளைச் செய்வதற்குப் பயன்படுத்த வேண்டும்'' என்று மாணவர்களை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். இதர கல்லூரிகளைச் சேர்ந்த மாணவச் செல்வங்களும் சாமிநாயக்கன் பட்டியை ஒரு வழிகாட்டியாகக் கொண்டு ஆங்காங்கே வளர்ச்சிப் பணிகள் செய்ய முனையுமாறும் அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.



# தாய்நாடு காக்கத் தயாராகிறார்கள் !

அதிகாலை!

திடகாத்திரமான இளைஞர்கள் அந்த மைதானத்தில் திரண்டிருக்கின்றனர்.

சற்று நேரத்திற்கெல்லாம் அவர்களது வழக்கமான பயிற்சிகள் தொடங்குகின்றன.

அணிவகுப்பு அழகாய் நடக்கிறது ஒரு பக்கம்.

அசகாய சூரத் தனங்கள் கம்பீரமாய் நடக்கின்றன இன்னொரு பக்கம்.

அதோ! துப்பாக்கி ஏந்திய வீரர்கள் வெற்றி நடைபோட்டுச் செல்கின்றனர்.

வெயில் ஏற ஏறப் பயிற்சியும் கடுமையாகிறது.

தாம்பரம் விமானப் படை நிலையத்தில் (Air Force Station, Tambaram) உள்ள மிகப் பெரிய திடலில் இந்தக் காட்சிகளையெல்லாம் காண்கிறோம்.

**மிகப் பெரியது**

நாட்டுக்காக உழைத்திட— நம் நாட்டை எதிரிகளிடமிருந்து காத்திடத் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளும் இளஞ் சிங்கங்களை நேரில் பார்க்கிறோம்; நம் நெஞ்சம் நம்மையறியாமலேயே அவர்களை வாழ்த்துகின்றது.

சென்னைத் தாம்பரத்தில் உள்ள விமானப் படை நிலையம் இந்தியாவிலேயே மிகப் பழமையானது மட்டுமல்ல, மிகப் பெரியதும் கூட!

**அடித்தளம்**

இங்கே வந்து பயிற்சி பெறுகிறவர்கள், மற்ற மாநிலங்களில் மட்டுமல்ல, மற்ற நாடுகளிலிருந்தும் வந்தவர்கள்.

போர் முனையில் இந்திய வீரர்கள் காட்டிய தீர மிக்க செயல்களை நாமறிவோம். அந்த வீர சாகசங்களுக்கு அடித்தளமாக அமைகிறது இங்கே தருகின்ற பயிற்சிகள்.

**பயிற்சிப் பள்ளி**

இங்கு ஒரு பயிற்சிப் பள்ளி ( Flying Training School ) உள்ளது. இந்தப் புள்ளி 1948-ஆம் ஆண்டு அம்பாலாவில் தொடங்கப்பட்டது. பிறகு அது 1954ல் தாம்பரத்துக்கு மாற்றப்பட்டது. தென் கிழக்கு ஆசியாவிலேயே மிகச் சிறந்த இந்தப் பள்ளியில், ஓர் அரங்கம் காணப்படுகிறது. அந்த அரங்கத்தின் மேலே ஓர் ஆங்கில வாசகம்: Learn to teach & Teach to Learn அதாவது 'கற்றுத் தருவதன் மூலம் கற்றுக் கொள்கிறோம்'! அது எத்துணை உண்மை! இங்கே கற்றுத் தருகின்ற பயிற்சிகள் தான் எத்தனை! எத்தனை!

இங்கே பயிற்சி பெறுகின்ற ஒருவர், பயிற்சி முடிந்து வெளியே வரும்போது, ஒரு சிறந்த விமானியாக, விமானம் பற்றிய எல்லா வகையான நுணுக்கங்களையும் அறிந்தவராக விளங்குகிறார்.

இங்கு அளிக்கப்படும் பயிற்சியின் காலம் 22 வாரங்கள். இங்குப்

பயிற்சி பெறுபவர்கள், தாங்களே விமானப் படையின் எதிர்கால விமானிகளுக்குப் பயிற்சி அளிக்கும் தகுதியைப் பெற வேண்டும் என்பதுதான் பாடத் திட்டத்தின் நோக்கமாகும். எனவே, பாடத் திட்டமும் செயல் விளக்கமும் மிகக் கடுமையாக அமைக்கப்பட்டுள்ளன.



'டம்மி' பைலட்டும், அசல் பைலட்டுகளும்!

**பறக்கும் வகுப்பு!**

சாதாரணமாக, பள்ளிக்கூடத்தில் வகுப்பறையில் பாடம் சொல்லிக் கொடுப்பதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால், இங்கு அதற்கு முற்றிலும் மாறுபட்ட முறையில் பாடம் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. அதாவது பறந்துகொண்டிருக்கும் விமானத்தில் இருந்தபடியே பாடம் சொல்லித் தரப்படுகிறது. வகுப்பறைகளில் விஞ்ஞானப் பாடமும் கற்பிக்கப்படுகிறது.

இந்தப் பயிற்சிப் பள்ளியில் தரையிலும், விமானத்திலும் தக்க பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஆண்டுதோறும் இங்கே ஆயிரக்கணக்கான பேர் பயிற்சி பெறுகிறார்கள். பிறகு அவர்களுக்குத் 'தகுதி பெற்ற விமானம் ஓட்டும் பயிற்சியாளர்' என்ற சான்றிதழ் வழங்கப்படுகிறது.

**வெளிநாட்டாரின் பாராட்டுதல்கள்!**

இங்கே பலவகையான பிரிவுகள் உள்ளன. இப் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் விமானம் சம்பந்தமான தொழில் நுணுக்கங்கள் கற்பிக்கப்படுகின்றன. அதற்காக ஒரு முழு விமானமே இங்கு உள்ளது. அதன் பாகங்களும் தனித் தனியே வைக்கப் பெற்று, பொறியியல் சம்பந்தமான கல்வி புகட்டப்படுகின்றது.

சான்றிதழ் பெற்றவர்கள், தாம் பெற்ற பயிற்சியை மற்றவர்களுக்கும் சொல்லிக் கொடுக்கிறார்கள். இங்கே பயிற்சி பெற்றவர்கள் வெளிநாட்டவர்களின் பாராட்டுதல்களையும் பெற்று வருகின்றார்கள்; ஏன், அங்கே நல்ல பதவியினைப் பெறுவதற்கும் நல்ல வாய்ப்பைப் பெற்று வருகிறார்கள். இங்கே பயிற்சி பெற்றவர்கள் பயிற்சி முடிந்ததும் வேறு இடங்களுக்கு மாற்றப்படுகின்றனர்.

**'டம்மி' பைலட்**

அதோ, ஒரு 'பைலட்' உட்கார்ந்திருக்கிறார்!

அவரைச் சுற்றிலும் விமானப் படை வீரர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள்.

'பைலட்' கைகால்களை அசைக்கிறார். மேலே எழும்புகிறார். ஆனால், பேசத்தான் மாட்டேன் என்கிறார்! 'டம்மி' பைலட் எப்படிப் பேசுவார்? பயிற்சி பெறுபவர்களுக்காக வைக்கப்பட்டுள்ள 'பொம்மை பைலட்'தான் அது!

எதிரி, தன் விமானத்தைத் தாக்கும்போதோ, அல்லது விமானத்தில் கோளாறு ஏதேனும் ஏற்படும்போதோ, விமானி தன் இருக்கையோடு மேலே எழும்பி, பிறகு 'பாரசூட்' உதவி மூலம் தப்பித்துக்கொள்ள முடியும். இதற்கான தானியங்கிச் சாதனங்கள் விமானத்தில் பொருத்தப்பட்டிருக்கும். இதை விளக்கிச் சொல்லுகிறார் ஒர் ஆசிரியர்.

விமானத்தின் என்ஜின் பகுதி பற்றி அறிகின்றனர் மாணவர்கள்.



**குண்டு விடாதீர்!**

ஒவ்வொரு பிரிவாய்ப் பார்த்துக்கொண்டே வருகிறோம். விமானத்தின் பல்வேறு பகுதிகள் கொட்டிக் கிடக்கின்றன. இன்னொரு பகுதியில் 'வெல்டிங்' நடக்கிறது. 'டகோடா', 'ஹெலிகாப்டர்' விமானங்கள் மற்றொரு பகுதியில் காட்சியளிக்கின்றன.

விமானிகள் அல்லது பயணிகள் தப்பித்துக் கொள்ள உதவும் சாதனம் 'பாரசூட்' என்று

நமக்குத் தெரியும். நைலானுலான இந்தப் பாரசூட்டை எப்படிப் பயன்படுத்த வேண்டும்? அது எப்படியெல்லாம் இணைக்கப்படுகிறது? போன்றவற்றை நேரில் தெரிந்து கொள்கிறோம் ஒரு பகுதியில்.

**குண்டு போடுவது எப்படி?**

ஒரு பிரிவில் இதற்கான பயிற்சி அளிக்கப்படுகிறது. அங்கே பயிற்சி பெற்றவர் குண்டுகளை அதற்கான கருவிகளில் போடுவதையும் ( Loading Bomb ) அவரைச் சுற்றி மாணவர்கள் நின்று கொண்டு கூர்ந்து கவனிப்பதையும் பார்க்கிறோம்.

**எல்லா வசதிகளும் இங்கே உண்டு!**

இந்தப் பள்ளியில் சேருவதற்குப் பள்ளி இறுதி வகுப்பு வரை படித்திருக்க வேண்டும். வயது 19.5 இருக்க வேண்டும். நல்ல உடற்கட்டும் இருத்தல் அவசியம்.

தாம்பரம் விமானப் படை நிலையத்தில் பயிற்சி பெறும் வீரர்களுக்கு எல்லா வசதிகளும் உள்ளன. அவர்கள் எதற்கும் அந்த வளாகத்தை விட்டு வெளியே வரவேண்டாம்.

தங்குவதற்கு நல்ல வசதியான விடுதி, திரைப்பட அரங்கம், துணிக் கடைகள், பல்வேறு பொருள்கள் விற்கும் கடைகள் எல்லாம் இங்கே இருக்கின்றன. இவையன்றி, இவர்களுக்கு உணவு, உடை, மருத்துவ வசதியும் அளிக்கப்படுகிறது. பயிற்சியின்போது உதவித் தொகையும் வழங்கப்படுகின்றது. இங்கே பணி புரிபவர்களின் குடும்பங்களுக்குத் தேவையான பள்ளி, மருத்துவமனை முதலான வசதிகளும் உள்ளன.

**ஆவடி விமானப் படை நிலையத்தில்....**

''அலுவலகம் வந்ததும் வேலையைக் கவனி!''

''குறித்த நேரத்தில் வேலைக்கு வந்துவிடு!''

''வேலை முடிந்ததும், அலுவலக மின்விளக்கு, விசிறிகளை நிறுத்தி விட்டாயா?''

இந்த வாசகங்கள் எங்கே இருக்கின்றன?

ஆவடி விமானப் படை நிலையத்தைச் சுற்றி வரும்போது ஆங்காங்கே இந்த வாசகங்கள் தென்படுகின்றன. ஆவடி விமானப் படை நிலையம், 2வது உலகப் போர் நடந்தபோது அமைக்கப்பட்டது.

இந் நிலையத்தில் விமானப் படை மோட்டார்களைச் செப்பனிடுவது முக்கியமான பணியாகும். விமானப்படை மோட்டார்களில் ஏற்படும் எந்தக் கோளாறும் இங்கே சரி செய்யப்படுகின்றன. அதோடு மோட்டாருக்கான உதிரிப் பாகங்களும் இங்குத் தயாரிக்கப்படுகின்றன.

**ரஷ்ய ஊர்திகள்!**

ரஷ்ய ஊர்திகளைப் பழுது பார்ப்பதற்கென்றே தனிப் பிரிவு (Russian Vehicle Repair Section) உள்ளது. ரஷ்யாவின் பல்வேறு ஊர்திகளும் இங்கே காணப்படுகின்றன. இவற்றில் 25 ஆண்டுகளுக்கு முன் வாங்கிய தீ அணைப்பு வண்டி ஒன்று குறிப்பிடத்தக்கது.

**'டிங்கி' என்றால் என்ன?**

அதோ, ஒருகுளம் தெரிகிறது!

ஒரு வீரர் குளக் கரையிலே நிற்கிறார். அவருடைய தோளில் ஒரு தோல் பை இருக்கிறது. திடீரென குளத்தில் குதிக்கிறார், தோல் பையைத் தண்ணீரில் போட்டதும் 'டப்'பென்ற சத்தத்துடன் பை திறந்து கொள்கிறது. உடனே ஒரு வட்ட வடிவ ரப்பர் படகு தயாராகி விடுகிறது! படகில் ஏறி உட்கார்ந்து கொண்டு, படகைச் செலுத்திக் கொண்டு செல்கிறார் அந்த வீரர்.

'நாட்' விமானத்தின் பல்வேறு பகுதிகள் பற்றித் தெரிந்து கொள்கின்றனர் மாணவர்கள்.



இந்தப் படகுக்குப் பெயர்தான் 'டிங்கி' ( Dinghy ) என்பது ஒரு பாதுகாப்புப்படகு ஆகும். இதனை மடித்து ஒரு தோல் பைக்குள் அடக்கிவிடலாம்!

பாரசூட்டிலிருந்து குதிப்பவர்கள் தப்பித் தவறிக் கடலில் விழுந்து விட்டால், இந்த 'டிங்கி' அவர்களுக்குக் கை கொடுத்து உதவும். இதன் மூலம் அவர்கள் ஆபத்து இல்லாமல் தப்பி விடலாம். 'டிங்கி'களில் பலவகைகள் உள்ளன.

ஒருவர் செல்லும் டிங்கி, இருவர் செல்லும் டிங்கி, ஐவர் செல்லும் டிங்கிகள் இருக்கின்றன. அதுமட்டுமா? 20 பேர் செல்லும் ராட்சத 'டிங்கி'யும் உள்ளது. அந்த 'டிங்கி' எவ்வளவு அழகாய் இருக்கிறது! பட்டுத் துணியால் போர்த்தப்பட்டுள்ள அதில் உல்லாசமாய்ப் போகலாம் போல இருக்கிறது!

சென்னைக் கோட்டூர்புரத்தில், அண்மையில் பயங்கர வெள்ளம் வந்தபோது, அங்கு அடுக்குமாடிக் கட்டடங்களில் இருந்தவர்களைக் காப்பாற்றியது இந்த 'டிங்கி'கள் தான்!

இந்த டிங்கியைப் பழுதுபார்ப்பதற்கென ஒரு பிரிவே (Dinghy Repair Section) இங்கு உள்ளது.

**எதிரியைத் தாக்கிட....**

ஆவடி விமானப்படை நிலையத்தில், தொலைதூரத்தில் வரும் எதிரி விமானங்களைத் தாக்கும் 'ஏர் கிராஃப்ட்' ( Air Craft ) துப்பாக்கி உள்ளது.

விமானமோட்டிகள் அணிந்து கொள்ளும் உடைகள், காலணிகள் முதலானவையும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. சாதாரணமான விமானமோட்டிக்கும், பனிப் பிரதேசங்களில் செல்லும் விமானமோட்டிக்கும் எனத் தனித் தனி உடைகள், காலணிகள் தயாரிக்கப்படுகின்றன. இவற்றை அணிந்து கொண்டு ஜம்மென்று நின்றிருந்த இரு பைலட்டுகளை நேரில் காண முடிந்தது.

இவ்வாறு, நாட்டுக்கும் வீட்டுக்கும் நற்பெயரைத் தேடித் தரும் வகையில், தாய்நாடு காக்க எண்ணற்ற வீரர்களைத் தயார்ப்படுத்தும் அரிய பெரிய நிலையங்களாக விளங்கிடும் இவையிரண்டும், நம் நாட்டின் கண்கள் என்று பெருமிதத்துடன் சொல்லிக் கொள்ள வேண்டும்.

— பி. வி. கிரி

# உணவுக் கலப்படம் பெரிய குற்றமாகும்-- அது கொலைக்கு சமம்

விற்பனைக்கான உணவில் கலப்படம் செய்பவர் பெரும் லாபம் சம்பாதிப்பதோடு பெரும் குற்றத்தையும் செய்கிறர்.

## இவ்வாறு செய்யும் குற்றம் :

உங்கள் உடல்நலத்தை பாதிக்கிறது. நல்லெண்ணெய் அல்லது கடுகெண்ணெயுடன் கனிஸ எண்ணெய் கலக்கப்படும் பட்சத்தில் கண் குருடாகும், அல்லது இருதய நோய்கள் ஏற்படும். பாதிக்கப்படுவது யார் ? நீங்கள் தான் !

மிளகாய்ப் பொடியில் மரத்தூள் கலக்கப்படுகிறது. இதனுல் பாதிக்கப்படுவது யார் ? நீங்கள் தான் !

பாலில் அசுத்த தண்ணீர் கலக்கப்படும்போது பாதிக்கப் படுவது யார் ? நீங்கள் பெற்றெடுத்த செல்லக் குழந்தை கள்தான் !

## உணவுக் கலப்படத்தை எதிர்த்து போராடவேண்டும்

இந்தக் குற்றவாளிகளை எதிர்க்கும் வழிகளும் உள்ளன :—

i) உணவுப் பொருள்களைப் பரிசோதனை செய்ய முடியும். (சுலபமாக வீட்டிலேயே இந்தச் சோதனைகளைச் செய்யலாம்).

ii) உணவு ஆய்வாளர்கள் / சுகாதார ஆய்வாளர் களின் உதவி உங்களுக்குக் கிடைக்கிறது. அவர்களின் உதவியைக் கோரலாம்.

iii) பரிசோதனைக் கூடங்களில் உணவுப் பொருள் களை ஆராயலாம். (செலவு அதிகமிருக்காது).

## தண்டனை

உணவுக் கலப்பட தடுப்புச் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை வரை கிடைக்கும்.

ஆனுல், இந்தச் சட்டப் பாதுகாப்பை மக்கள் பயன் படுத்திக் கொள்ளவேண்டும்.

## குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

| உணவுப்பொருளின் பெயர் | கலக்கப்படும் பொருள் | கலப்படம் செய்யப்பட்டுள்ளதா என்பதை கண்டறியும் பரிசோதனை |
|---|---|---|
| நெய்/வெண்ணெய் | வனஸ்பதி | * ஒரு தேக்கரண்டியளவு உருகிய நெய் அல்லது வெண்ணெயை ஒரு ட்யூபில் எடுத்துக் கொண்டு அதில் அதே அளவு ஹைட்ரோ குளோரிக் ஆசிடை கலக்கவும். கரும்பு சர்க்கரையும் சிறிது அதில் போடவும். ஒரு நிமிடம் நன்ருகக் கலக்கவும் பின்னர் ஐந்து நிமிடம் அப்படியே இருக்கட்டும், டெஸ்ட் டியூபின் அடிப்பாகத்தில் செந்நிறம் தெரிந்தால் அந்த நெய்யுடன் அல்லது வெண்ணெயுடன் வனஸ்பதி கலந்திருக்கிறது என்று பொருள். |
| பால் | தண்ணீர் | * லாக்டோ மீட்டரை பாலில் வைத்துப் பார்த்தால் 1.026க்கு குறையக்கூடாது. |
| | | * சுத்தமான சுவரில் ஒருசொட்டு பாலை பொட்டு போல் வைக்கவும். பால் மெதுவாக வெள்ளை கோடுபோல் ஓடிஞலும் அப்படியே பொட்டு போல் நின்ருலும் அந்தப் பால் கலப்படமில்லாதது. கலப்படமான பால் உடனே ஓடி எந்தவித வெள்ளை கோட்டையும் ஏற்படுத்தாது. |
| | ஸ்டார்ச் | * சிறிதளவு பாலில் டிஞ்சர் அயோடினை சிறிது விடவும். நீல வண்ணம் தெரிந்தால் அந்தப் பாலில் ஸ்டார்ச் கலந்துள்ளது என்று பொருள் |
| உணவு எண்ணெய் | ஆர்ஜ்மென் எண்ணெய் | * கான்சென்ட்ரேட்டட் நைட்ரிக் ஆசிடை சிறிது உணவு எண்ணெயில் கலந்து கவனமாக ஆட்டவும். ஆசிட் பகுதியில் சிவப்பு அல்லது சிவப்பு ப்ரௌன் நிறம் தெரிந்தால் அதில் ஆர்ஜ்மென் எண்ணெய் கலந்திருப்பதாக பொருள். |
| | கனிஸ எண்ணெய் | * தாவர எண்ணெய் இரண்டு மில்லி லிட்டர் எடுத்துக் கொள்ளவும். அதே அளவு எண்/2 அல்காஹாலிக் பொட்டேஷை சேர்க்கவும். இந்தக் கலவையை 15 நிமிடங்கள் கொதிக்கும் நீரில் சூடு செய்யவும். பின்னர் 10 மி. லி. தண்ணீரை இதில் விடவும். குமிழ விட்டுக் கொதித்தால் அதில் கனிஸ எண்ணெய் கலந்துள்ளதாக பொருள். |
| | விளக்கெண்ணெய் | * சிறிது சூடு செய்து உணவு எண்ணெயில் பெட்ரோலியத்தை கரையவிடவும். டெஸ்ட் ட்யூபிலுள்ள இதை ஐஸ் மிக்ஸர் விட்டு குளிர விடவும். 5 நிமிடத்தில் குமிலிட்டு கொதித்தால் விளக்கெண்ணெய் கலந்திருக்கிறது என்று பொருள். |
| இனிப்புகள், ஐஸ்கிரீம், சர்பத் | மெட்டானில் மஞ்சள் (நிலக்கரி தார் சாயம்) | * சோதனைப் பொருளில் கான்சென்ட்ரேட்டர் ஹைட்ரோ குளோரிக் ஆசிட் சில சொட்டுகளை விடவும். மேக்னடா சிவப்பு நிறம் உருவானுல் இதில் மெட்டானில் மஞ்சள் கலந்திருப்பதாக பொருள் |
| மஞ்சள் | மெட்டினில் மஞ்சள் | * டெஸ்ட் ட்யூபில் ஒரு தேக்கரண்டி மஞ்சளை எடுத்துக்கொள்ளவும். அதில் கான்சென்ட் ரேட்டட் ஹைட்ரோ குளோரிக் ஆசிட் சில சொட்டுகள் விடவும். ஊதா நிறம் உடனே வரும். சிறிது தண்ணீர் விட்டவுடன் அந்த நிறம் மறைந்தால் அது சுத்தமான மஞ்சள். ஊதா நிறம் அப்படியே இருப்பின் அதில் மெட்டானில் மஞ்சள் கலந்திருப்ப தாக பொருள். |

davp 77 558



# "சோளம் விதைக்கையிலே..."

தமிழகத்தில் ஒரு முக்கிய தானியப் பயிராக மானுவாரியிலும் இறைவையிலும் சுமார் 7.5 இலட்சம் எக்டேர் நிலத்தில் சோளம் பயிரிடப்பட்டு வருகின்றது. இப் பயிர் சுமார் 100க்கும் மேலான பூச்சிகளின் தாக்குதலுக்கு உள்ளாகின்றது. 1928-ஆம் ஆண்டிலிருந்தே தமிழகத்தில் சோளத்தினைத் தாக்கும் பூச்சிகளைப் பற்றிக் குறிப்பெடுத்துள்ளனர். இவையன்றி இப் பயிரினைத் தாக்கும் பல்வேறு புதிய பூச்சிகள் பற்றி அவ்வப்பொழுது தெரிவிக்கப்படுகிறது. முக்கியமாக, உயர் விளைச்சல் மற்றும் வீரிய ஒட்டு இரகங்களைப் பயிரிடுவதாலும் சில இடங்களில் ஆண்டு முழுவதும் சோளப் பயிர் காணப்படுவதாலும் இப் பயிரைத் தாக்கும் பூச்சிகள் அண்மைக் காலத்தில் அதிகரித்துள்ளன. மேலும் இதே காரணங்களால், முக்கியமற்ற சில பூச்சிகள் தற்பொழுது தமிழ்நாட்டில் பெருத்த சேதத்தை விளைவிக்கின்றன.

## குருத்து

இதன் பெயர் **அத்தெரிகோனு சொக்கேட்டா** என்பதாகும். கால்களற்ற இப் பூச்சியின் புழுக்கள் இளம் சோளப் பயிரின் குருத்துப் பாகத்தை வெட்டி அழுகச் செய்வதால் நடுக்குருத்து, வாடிக் காணப்படும். சோளம் பயிரிடும் தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் இப் பூச்சியின் தாக்குதல் காணப்படுகின்றது. குருத்து ஈயின் தாக்குதல் 40 லிருந்து 100 சதம், அதுவும் ஜூலை—டிசம்பர் திங்கள்களில் காணப்படுகின்றது. காரிஃப் பருவத்தில் ( ஜூலை-டிசம்பர் ) சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களிலும், ராபி பருவத்தில் (அக்டோபர்-ஏப்ரல்) திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களிலும் குறிப்பாக தாமதமாக விதைக்கும் சோளப் பயிரில் குருத்து ஈயின் தாக்குதல் மிக அதிகம். கோவை மாவட்டத்தில் ஜூலை மாதத்திற்குப் பிறகு விதைக்கும் பயிரின் சோளக் குருத்து ஈயின் தாக்குதல் அதிகமாகவும் கோடையில் பிப்ரவரியில் விதைக்கும் பயிரில் மிக மிகக் குறைவாகவும் உள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது. எல்லா உயர் விளைச்சல் ரகங்கள் கூட இதன் தாக்குதலுக்கு உள்ளாகின்றன.

## தண்டு துளைப்பான்

இப் பூச்சி **கைலோ பார்டெல்லஸ்** என அழைக்கப்படும். இதன் புழுக்கள் இலையின் பச்சையத்தைச் சுரண்டித் தின்று பின் தண்டின் உட்பாகத்தைத் துளைத்துச் சேதத்தை விளைவிக்கின்றன. தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் இவை காணப்பட்ட போதிலும், கோவை மாவட்டத்தில், குறிப்பாக, கோடைக் காலப் பயிரில் அதிக அளவு சேதம் விளைவிக்கின்றன. மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சி முதலிய மாவட்டங்களில் 5லிருந்து 10 சதவிகிதம் வரை இப் பூச்சியின் சேதம் காணப்படுகின்றது. 1975 ஆம் ஆண்டு பொள்ளாச்சிப் பகுதியில் கோடையில் விதைத்த சி.எஸ்.எச். 5, ஐ.எஸ். 3541 முதலிய இரகங்களில் இந்தத் தண்டுப் புழுவினால் பெருத்த சேதம் ஏற்பட்டது; தொடர்ந்து பலதடவை சோளம் பயிரிட்டதே அதற்குக் காரணமாகும்.

## கதிர்க் கொசு

இந்தக் கதிர்க் **கொசு கண்டாரினியா சொர்க்கிகோலா** என அழைக்கப்படுகின்றது. சோளம் பயிரிடும் எல்லாப் பகுதிகளிலும் அக்டோபர் மாதம் விதைக்கும் பயிரிலும் தாமதமாக விதைக்கும் கோடைப் பயிரிலும் இப் பூச்சியின் சேதம் மிக அதிகம். இப் பூச்சியின் கால்களற்ற புழுக்கள் பூவின் உட் பாகத்தை உண்டு தானியங்களைப் பிடிக்காமல் தடுத்து விளைச்சலைப் பாதிக்கும். திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில் 1975-ஆம் ஆண்டு அக்டோபரில் விதைத்த பயிரின் ஐ. எஸ். 3541, சி.எஸ்.எச். 5, சி. எஸ். 3541 ஆகிய இரகங்களில் இதன் தாக்குதல் அதிகமாகக் காணப்பட்டது. எல்லாப் பகுதிகளிலும் இப் பூச்சியின் தாக்குதல் இருந்த போதிலும் கோவை மாவட்டத்தில் சற்று அதிகமாக இருக்கின்றது. இதனால் 15 லிருந்து 20 சதவிகிதம் வரை மகசூல் பாதிப்பு எற்பட்டுள்ளது,

## கதிர் நாவாய்ப் பூச்சிகள்

**கலகோரிஸ் அங்குஸ்டேட்ஸ், கிரியோஸ்டியாடெஸ் பாஸ்டிபர்**



ஆகிய இரண்டு நாவாய்ப் பூச்சிகளும் இப் பயிரின் கதிர்களைத் தாக்குகின்றன. சித்திரை சோளப் பயிரிலும் (ஏப்ரல்-ஜூன்), மானாவாரிப் பயிரிலும் (ஆகஸ்டு-ஜனவரி) இதன் சேதம் பொதுவாக அதிக அளவு காணப்படும். மணிகளில் பால் பிடிக்கும் தருணத்தில் சாற்றை உறிஞ்சி அவற்றைச் சப்பைகளாக்கி விடும். மணிகள் நெருக்கமாக உள்ள கெட்டிக் கதிர்களே தலைவிரித்த சோளக் கதிர்களை விட அதிக சேதத்திற்குள்ளாகின்றன.

## சேலம் உருக்காலையில் 1981ல் உற்பத்தி துவங்கும்!

சேலம் உருக்காலையில் 1981 இறுதியில் உற்பத்தி துவங்குமென்றும், உருக்காலையை அமைப்பதன் முதல் கட்டவேலை தற்போது நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும், மத்திய உருக்கு, சுரங்க அமைச்சர் பிஜூ பட்நாயக் கூறினார்.

இந்த முதல்கட்டப்பணிக்கு 126.81 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டிருப்பதாகவும், இரண்டாவது கட்டத்தில் 433.19 கோடி ரூபாய் செலவாகக்கூடுமென்றும் ஆனால், இதுபற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

முதல் கட்டவேலை முடிந்தவுடன் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 32 ஆயிரம் டன் அளவுக்கு எவர்சில்வர் தகடுகள், பட்டைகள் உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும், இரண்டாவது கட்டத்தில் விசேஷ உருக்குப் பொருட்கள் உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமென்றும் அவர் கூறினார்.

### கதிர்ப் புழுக்கள்

துவரைக் காய்ப்புழு, காவடிப் புழு, கதிர்ப் பிணைக்கும் புழு ஆகியவை தாக்கிய போதிலும், துவரைக் காய்ப்புழு கதிர்களில் தானியங்கள் முதிர்ச்சியடையும் பருவத்தில் கடித்துத் தின்று பெருத்த சேதத்தை ஏற்படுத்துகின்றன. 1975ஆம் ஆண்டு கோவை மாவட்டத்தில் ஆடி மாதத்தில் விதைத்த பயிரில் இதன் தாக்குதல் அதிகமாகத் தென்பட்டது.

### பயிர்ச் சிலந்தி

இது ஒலிகோனிகஸ் இண்டிகஸ் என அழைக்கப்படும். கோவை, வட ஆர்க்காடு, சேலம், மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் இது பரவலாகக் காணப்படுகின்றது. அண்மைக் காலத்தில் இதன் தாக்குதல் மிக அதிகமாகக் காணப்பட்டு, பெருத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

இவை தவிர, கீழே குறிப்பிட்ட பூச்சிகளும் சோளம் பயிரிடும் பகுதிகளில் இருப்பது அறியப்பட்டுள்ளது. இளம் பயிரில் சாம்பல் நிற வண்டு, தத்தும் வண்டுகள், இலைப் பேன், தத்துப் பூச்சி, அசுவுணி, நிதைத்துப் பூச்சி ஆகிய பூச்சிகள் காணப்பட்டன. விதைத்த ஒரு மாதத்திற்குப் பிறகு தண்டு துளைப்பானைப் போன்று சிர்பிஸ் மணிபங்க்டா இப் பயிரைத் தாக்குகிறது. பூக்கும் பருவத்திற்கு முன்பு சைத்துபிஸ் கிராமினம் எனப்படும் பச்சை நிற அசுவுணி இலைகள் அடிப்பகுதிகளில் கும்பல் கும்பலாகப் பெரும் அளவில் காணப்பட்டன. கதிர்ப் பருவத்தில் லேகஸ், ஆக்னிகேரனஸ்,




பழுப்பு நிற அசுவுணி, பச்சை நாவாய்ப் பூச்சி ஆகிய தத்துப் பூச்சிகளும் சோளப் பயிரைத் தமிழகத்தில் தாக்கியுள்ளன. குறிப்பாக, பழுப்பு நிற அசுவுணி கதிர்த் தண்டுப் பகுதியில் பெருங் கூட்டமாக இருந்து சாற்றை உறிஞ்சி உண்பது கோவை மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் அறியப்பட்டது.

முக்கியமான தானியப் பயிர்களில் சோளமும் ஒன்று. இப் பயிரினைப் பூச்சிகள் தாக்கிச் சேதப்படுத்தி விடாமல், வேளாண் பெருங்குடி மக்கள் மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும். பாடுபட்ட பலன்கள் முழுமையாக அடைய முடியாமல்—உழைப்பு அத்தனையும் விழலுக்கு இறைத்த நீராகி விடக் கூடாதல்லவா?

தகவல் :
ம. மணி
ம. சே. வேணுகோபால்,
பூச்சியியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்.




# இரட்டைக் குழல் துப்பாக்கிகள்

சென்னை அரசினர் அரும்பொருட் காட்சியகத்தில் போர்க் கருவிகளின் கூடத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பலவிதத் துப்பாக்கிகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கெல்லாம் கிரீடமாக, தற்போது கிடைக்கப் பெற்ற "இரட்டைக் குழாய் துப்பாக்கிகள்" அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

### *பெல்ஜியம் நாட்டு இரட்டைக் குழல் துப்பாக்கி*

இத் துப்பாக்கி புதியதொரு மாறுபட்ட அமைப்பை உடையது. இதன் இரு குழல்களும் ஒன்றின் மீது ஒன்றாக அமைக்கப்பட்டுள்ளன. மேதகு பெல்ஜியம் நாட்டு மன்னர் 1969-ஆம் ஆண்டு தமிழ்நாட்டுக்கு வருகை தந்தபோது இந்த அருங்காட்சியகத்திற்குப் பரிசாக இதை வழங்கினார்.

### *பல்கேரியா நாட்டு இரட்டைக் குழல் துப்பாக்கி*

இத் துப்பாக்கியின் இருகுழல்களும் ஒன்றையடுத்து ஒன்று அமைந்துள்ளன. 1967-ஆம் ஆண்டு பல்கேரியா மக்கள் குடியரசின் அமைச்சர் குழுவின் உதவித் தலைவர் மேதகு திருடாளோட்ஸ்லோவ் அவர்களால் இவ்வருங்காட்சியகத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

### *சரித்திரப் புகழ் பெற்ற இரட்டைக்குழல் துப்பாக்கி*

இத்துப்பாக்கி மருந்தடைக்கும் வகையைச் சார்ந்தது. ஹைதர் அலி, திப்புசுல்தான் காலத்தில் உபயோகிக்கப்பட்டது. 1977-ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்திலுள்ள காட்டில் அம் மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளரால் கைப்பற்றப்பட்டது. இத் துப்பாக்கியில் பல பித்தளை வளையங்கள் வேட்டையின் வெற்றிச் சின்னங்களாகப் பொருத்தப்பட்டுள்ளன.

### *தங்க வேலைப்பாடமைந்த இரட்டைக் குழல் துப்பாக்கி*

1823-ஆம் ஆண்டு கிழக்கு இந்தியக் கம்பெனியாரால் இத்துப்பாக்கி தஞ்சாவூர் சரபோஜி மன்னருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இதன் மரப்பகுதியும் குழாய்ப்பகுதிகளும் தங்கத்தால் ஆன பூவேலைப் பாடுகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. இதன் மேல் பாகத்தில் தங்க எழுத்துக்கள் காணப்படுகின்றன.

### *சிறப்பு மிக்க நான்கு குழல் துப்பாக்கி*

இத் துப்பாக்கியின் சிறப்பு இதில் அமைக்கப்பட்டிருக்கும் நான்கு குழாய்களே ஆகும். 1967-ஆம் ஆண்டு, திருநெல்வேலி எட்டையபுரம் ஜமீன்தார் திரு ஆர். ஜே. எம். வி. எல்லப்பன் அவர்களால் இவ்வருங்காட்சியகத்திற்கு இது பரிசாக வழங்கப்பட்டது.

# காற்று நிகர் மென்மை
# வண்ணத்துப் பூச்சியின்
# எழில் வண்ணம்

## கோ-ஆப்டெக்ஸ்

அச்சிட்ட நூல் சேலைகள்

உண்மைதான்! மென்மையான அச்சிட்ட நூல் சேலைகள்—நவீன டிசைன்கள்—யமுனா, அஜந்தா, சாமுண்டி-உள்ளங்கவர் வகைகள்—பரவசமூட்டும் வண்ணங்கள். கோ-ஆப்டெக்ஸ் அச்சிட்ட சேலைகள் இன்றைய நாகரீகமாகத் திகழ்பவை!



கைத்தறியே
வண்ணத்துப்பூச்சி

# நீரிழிவு நோயாளிகளுக்கு உணவு முறைகள்

[நீரிழிவு நோய் பற்றிய கட்டுரை சென்ற இதழில் இடம் பெற்றிருந்தது. அந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய உணவு முறைகள் இங்கு இடம் பெறுகின்றன]

## உணவு முறை 1

கனத்த சரீரம் கொண்ட நீரிழிவு உள்ளவர்களுக்கும் மற்றும் தங்கள் எடையைக் குறைக்க எண்ணுகிறவர்களுக்கும் 1,200 கலோரி தேவைப்படும்.

(கார்போ ஹைட்ரேட் சுமார் : 150 கிராம், புரோட்டீன் 50 கிராம், கொழுப்புச் சத்து 40 கிராம்).

### சைவ உணவு கொள்வோர் களுக்கு:

*காலை 6 மணி*

டீ அல்லது காபி—சர்க்கரை இல்லாமல்—ஒரு கப் (100 மில்லி அல்லது அரை கப் பால் உபயோகிக்க வேண்டும்).

*காலைச் சிற்றுண்டி 8 மணி*

இட்லி பெரியது —1 அல்லது சிறியது —2 அல்லது தோசை—1 (அரிசி, ராகி அல்லது கோதுமை) உப்புமா முக்கால் கப், அல்லது பொங்கல் முக்கால் கப், அல்லது ரொட்டி 1 துண்டு (1 அங். கனம்). இவற்றுடன் உளுந்து வடை—1. சாம்பார் அரை கப். (காபி, டீ கூடாது).

*முற்பகல் 11 மணி*

காய்கறி அரை வேக்காடு—அல்லது பச்சையாக (வெள்ளரி, தக்காளி). மோர் —1 கப். (அல்லது— டீ அல்லது காப்பி—சர்க்கரை இல்லாமல்—1கப்—அல்லது — ஆரஞ்சுப் பழ ரசம்—சர்க்கரை இல்லாமல் —ஒரு கப்.

*மதிய உணவு 1 மணி*

சாதம், பச்சரிசி அல்லது புழுங்கல் அரிசி—1 கப் அல்லது சமைத்த கோதுமை சாதம்—1 கப் அல்லது சப்பாத்தி—1 (தானிய வகைகள் உபயோகிக்க வேண்டிய அளவு 1 அவுன்ஸ் அல்லது 30 கிராம் வேக வைப்பதற்கு முன்னர்).

சாம்பார்—கால் கப். கீரை வகைகள் சுமார் அரை கப் (4 அவுன்ஸ்). காய்கறி கூட்டு அல்லது பொரியல் — அரை கப். தயிர் — 1 கப் (100 மில்லி) அல்லது மோர் — 2 கப், ரசம் — அரை கப். சுட்ட அப்பளம் ஒன்று, கொஞ்சம் ஊறுகாய்.

வாழைப்பழம் அல்லது பழ வகைகள் கூடாது.

*மாலை 5 மணி*

டீ அல்லது காபி (சர்க்கரை கூடாது) —1 கப்.

*இரவு 8 மணி*

பகல் உணவு போன்றதே.

*இரவு 10 மணி*

பால் கூடாது.

நல்லெண்ணெய் : எல்லா பலகாரங்கள் தயாரிப்பு உபயோகத்திற்கும் ஒரு நாளைக்கு 5 டீ ஸ்பூன் அல்லது அரை அவுன்ஸ்.

### அசைவ உணவு கொள்வோர் களுக்கு:

*காலை 6 மணி*

மரக்கறி இனக் குறிப்புப் போல்.

*காலைச் சிற்றுண்டி 8 மணி*

மரக்கறி இனக் குறிப்புப் போல்.

*முற்பகல் 11 மணி*

மரக்கறி இனக் குறிப்புப் போல்.

*மதிய உணவு 1 மணி*

ஆட்டுக்கறி கால் கப் குழம்புடன் 2 சிறிய துண்டு. ஆட்டுக்கறி அல்லது மீன் கறி, (சிறிய மீன்) அல்லது முட்டைக் கறி (அரை முட்டை). தயிர் கூடாது. (சிறிதளவு மோர் கொள்ளலாம்). இதர இனங்கள் மரக்கறி இனக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது போல்.

*மாலை 5 மணி*

மரக்கறி இனக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டிருப்பது போல்.

*இரவு 8 மணி*

இரவில் புலால் வகைகள் கூடாது.

## உணவு முறை 2

மிகவும் விரும்பத்தக்க எடையைக் கொண்ட குடும்பப் பெண்களுக்கும் அந்த எடையையே பராமரிக்க விரும்புவோர்க்கும் 1,500 கலோரி தேவைப்படும். (கார்போ ஹைட்ரேட் : 200 கிராம்), புரோட்டீன் : 60 கிராம், கொழுப்பு : 40 கிராம்).

### சைவ உணவு கொள்வோர் களுக்கு:

*காலை 6 மணி*

டீ அல்லது காபி (சர்க்கரை இல்லாமல்) 1 கப். (பால் கால் கப் அல்லது 100 மில்லி).

*காலை 8 மணி*

சிற்றுண்டி: பெரிய இட்லி—1 அல்லது சிறியது—2 அல்லது தோசை — 1 (அரிசி ராகி அல்லது கோதுமை) அல்லது உப்புமா—முக்கால் கப் அல்லது பொங்கல் முக்கால் கப் அல்லது ரொட்டி —1 துண்டு (1 அங்குல கனம்), உடன் உளுந்து வடை —1, சாம்பார்—அரை கப், காபி அல்லது டீ, (சர்க்கரை இல்லாமல்)—1 கப்.

*முற்பகல் 10 மணி*

காய்கறி அரை வேக்காடு அல்லது பச்சடி, தக்காளி, வெள்ளரிக்காய்.

*பிற்பகல் 1 மணி*

பச்சரிசி அல்லது புழுங்கல் அல்லது கோதுமை உணவு—1.5 கப். சாம்பார்—கால் கப். கீரை வகைகள்—சுமார் அரை கப் (4 அவுன்ஸ்). காய்கறிக் கூட்டு அல்லது பொரியல்—அரை கப் (4 அவுன்ஸ்). ரசம் —அரை கப். தயிர்—அரை கப் அல்லது மோர்—2 கப். சுட்ட அப்பளம்—1அல்லது 2. கொஞ்சம் ஊறுகாய்.

வாழைப்பழம் அல்லது பழ வகைகள் கூடாது.

*மாலை 5 மணி*

உப்பு பிஸ்கட்—2 அல்லது சிறிய வடை—1. டீ அல்லது காபி (சர்க்கரை இல்லாமல்)—1 கப்.

*இரவு 8 மணி*

மதிய உணவு போல் (சப்பாத்தி—2 சிறியது சாதத்திற்குப் பதிலாக).

*இரவு 10 மணி*

பால் (சர்க்கரை இல்லாமல்)—அரை கப்.

### அசைவ உணவு கொள்வோர் களுக்கு:

*காலை 6 மணி*

மரக்கறி இன வகைகளில் தெரிவிக்கப் பட்டது போல்.

*காலை 8 மணி*

மரக்கறி இன வகைகளில் தெரிவிக்கப் பட்டது போல.

*முற்பகல் 11 மணி*

மரக்கறி இன வகைகளில் தெரிவிக்கப் பட்டது போல.

*பிற்பகல் 1 மணி*

ஆட்டுக்கறி—கால் கப் குழம்புடன் 2 சிறிய கறித் துண்டுகள் அல்லது மீன் அல்லது அரை முட்டை. தயிர் கூடாது. ஒரு கப் மோர் கொள்ளலாம். மற்றவை மரக்கறி இனத்தைப் போலவே.

*மாலை 5 மணி*

மரக்கறி இனத்தில் உள்ளது போல்.

*இரவு 8 மணி*

1.5 கப் சாதம் அல்லது இரண்டு சப்பாத்தி, காய்கறிகள், பொரியல் அரை கப். ஆட்டுக்கறி அல்லது மீன்—மதிய உணவில் சேர்க்கப்பட்ட அளவு போல், சாம்பார்—கால் கப். ரசம்—அரை கப், மோர்—1 கப்.

வாழைப்பழம் அல்லது பழ வகைகள் கூடாது.

*இரவு 10 மணி*

சர்க்கரை இல்லாமல், பால் —அரை கப்.

## உணவு முறை 3

உட்கார்ந்தவாறே செய்யும் உடற் பயிற்சி இல்லாத வேலையில் ஈடுபட்டுள்ள மிகச் சிறந்த எடையைக் கொண்ட, அந்த எடையையே பராமரிக்க விரும்பும் ஆடவருக்கு 1,800 கலோரிகள் தேவைப்படும். (கார்போ ஹைடிரேட் : சுமார் 250 கிராம், புரோட்டீன்: 65 கிராம், கொழுப்பு 50 கிராம்கள்).

### சைவ உணவு கொள்வோர் களுக்கு:

காலை 6 மணி

சர்க்கரை இல்லாமல் டீ அல்லது காபி —ஒரு கப். (பால் அரை கப் அல்லது 100 மில்லி).

காலைச் சிற்றுண்டி 8 மணி

இட்லி பெரியது —2 அல்லது சிறியது —4 அல்லது தோசை—2 (அரிசி, ராகி அல்லது கோதுமை) அல்லது உப்புமா—1.5 கப் அல்லது பொங்கல்—1.5 கப் அல்லது ரொட்டி—2 துண்டுகள். வடை —1. சாம்பார்—அரை கப். டீ அல்லது காபி, சர்க்கரை இல்லாமல்—1 கப்.

முற்பகல் 11 மணி

அரைவேக்காடு காய்கறிகள் அல்லது தக்காளி, வெள்ளரிக்காய்.

பிற்பகல் 1 மணி

சமைக்கப்பட்ட பச்சரிசிச் சாதம் அல்லது புழுங்கல் அரிசிச் சாதம் அல்லது கோதுமை சாதம்—2 கப். அல்லது சப்பாத்தி—2. சாம்பார் — அரை கப். கீரை, கூட்டு அல்லது பொரியல்—அரை கப் (4 அவுன்ஸ்), காய்கறிக் கூட்டு அல்லது பொரியல் — அரை கப் (4 அவுன்ஸ்). தயிர்—அரை கப் அல்லது மோர் 2 கப். சுட்ட அப்பளம்—2. கொஞ்சம் ஊறுகாய். வாழைப்பழம் கூடாது. சிறிய ஆரஞ்சு சாப்பிடலாம்.

மாலை 5 மணி

டீ அல்லது காபி, சர்க்கரை இல்லாமல் —1 கப். உப்பு பிஸ்கட்டுகள்—2 அல்லது போண்டா—2 அல்லது வடை—1.

இரவு 8 மணி

மதிய உணவு போல.

இரவு 10 மணி

பால், சர்க்கரை இல்லாமல்—1 கப்.

### அசைவ உணவு கொள்வோர் களுக்கு:

காலை 6 மணி

மரக்கறி இனங்களைப் போல.

காலைச் சிற்றுண்டி 8 மணி

மரக்கறி இனங்களைப் போல.

முற்பகல் 11 மணி

மரக்கறி இனங்களைப் போல.

பிற்பகல் 1 மணி

ஆட்டுக்கறி—கால் கப் குழம்புடன் 4 சிறிய துண்டுகள் கறி அல்லது ஒரு துண்டு மீன் அல்லது ஒரு முட்டை. தயிர் கூடாது. பதிலாக மோர் சேர்க்கலாம். மற்றவை மரக்கறி இனங்கள் போலவே.

மாலை 5 மணி

மரக்கறி இனத்தில் தெரிவிக்கப்பட்டது போல.

இரவு 8 மணி

மதிய உணவு போல.

இரவு 10 மணி

பால், சர்க்கரை இல்லாமல்—1 கப்.

## உணவு முறை 4

சுறுசுறுப்பாக வேலை செய்யும், உயரத்திற்கு ஏற்பச் சிறந்த எடையைக் கொண்ட ஆடவருக்கும் கருவுற்ற தாய்மார்களுக்கும் 2,100 கலோரிகள் தேவைப்படும்.

(கார்போ ஹைட்ரேட் சுமார் 285 கிராம், புரதச் சத்து 76 கிராம், கொழுப்பு சுமார் 60 கிராம்).

### சைவ உணவு கொள்வோர் களுக்கு:

காலை 6 மணி

சர்க்கரை இல்லாமல் டீ அல்லது காபி —ஒரு கப். (பால்—அரை கப் அல்லது 100 மில்லி).

காலைச் சிற்றுண்டி 8 மணி

இட்லி பெரியது—2 அல்லது சிறியது —4 அல்லது தோசை—2 (அரிசி, ராகி அல்லது கோதுமை). உப்புமா 1.5 கப் அல்லது ரொட்டி—2 துண்டு. வெண்ணெய் அரை அவுன்ஸ். வடை—1. சாம்பார்—அரை கப். டீ அல்லது காபி (சர்க்கரை இல்லாமல்)—1 கப்.

முற்பகல் — 11 மணி

சர்க்கரையில்லாமல் பால்—1 கப். அல்லது மோர்—10 அவுன்ஸ். சர்க்கரையில்லாமல் ஆரஞ்சு ரசம்—8 அவுன்ஸ். காய்கறி அரைவேக்காடு அல்லது பச்சையாக. தக்காளி, வெள்ளரிக்காய்.

பகல் உணவு 1 மணி

சமைக்கப்பட்ட பச்சரிசிச் சாதம் அல்லது புழுங்கல் அரிசிச் சாதம் அல்லது கோதுமை சாதம்—2 கப் அல்லது சப்பாத்தி—2. நெய் — கால் அவுன்ஸ். சாம்பார் —அரை கப். கீரை, கூட்டு அல்லது பொரியல்—அரை கப். (4 அவுன்ஸ்). காய்கறிக் கூட்டு அல்லது பொரியல்—அரை கப். சுட்ட அப்பளம்—2. தயிர்—அரை கப் அல்லது மோர் — 2 கப். மலைவாழைப் பழம்—1 அல்லது ஆப்பிள் — அரை (அவுன்ஸ்).

மாலை 5 மணி

உப்பு பிஸ்கட்டுகள்—2 அல்லது போண்டா அல்லது வடை—1, சிறிது சட்னியுடன்.

சர்க்கரை இல்லாமல் காபி அல்லது டீ.

## தமிழில் பிறமொழிநூல்கள்

பிற மொழி நூல்களில் சிறந்தவற்றைத் தமிழில் வெளியிடுவதற்கும், அரிய தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் வெளியிடுவதற்கும் ஒரு திட்டத்தைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்காக ஒரு குழு அமைக்கப்படுகிறது. தமிழ் வளர்ச்சி இயக்குநர் அதன் தலைவர். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர், ஆட்சி மொழிக் குழுவின் தலைவர், சாகித்ய அகாடெமியின் மண்டலத் தலைவர் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினராக இருப்பர். இக்குழு, முதலில் இத்துறையில் இது வரை இவ்வாறு வெளிவந்துள்ள மொழிபெயர்ப்பு நூல்களைப் பற்றிய விவரங்களைத் தொகுத்து, இனிமேல் ஆற்றவேண்டிய பணி குறித்து முடிவு செய்யும். கவனமான ஆய்வுக்குப் பின் எந்தெந்த நூல்களை இந்த மொழி பெயர்ப்புப் பணிக்கு எடுத்துக் கொள்ளலாம் என்பது குறித்து முடிவு செய்து, அவற்றைத் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் மூலமாக வெளியிடும்.

இரவு 8 மணி

பகல் உணவு போலவே.

இரவு 10 மணி

சர்க்கரையில்லாமல் பால் —1 கப்.

### அசைவ உணவு கொள்வோர் களுக்கு:

காலை 6 மணி
மரக்கறி இனக் குறிப்புப் போல.

காலை 8 மணி
வடைக்குப் பதிலாக ஒரு முட்டை.

முற்பகல் 11 மணி

சைவ உணவுக் குறிப்புப் போல.

பகல் 1 மணி

தயிருக்குப் பதிலாக இறைச்சி; மற்றவை சைவ உணவுக் குறிப்புப் போல.

மாலை 5 மணி

சைவ உணவுக் குறிப்புப் போல.

இரவு 8 மணி
பகல் உணவு போல.

இரவு 10 மணி
சர்க்கரையில்லாமல் பால்—1 கப்.

(எல்லாச் சமையலுக்கும் நல்லெண்ணெய்யை ஒரு நாளைக்கு 1 அவுன்ஸ் அல்லது பத்துத் தேக்கரண்டி அளவு மட்டுமே பயன்படுத்த வேண்டும்).

## உணவு முறை 5

தேவையான அளவுக்கு எடையில்லாமல் குறைந்த எடையுள்ளவர்களுக்கும் தேவையான அளவுக்கு வளர வேண்டிய பருவத்தினருக்கும், பெரும்பாலும் இன்சுலின் ஊசி போட்டுக் கொள்பவருக்கும் 2,400 கலோரிகள் தேவைப்படும்.

(கார்போ ஹைட்ரேட் சுமார் 300 கிராம், புரொட்டீன் சுமார் 100 கிராம்' கொழுப்பு—75 கிராம்.)

### சைவ உணவு கொள்வோர் களுக்கு:

காலை 6 மணி

சர்க்கரையில்லாமல் காபி அல்லது டீ —1 கப் (பால் முக்கால் கப் அல்லது 150 மில்லி பயன்படுத்தலாம்).

காலைச் சிற்றுண்டி 8 மணி

இட்லி பெரிய அளவு—2 அல்லது சிறியது—4 அல்லது உப்புமா 1.5 கப் அல்லது பொங்கல் 1.5 கப் அல்லது ரொட்டித் துண்டுகள்—2. வெண்ணெய்—அரை அவுன்ஸ். சர்க்கரையில்லாமல் காபி அல்லது டீ—1 கப் (பால் அரைக் கப் அல்லது 100 மில்லி பயன்படுத்த வேண்டும்).

முற்பகல் 11 மணி

காய்கறி அரை வேக்காடு. சர்க்கரையில்லாமல் பால் 1 கப் அல்லது மோர்—10 அவுன்ஸ் அல்லது சர்க்கரையில்லாமல் ஆரஞ்சு ரசம்—8 அவுன்ஸ்.

பகல் உணவு 1 மணி

சாதம் பச்சை அரிசி அல்லது புழுங்கல் அரிசி அல்லது சமைத்த கோதுமை சாதம் —2 கப். அல்லது சப்பாத்தி—2. நெய்—கால் அவுன்ஸ் அல்லது 2 தேக்கரண்டி. சாம்பார் —அரைக் கப். கீரை—அரை கப். காய்கறிக் கூட்டு அல்லது பொரியல் —அரை கப் (அவுன்ஸ் 4). ரசம்—1 கப். சுட்ட அப்பளம் 2 அல்லது 3; கொஞ்சம் ஊறுகாய். தயிர்—1 கப் அல்லது 200 மில்லி. வாழைப்பழம் 1 அல்லது ஆப்பிள் —அரை கப்.

மாலை 5 மணி

உப்பு பிஸ்கட்டுகள் 4 அல்லது வடை —2 (சட்னி அல்லது சாம்பாருடன்) ; சர்க்கரையில்லாமல் காபி அல்லது டீ — 1 கப்.

இரவு 8 மணி

பகல் உணவு போலவே.

இரவு 10 மணி

சர்க்கரையில்லாமல் பால் 1 கப்.

### அசைவ உணவு கொள்வோர் களுக்கு:

காலை 6 மணி

சைவ உணவுக் குறிப்புப் போல.

காலை 8 மணி

சைவ உணவுச் சிற்றுண்டி போல—கூடுதலாக ஒரே ஒரு முட்டையைச் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் ஒரே ஒரு வடை மட்டும் சாப்பிட வேண்டும்.

முற்பகல் 11 மணி

சைவ உணவுக் குறிப்புப் போல.

பகல் உணவு 1 மணி

கறி அல்லது மீன் 2 அவுன்ஸ் (கறி எட்டுச் சிறிய துண்டுகள் அல்லது மீன் துண்டு—1). மற்றவை சைவ உணவுக் குறிப்புகள் போல. ஆனால் தயிருக்குப் பதிலாக மோர் உபயோகப்படுத்த வேண்டும்.

மாலை 5 மணி

சைவ உணவுக் குறிப்புப் போல.

இரவு 8 மணி

பகல் உணவு போல.

இரவு 10 மணி
சர்க்கரையில்லாமல் பால் —1 கப்

(ஒரு நாள் முழுவதும் ஆகும் எல்லா சமையலுக்கும் நல்லெண்ணெய் 1 அவுன்ஸ் அல்லது 10 டீஸ்பூன் பயன்படுத்த வேண்டும்)

# தையலர்க்கு உதவும் தையல் கூட்டுறவுச் சங்கங்கள்

தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் தையல் கலையில் மாதர்களை ஈடுபடுத்தி அவர்களது வருவாய்க்கு உதவும் நல்ல பணியினை ஆற்றி வருகின்றன.

கடலூர் மகளிர் தையல் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஏற்பட்டு 34 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றது. முழுக்க முழுக்கப் பெண்களாலேயே நடத்தப்பட்டு, கடந்த 5 ஆண்டுக் காலமாக நல்ல இலாபத்தில் சிறப்புடன் இச் சங்கம் இயங்கி வருகிறது. சங்கத்தில் 170 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் பெரும் பாலோர் கைம்பெண்கள். கணவன்மாரை இழந்த இக் கைம்பெண்களின் கண்ணீரைத் துடைத்து அவர்களது மறு வாழ்வுக்கு வழிகாட்டி வருகிறது இச் சங்கம்.

அரசு அலுவலகங்கள், மருத்துவ மனைகள், பார்வையற்றோர் பள்ளி, நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் போன்ற நிறுவனங்களிலிருந்தும் பிற தனியார் நிறுவனங்களிலிருந்தும் தையல் வேலைக்கான ஒப்பந்தங்களைப் பெற்று அவ்வேலைகளைச் சங்க உறுப்பினர்கள் மூலம் தகுந்த முறையில் செய்து தருகிறது. தையல் வேலைக்காகப் பெறும் கூலியில் 50 சதவிகிதம், சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது.

தென்னார்க்காடு காவலர் பெண்கள் கூட்டுறவுச் சங்கம் கடலூரில் உள்ள மற்றுமொரு தையல் தொழில் கூட்டுறவுச் சங்கமாகும். இது ஏற்பட்டு 17 ஆண்டுகள் ஆகின்றன. காவல் துறை அலுவலர்களின் குடும்பப் பெண்டிர் நலனுக்காக நிறுவப்பட்டது இச் சங்கம். இம்மகளிர் தங்கள் ஓய்வு நேரங்களில் சங்கத்தின் தையல் வேலையைப் பெற்று, பணியாற்றி, வாழ்வை வளப்படுத்திக் கொள்கிறார்கள். குழந்தைகளுக்கான "ரெடிமேட்" உடைகள், ஆடவர், ஆரணங்குகள் ஆகியோரின் உடைகள் முதலியவைகளை இச் சங்கம் தயாரிக்கிறது. கொசு வலைகளை இச்சங்கம் தயார் செய்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். காவல்துறை, அரசு நிறுவனங்கள் ஆகியவற்றின் ஊழியர்களுக்கு வேண்டிய சீருடைகளையும் தைத்துத் தருகிறது. அவற்றின் மூலம் உறுப்பினர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பையும் வழங்கி உதவுகிறது. ஆரம்ப காலம் முதல் இலாபத்தில் இயங்கி வரும் இக் கூட்டுறவுச் சங்கம் ஆண்டொன்றுக்கு ரூ. 2 இலட்சத்துக்கு மேல் ஆடை விற்பனையைச் செய்கிறது. இச் சங்கத்தில் தற்போது 183 உறுப்பினர்கள் உள்ளனர்.

SIEMENS

## ஸீமென்ஸ் மோட்டாரே பம்ப்ஸெட்டின் உயிர் அன்றோ, மின்சார ஏற்றத் தாழ்வு இருப்பினும் அது உழைக்குமன்றோ!



நாட்டுப்புறங்களின் விசேட தேவைகளை மனதில் கொண்டு புகழ்வாய்ந்த ஜெர்மன் டிசைன் படி ஸீமென்ஸ் மோட்டார் உருவாக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த மோட்டார் பம்ப்ஸெட்டுகளின் இயக்கத்திற்கு மட்டுமின்றி மற்ற பல சிறு தொழில்களிலும் செயல்பட உகந்தது. தவிர, மின்சார ஏற்றத் தாழ்வு இருப்பினும், இடைவிடாது பல வருடங்கள் இயங்குகின்றன.
ஸீமென்ஸ் மோட்டாரில் விசேட இன்ஸுலேஷன் செய்யப்பட்டுள்ளதால், சூடேறியபோதும் எரிந்து போவதில்லை. வடிவத்தில் சிறிதாக இருப்பதால் பல இடங்களுக்கு எடுத்துச் செல்லவும் வசதியானது.



பம்ப்ஸெட்டின் எல்லா பாகங்களுக்கும்
—ஸீமென்ஸ்

**ஸீமென்ஸ் இந்தியா லி.**
பம்பாய் . கல்கத்தா . சென்னை
புது டில்லி . அகமதாபாத்
பெங்களூர் . ஹைதராபாத்
லக்னோ



# பத்திரிகையாளர் இங்கே உருவாகிறார்!

"காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான்! இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீதான்!
ஊரினை நாட்டை இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறி வாளர் நெஞ்சிற்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே!"

என்று பத்திரிகையின் தோற்றம் குறித்துப் பாடிய பாவேந்தர் பாரதிதாசன்,

"நறுமண இதழ்ப்பெண் ணேஉன்
நலம்காணார் ஞாலம் காணார்"

என்று பத்திரிகையின் அவசியம் குறித்து வலியுறுத்துகிறார்.

வளர்ந்து வரும் உலகத்தில் பத்திரிகைத் தொழில் மிகவும் அவசியமானதாக—ஆற்றல் மிகுந்ததாக—புகழ் வாய்ந்ததாகத் திகழ்ந்து வருகிறது.

'செய்யும் தொழிலே தெய்வம்' என்று சொல்லப்பட்டு வந்தாலும், சில தொழில்களின் பெயர்களைச் சொல்லியவுடனேயே அவற்றிற்குரிய பெருமைகள் நம் முன்னே தோன்றி நம்மைக் கவர்கின்றன அல்லவா? அத்தகைய தொழில்களில் பத்திரிகைத் தொழில் (Journalism) குறிப்பிடத்தக்கது.

இந்திய விடுதலைப் போரில் பங்கு பெற்ற பல தலைவர்கள் பத்திரிகையாளர்கள் என்பது நினைவில் கொள்ளத் தக்கது. அண்ணல் காந்தியடிகளும், நேரு அவர்களும் எழுதிய நூல்கள் ஏராளம், ஏராளம். இங்கிலாந்தின் பிரதமராக இருந்த வின்ஸ்டன் சர்ச்சில், தமது வாழ்க்கையை ஒரு பத்திரிகை நிருபராகத்தான் தொடங்கினார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், மிகப் பெரும் எழுத்தாளர் என்பதை நாடறியும். அவர் அடிக்கடி பெருமையுடன் கூறி வந்தது என்ன தெரியுமா?

"என்னை யாரும் என்ன தொழில் செய்கின்றாய் என்று கேட்டால் நான் சிறிதும் தயக்கமின்றிச் சொல்வது, நான் ஒரு பத்திரிகையாளன் (Journalist) என்பதுதான்!"



இதழ் இயல் துறைத் தலைவர்
டாக்டர் திரு. து. சதாசிவன்.

ஓர் இயக்கத்தின் தலைவராகவும் ஒரு சமுதாயத்தின் தலைவராகவும் ஒரு மாநிலத்தின் முதல்வராகவும் இருந்த அண்ணா அவர்களே தாம் ஒரு பத்திரிகையாளர் என்று கூறிக் கொள்வதைத்தான் விரும்பினார் என்றால், பத்திரிகைப் பணி பெருமை மிக்கது என்பது எளிதில் விளங்கும்.

பேனாவுக்கு இருக்கும் ஆற்றல் பெரிது என்பதை இந்த உலகம் நன்கு உணர்ந்திருக்கிறது. அதனால்தான் பத்திரிகைத் துறையை, பலர் ஆர்வமுடன் நாடி வருகின்றனர்.

தனிப்பட்டவர்கள் நடத்தும் விழாவானாலும் சரி, அரசு நடத்தும் விழாவானாலும் சரி, திரை உலக விழாக்களானாலும் சரி, அங்கெல்லாம் முன் வரிசையில் மிக உரிமையுடன் அமரும் வாய்ப்புப் பத்திரிகையாளர்களுக்குத்தான் உள்ளது. விழாவை நடத்துபவர்களை விட — விழாவின் நாயகர்களைவிட—அந்த விழா நிகழ்ச்சியைப் பத்திரிகையில் வெளியிடுவதற்காகக் குறிப்பு எழுத வந்திருக்கும் நிருபர்கள் மிகுந்த சிறப்புப் பெறுகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கும் பத்திரிகைத் தொழிலின் பெருமை தான்!

இந்தத் தொழிலில் பணிபுரியும் பலர் சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் கற்றிருக்கிறார்கள். சிலருக்கு அவை தெரியாது. ஆனாலும் அவர்கள் எல்லோரும் இந்தத் தொழிலில் திறமையுடன் விளங்கி வருகிறார்கள். என்றாலும் அதற்கும் முறையான ஒரு கல்வித் திட்டத்தை உருவாக்கி அதன் மூலம் இதழ் இயல் பயிற்சியை அளித்தால், திறமையான—முறையான பத்திரிகையாளர்கள் கிடைப்பார்கள் என்பதை உணர்ந்து, சென்னைப் பல்கலைக் கழகம், இதழ் இயல் துறையில் இரண்டாண்டு பட்ட மேற்படிப்பு வகுப்பைச் (Post Graduate Degree in Journalism) சிறப்பாக நடத்தி வருகிறது.

1947ஆம் ஆண்டு, சென்னைப் பல்கலைக் கழகம், இதழ் இயல் துறையில் ஓராண்டு டிப்ளமா வகுப்பை அறிமுகம் செய்தது. ஆனால் அப்போது அது தனித்



துறைத் தலைவரும் மாணவர்களும்

துறையாக இருக்கவில்லை. பல்கலைக் கழகத்தின் பொருளியல் துறையைச் சார்ந்ததாக இருந்தது. இதனால் பொருளியல் துறைப் பேராசிரியர்தான் இதழ் இயல் துறைக்கும் பொறுப்பாளராக இருந்து வந்தார். அதுமட்டுமல்ல, அந்த டிப்ளமா வகுப்புகள் முழுக்க முழுக்கப் பகுதி நேர விரிவுரையாளர்களால் நடத்தப்பட்டு வந்தன.

1975-76 கல்வியாண்டில், சென்னைப் பல்கலைக் கழகம், பொது மக்கள் தொடர்பு, புத்தகத்தொழில், சுற்றுலா, சமூக சேவை, வணிக நிர்வாகம், உட்புற அலங்காரம் போன்ற வேலை வாய்ப்புக் கல்வி வகுப்புகளை (Job Oriented Course) உருவாக்கியது. வேலை வாய்ப்பை அதிக அளவில் ஏற்படுத்தும் இதழ் இயல் துறையிலும் டிப்ளமாவுக்குப் பதிலாக—பட்ட மேற்படிப்பு வகுப்பைத் துவக்குவது பயன் மிகுந்தது என்ற கருத்துடன் இதழ் இயல் துறையை ஒரு தனித் துறையாக மாற்றியது. இந்தத் துறைக்கென ஒரு தலைவரையும், இதழ் இயலில் பட்டம் பெற்ற முழு நேர விரிவுரையாளர்களையும் நியமித்தது.

முழு நேர விரிவுரையாளர்களுடன் பகுதி நேர விரிவுரையாளர்களின் தொண்டு கிடைப்பதற்கும் வழி வகுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் துறை, மாநிலத்தின் தலைநகரான சென்னையில் இருப்பதால், புகழ் பெற்ற ஆங்கில நாளேடுகள், தமிழ் ஏடுகள் ஆகியவற்றில் பணிபுரியும் பத்திரிகையாளர்களும், வானொலி, தொலைக்காட்சி போன்ற செய்தி மையங்களில் பணி புரியும் அலுவலர்களும் அடிக்கடி வருகை தந்து சிறப்பு விரிவுரை ஆற்றுகிறார்கள்.

இந்த வகுப்பில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக ஆண்டுதோறும் ஜூன் திங்களில், நாளேடுகளில் விளம்பரம் செய்யப்படுகிறது. ஜூலை மாதத்தில் வகுப்புத் துவக்கம் ஆகிறது ; ஏப்ரலில் முடிகிறது. ஆண்டொன்றிற்கு ரூபாய் 300 பயிற்சிக் கட்டணம்; சிறப்புக் கட்டணம் ரூபாய் 20 தனி.

அரிசன, பிற்பட்ட மாணவர்களுக்கு, ஏனைய பட்ட வகுப்புகளில் பயிற்சிக் கட்டணச் சலுகைகள் இருப்பது போலவே, இதழ் இயல் துறையின் பயிற்சி வகுப்பிலும் சலுகைகள் உள்ளன.

முதன்மை நிலையில் உள்ள மாணவர்கள் இருவருக்கு ஆண்டுதோறும் வெளியாரால் படிப்பு உதவித் தொகையும் வழங்கப்படுகின்றது.

### பத்திரிகைத் தொழிலில் பெண்கள்

உலகத்திலேயே முதன் முதலாக 11-3-1702-ல் லண்டனில் துவக்கம் செய்யப்பட்ட Daily Courant என்ற நாளிதழின் ஆசிரியர் எலிசபெத் மேலட் (Elizabath Mallet) என்னும் பெண்மணி ஆவார். அவருக்குப் பின்னர் அந்த இதழின் ஆசிரியராக வந்தவரும் Marry என்னும் பெண்மணிதான் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கல்வி ஆண்டிலிருந்து (1977-78) செமஸ்டர் முறையில் தேர்வு நடைபெறுகிறது. இளநிலை வகுப்பில் இரண்டு செமஸ்டர் தேர்வுகள், முதுநிலை வகுப்பில் இரண்டு செமஸ்டர் தேர்வுகள் உண்டு. தற்போது முதுநிலை வகுப்பில் பயிலும் மாணவர்கள் 76-77-ல் சேர்ந்தவர்களாதலால் அவர்களுக்கு செமஸ்டர் முறைத் தேர்வு இல்லை.

தினமும் காலை 10.30 மணியிலிருந்து 1.30 மணி வரை பாட வகுப்பு (Theory class) நடைபெறுகிறது ; பிற்பகல் 2.30 மணியிலிருந்து 4 மணி வரை, வானொலி நிலையம், தொலைக் காட்சி நிலையம் போன்ற தகவல் தொடர்பு நிலையங்களுக்குச் சென்று களப் பயிற்சியும் —புகழ் பெற்ற செய்தி ஏடுகளின் அலுவலகங்களுக்குச் சென்று செய்முறைப் பயிற்சியும் பெறுகிறார்கள். சில நாட்களில் பகுதி நேர விரிவுரையாளர்களின் சொற்பொழிவுகளையும் சிறப்புச் சொற்பொழிவாளர்களின் விரிவுரைகளையும் மாணவர்கள் கேட்டு வருகிறார்கள்.

ஆங்கிலம், இதழ் இயல் துறையின் பயிற்சி மொழியாக இருந்து வருகிறது. இதில் சேர விரும்பும் மாணவர்கள் இந்தியாவில் உள்ள எந்தப் பல்கலைக் கழகத்தில் பயின்றவராகவும் இருக்கலாம். எந்த வயதினராகவும் இருக்கலாம். ஆனால் அவர்கள் பல்கலைக் கழகத்தில் அங்கீகாரம் பெற்ற பட்டதாரிகளாக இருக்க வேண்டியது அவசியம்.

இந்த வகுப்பில் பயிலும் மாணவர்கள், சுருக்கெழுத்து, தட்டெழுத்து ஆகியவற்றையும் இங்கே கற்க வேண்டியுள்ளது.

ஏற்கெனவே அவற்றில் தேர்வு பெற்றிருப்பவர்கள் இங்கே மாணவராகச் சேர்ந்தால், அவர்கள் அவற்றை இங்கே கற்க வேண்டிய அவசியம் இல்லை.

இதழ்களில் பணி புரியும் நிருபர்களுக்குச் சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் மிகவும் துணையாக இருப்பதால் அவை இதழ் இயல் பயிற்சியில் பாடமாக வைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் உள்ள வேறு எந்தப் பல்கலைக் கழகத்திலும் இதழ் இயல் துறையில் சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் பாடங்களாக இல்லை. சென்னைப் பல்கலைக் கழகத்தில் மட்டுமே உள்ளன.

இந்த இரண்டு பாடங்களும் மாணவர்களுக்கு ஒரு வகையில் இலாபமாக இருக்கின்றன. மறு வகையில் இடையூறாக அமைந்து விடுகின்றன. எப்படித் தெரியுமா? இதழ் இயல் துறையின் தேர்வுக்குரிய எல்லாப் பாடங்களிலும் தேர்ச்சி பெற்று, சுருக்கெழுத்து, தட்டெழுத்து ஆகிய இரண்டிலும் தேர்ச்சி பெறாவிட்டால், அந்த மாணவர்கள் தோல்வியுற்றோர் பட்டியலில் சேர்க்கப்படுகிறார்கள். சென்ற ஆண்டு (1976-77) தேர்வு எழுதிய 18 மாணவர்களில் 7 பேர் சுருக்கெழுத்து, தட்டெழுத்துத் தேர்வுகளில் தேர்ச்சி பெறாததால், பாவம், தோல்வியைத் தழுவ நேர்ந்து விட்டது.

எனவே, இந்த இரு பாடங்களும் கட்டாயம் எனக் கூறப்பட்டு வந்தாலும் தற்சமயம், விதிகள் சற்றுத் தளர்த்தப்பட்டு உள்ளன. இந்த இரு பாடங்களிலும் ஒரு மாணவருக்குத் தகுதி உள்ளது என்று துறைத் தலைவர் சான்று தந்தால் போதுமானது என்ற நிலை உருவாகியுள்ளது. இந்த வகையில், இதழ் இயல் வகுப்பில் பயிலும் மணவர்களுக்கு இந்த இரு பாடங்களிலும் ஆர்வம் ஏற்பட வழி வகை செய்யப்படுகிறது.

இதழ் இயல் துறையில் பட்ட மேற்படிப்பில், சென்ற ஆண்டு தேர்ச்சி பெற்ற 11 பேர்களும் வேலைவாய்ப்புப் பெற்றுவிட்டார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. அவர்களில் எட்டுப் பேர் பல்வேறு பத்திரிகைகளிலும், ஒருவர் தனியாரின் விளம்பர நிறுவனத்திலும், இருவர் பகுதிநேர ஊழியர்களாக வானொலி நிலையத்திலும் பணி புரிகிறார்கள்.

இளநிலை வகுப்பில் 20 மாணவர்களும், முதுநிலை வகுப்பில் 20 மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இவர்கள் கதை, கட்டுரை, நாடகங்கள் ஆகியவற்றை எழுதுவதற்குப் பயிற்றுவிக்கப்படுகிறார்கள்.

நாட்டில் வெளிவரும் சில பத்திரிகைகளில் உள்ள தலையங்கங்கள் மாணவரிடையே காண்பிக்கப்படுகின்றன. அவை குறித்து மாணவர்களுடன் விரிவுரையாளர்கள் விவாதம் செய்கின்றனர்.

சில நேரங்களில் சில பிரச்சினைகளை மாணவர்களிடம் தெரிவித்து அவை குறித்துத் தலையங்கங்கள் எழுதுமாறும் சொல்லப்படுகிறது. மாணவர்கள், அவரவர் எண்ணப்படித் தலையங்கங்களை எழுதுகிறார்கள். பிறகு வகுப்பில் அத்தலையங்கங்களைக் குறித்து மதிப்பீடும் செய்யப்படுகின்றது. மாணவர்கள் தம் திறமையை வளர்த்துக் கொள்ள இது ஒரு வாய்ப்பாக அமைகிறது.

இந்தியாவில் உள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் இதழ் இயல் துறை கிடையாது. சென்னை, கள்ளிக்கோட்டை, திருவனந்தபுரம், பெங்களூர், மைசூர், ஐதராபாத், புனா, பெர்ஹாம்பூர், கௌஹாதி, பெனாரஸ், ராஜஸ்தான், பஞ்சாப், அரியானா ஆகிய பல்கலைக்கழகங்களில் மட்டும் தான் உள்ளது.

இவற்றைத்தவிர மைய அரசின், செய்தி ஒலிபரப்புத் துறையின் ஆதரவுடன் டில்லியில் நடைபெற்று வரும் Indian Institute of Mass Communication எனும் நிறுவ

## சிறு பத்திரிகைகளுக்கு உதவி

குறைவான பிரதிகள் விற்பனையாகும்— தரமுள்ள தின, வார, மாத இதழ்கள், தமிழ் இலக்கியப் பதிப்புகள் பல, தமிழ்நாட்டிலிருந்து வெளியிடப்படுகின்றன. இவைகளுக்குத் தேவைப்படும் காகிதம் (News Print) பெரும்பாலும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகின்றது. இவர்களுக்குக் காகிதம் இறக்குமதி செய்வதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. மொத்தமாக வாங்குவதால் செலவு குறையும். ஆனால், அப்படி வாங்க அவர்களுக்குப் போதிய நிதி வசதி இருப்பதில்லை.

இதைக் கருத்தில் கொண்டு காகிதம் வாங்குவதற்கு உதவி செய்ய வேண்டுமென்று அரசு எண்ணுகிறது. தமிழக அரசின் சார்பில் (Small Industries Development Corporation (SIDCO) மூலமாகக் காகிதம் இறக்குமதி செய்து சிறு பத்திரிகைகளுக்கும், புத்தகங்களுக்கும் கொடுக்க ஒரு திட்டம் பரிசீலிக்கப்படும். இதனால் குறைந்த விலையில் காகிதம் வழங்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாணவர்களில் ஒரு பகுதியினர்



னம், இதழ் இயல் மற்றும் தகவல் தொடர்பு (Journalism and Communication) படிப்பில் ஓராண்டு உயர்தரப் பயிற்சி வகுப்பை நடத்தி வருகிறது.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் இதழ் இயல் துறை வகுப்பில் வெளி மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்களும் பயிற்சி பெறுகிறார்கள்.

துறைத் தலைவரை ஆசிரியராகக் கொண்டு, Pen is mightier than Sword என்ற வாசகத்தை ஏந்தியவாறு MADRAS UNIVERSITAS என்னும் பெயருள்ள மாத இரு முறை ஏடு ஒன்று மாணவர்களால் நடத்தப்படுகிறது. இது, இரு முறை ஏடு மட்டுமல்ல, இரு மொழி ஏடும் ஆகும். ஆங்கிலத்திலும் தமிழிலும் இதில் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. ஏடு என்றவுடன் அச்சகத்தின் வண்ணக் காகிதத்தால் தயாரித்து வெளிவரும் ஆப்செட் இதழ் என்று எண்ணிவிட வேண்டாம். மாணவர்கள் கட்டுரைகளை எழுதி, தாங்களே தட்டச்சின் மூலம் ஸ்டென்சில் தயாரித்து, சைக்லோஸ்டைல் இயந்திரத்தின் உதவியால் இதனை உருவாக்குகிறார்கள். இந்த ஏடு முழுக்க முழுக்க மாணவர்களின் படைப்பு. கையெழுத்து ஏட்டிலிருந்து, சிறிது முன்னேறிய நிலை இது என்று கொள்ளலாம். இந்த ஏட்டில் மாணவர்களின் எழுத்துத் திறமை ஒளி வீசித் திகழ்கிறது. வரும் ஆண்டிலிருந்து, . இந்த இதழை அச்சு ஏடாகக் கொண்டு வருவதற்குத் திட்டமிடப்பட்டு வருகிறது.

சைக்லோஸ்டைல் ஏடு நடத்துவதில் மட்டும்தான் இந்த மாணவர்கள் திறமை பெற்றிருக்கிறார்கள் என்று குறைத்து மதிப்பிட்டு விடக் கூடாது. பெரும் சாதனைகளையும் இவர்கள் சாதித்திருக்கிறார்கள். அண்மையில் ஒரு நாளேட்டின் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்த போது, இதழ் இயல் துறை மாணவர்கள் அங்கே சென்று, பணி புரிந்து, சமாளித்து அந்த நாளேட்டைத் தவறாமல் தினமும் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது இவர்களது திறமைக்குப் பட்டயம் கூறும் செய்தியாகும்.

மாணவர்களுக்குப் புகைப்படத் துறையின் நுணுக்கம் குறித்த செயல் முறைப் பயிற்சியும் இங்கே அளிக்கப்படுவது குறிப்பிடத் தக்க செய்தியாகும்.

இங்கே நூலகம் ஒன்றும் உள்ளது. இதழ் இயல் குறித்துப் பல்வேறு நூல்களும் இதழ்களும் இங்கே இடம் பெற்றுள்ளன. இந் நூலகத்திற்கு வேறொரு சிறப்பும் உள்ளது. காந்தியடிகள் வெளியிட்ட 'ஹரிஜன்' (HARIJAN) ஆங்கில இதழ்கள் அனைத்தும் (19 தொகுதிகள்) இடம் பெற்று உள்ளன. இவை அமெரிக்க நிறுவனம் ஒன்றினால் வெளியிடப் பட்டுள்ளன.

ஏற்கெனவே பத்திரிகைத் துறையில் பணி புரிந்துவரும் பத்திரிகையாளர்கள் — பயன் பெறும் வகையில் பகுதி நேர (மாலை நேர) வகுப்புகளை நடத்துவதற்குச் சென்னைப் பல்கலைக் கழகம் திட்டமிட்டு வருகிறது. என்றாலும் பல்கலைக் கழகம் பல சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட நிறுவனமாகையால், பகுதி நேர வகுப்பு என்றாலும் கூட, பட்டதாரிகள்தான் இந்தப் பயிற்சி வகுப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் எனத் தெரிகிறது.

பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தரான திரு என். டி. சுந்தரவடிவேலு அவர்களின் முயற்சியால் உருவான இதழ் இயல் துறை பட்ட மேற்படிப்பு வகுப்பு, தற்போதைய துணை வேந்தர் திரு மால்கம் ஆதிசேஷய்யா அவர்களால் மிகவும் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.

உயர்நிலைப் பள்ளிகளிலேயே இதழ் இயல் படிப்பைத் துவக்க வேண்டும் என்றும், ஒரு வேளை அது நிறைவேற்ற முடியாததாக இருந்தால் 10 + 2 என்ற கல்வி முறையில் 2 வருடப் பயிற்சி நிலையிலாவது கற்றுத் தர வேண்டும் என்றும் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் அவர்கள் அண்மையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் துறையின் பெயரை இதழ் இயல் மற்றும் தகவல் தொடர்புத் துறை (Journalism and Communication) என மாற்றும் எண்ணமும் பல்கலைக் கழகத்திற்கு இருந்து வருகிறது. அதற்குரிய முறையில் பாடத் திட்டத்தை மாற்ற வேண்டுமென்று, துறையைச் சேர்ந்த வல்லுநர்கள் தெரிவித்தால் அவ்வாறு மாற்றுவதற்குரிய எல்லா வசதிகளும் உள்ளன. இது குறித்து ஆய்வு செய்வதற்கு திரு பி.ஜி. வர்கீஸ் அவர்களைத் தலைவராகக்கொண்ட நால்வர் குழு ஒன்று அமைக்கப் பட்டிருக்கிறது. அது தனது அறிக்கையை விரைவில் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதழ் இயல் துறை மாணவர்களின் பெருமை பற்றித் துறைத் தலைவர் டாக்டர் திரு. து. சதாசிவன் அவர்கள் குறிப்பிடுகிறார்:

''இந்தத் துறையின் மாணவர்களுக்குச் சகிப்புத் தன்மை எளிதில் உருவாகிறது. இத் துறையில் பயிற்சிபெற்றவர்கள் இதே துறையில் தான் பணி புரிய வேண்டும் என்ற அவசியம் இல்லை. பொது மக்கள் தொடர்புத் துறை, செய்தித்துறை, விளம்பரத் துறை, அச்சகத் துறை, புகைப்படத் துறை போன்ற துறைகளிலும் பணிசெய்ய முடிகிறது. அத்துடன் அவர்களுக்குத் தன்னம்பிக்கையும் வளர்கிறது. இந்தத் துறையில் தேறியவர்கள் வாழ்க்கையை எந்தச் சூழ்நிலையிலும் சமாளிக்கக் கூடிய தனித் திறமை பெறுகிறார்கள்''—அனுபவமும் தெளிவும் வார்த்தைகளாக வடிவெடுத்திருப்பதை உணர முடிகிறது.

உலகத்தைக் கவரத் தக்கது — மக்களின் பெரு மதிப்பைப் பெற்றது—பேராற்றல் மிக்கது—பெருஞ் சிறப்பு நிறைந்தது—இதழ் இயல் துறை! இத்துறைக்கு ஆண்டு தோறும் பத்திரிகையாளர்களை நல்ல முறையில் உருவாக்கி அனுப்பும் சென்னைப் பல்கலைக் கழகத்தின் பணி பாராட்டுக்குரியது.

இத்துறையில் பயிலும் மாணவர்களைச் சந்தித்து, ''நீங்கள் இத்துறையைத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் உங்களின் சொந்த ஆர்வமா, பெற்றோர்களின் கட்டாயமா'' என்று கேட்டபோது, அனைவரும் ஒருமுகமாகச் சொன்ன பதில்: 'உண்மையான ஆர்வம் தான்!'

**—எஸ். சண்முக சுந்தரம், பி. லிட்.**

---

பொதுவாக ஒரு விஷயத்தைப் பத்திரிகையில் சொல்வதற்குத் திறமை தேவை ; எழுத்தாளர்கள் எதையும், எல்லாரும் பாராட்டும் வகையிலே தெரிவித்துவிடும் ஆற்றல் பெற்றவர்கள்.

ஆங்கில நாடகாசிரியரான பெர்னாட்ஷாவின் 90 வது பிறந்த தினம் வந்தது. அப்போது அவர் உயிரோடிருந்தார். அவரைக் குறித்து அருமையான கட்டுரை ஒன்றை ஓர் எழுத்தாளர் எழுதினார். தலைப்பு எவ்வாறு கொடுப்பது? 'பெர்னாட்ஷாவின் 90வது பிறந்த நாள் விழா' என்று கொடுத்தால் அதிலே சுவை இல்லை! பிறரைக் கவரும் ஆற்றலும் அந்தத் தலைப்புக்கு இல்லை! எனவே, தலைப்பு —படிப்போரைக் கவர வேண்டும் என்று எழுத்தாளர் சிந்தித்தார்; சில வினாடிகளில் அற்புதமான தலைப்பு அவருக்கு உதயமாயிற்று. மறுகணம் பேனாவை எடுத்தார் ; தலைப்பை எழுதினார். அந்தத் தலைப்பு இதுதான் : ''90! Not out'' புது விதமாக 'கிரிக்கெட் பாஷை'யில் தலைப்புக் கொடுத்தார். அந்தத் தலைப்பு படிப்போரிடம் அமோகமான பாராட்டைப் பெற்றது.

# அஞ்சல் தலைகளில் அன்னைத் தமிழகம்

ஒரு நாட்டின் கலைத் திறனை, பண்பாட்டை, நாகரிக மேம்பாட்டை, மண்ணியலை, விண்ணியலை, அறிவியல் வளர்ச்சியை, சமுதாயப் பழக்க வழக்கங்களை, இயற்கை எழிலை, மேதைகளின் வரலாறுகளை இன்ன பிறவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லி நம்மை இன்பத்தில் ஆழ்த்தும் இணையற்ற வரலாற்றேடுகள் அஞ்சல் தலைகள்!

விண்ணைத் தொட்டு முத்தம் இடும் வகையில் அண்ணாந்து எழுந்து நிற்கும் மலைகள், வண்ணச் சிந்து பாடி, வளைந்து, நெளிந்து ஓடி, [illegible]ஞ்சியும் வளனும் சுரக்கச் செய்யும் வற்றாத ஜீவநதிகள், இன்ப அருள் சுரக்கும் எழில் ஆர்ந்த திருக்கோயில்கள், பாய்ந்து வரும் நதிகளைத் தேக்கிப் பாசனத்திற்குப் பயன்படுத்துவதற்காக எழுப்பப் பெற்ற அணைக் கட்டுகள், குறுங்கடல்களோ என எண்ணும் படியாகத் தோற்றம் அளிக்கும் விரிந்து பரந்த ஏரிகள், வைரத் தொங்கலோ என்று வியந்து பாராட்டத் தக்க வகையில் மலைமகளின் மார்பகத்தே தவழ்ந்து வரும் ஒளி மிக்க தண்ணருவிகள், வனவிலங்குகள், பறவைகள், வன விலங்குக் காப்பகங்கள், பறவைகளின் சரணாலயங்கள் முதலியவற்றையெல்லாம் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கக் கூடிய வகையில் பல வண்ண நிறங்களில் அஞ்சல் தலைகளையும் பல்வேறு நாட்டு அஞ்சல் துறைகளும் வெளியிட்டு வருகின்றன.

பல்துறைக் கல்வியை நமக்கு வழங்கும் பல்கலைக் கழகங்களாக விளங்குகின்ற அஞ்சல் தலைகள், சுற்றுலாத் துறை வளர்ச்சிக்கும் பெரும் துணை புரிகின்றன.

இந்திய அஞ்சல் துறை, இராமேஸ்வரத்தில் உள்ள அருள் மிகு இராமநாதசுவாமி கோயில், சோமநாத ஆலயம், பக்ரா-நங்கல் அணைக்கட்டு, தால் ஏரி, தாஜ் மகால், ஹம்பி ரதம், பரத்பூர் பறவைகள் சரணாலயம் போன்ற எண்ணற்ற அஞ்சல் தலைகளை வெளியிட்டுள்ளது. இவற்றுள், நமது அன்னைத் தமிழகத்தோடு தொடர்புடையவனவாக வெளியிடப்பட்டுள்ள அஞ்சல் தலைகள் பல உள்ளன.

இந்தியா விடுதலையடைவதற்கு முன்பு, இந் நாடு ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தபோது, 1933-ஆம் ஆண்டு மே திங்கள் 6ஆம் நாள், ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் வெள்ளி விழாவையொட்டி, இராமேஸ்வரம் கோயிலின் திருவுருவம் பொறிக்கப்பட்ட ஓரணா விலையுள்ள அஞ்சல் தலை வெளியிடப்பட்டது. இந்திய அஞ்சல் துறை வெளியிட்ட — தமிழகத் தொடர்புடைய முதல் அஞ்சல் தலை இதுதான்!

இதன் பிறகு, இந்தியா அந்நிய ஆதிக்கத்தினின்றும் விடுதலை பெற்றுச் சுதந்தர நாடான பின்னர், ஆடற் கலையின் முன்னவனாகவும் முதல்வனாகவும் கருதப்படுகிற நடராஜர் திருவுருவம் பொறித்த இரண்டணா விலையுள்ள அஞ்சல் தலை, இரண்டாவது சுதந்தர நாளையொட்டி 15-8-1949 அன்று வெளியிடப்பட்டது. இந்தத் திருவுருவம், செங்கற்பட்டு மாவட்டம் திருவாலங்காட்டில் அகழ்ந்தெடுக்கப்பட்ட நடராஜர் சிலையாகும். இந்த அழகிய—புராதன வெண்கலச் சிலை இப்போது, சென்னை எழும்பூரில் உள்ள அரசினர் அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, 31-12-'57—ல் சென்னைப் பல்கலைக் கழகத்தின் உருவம் பொறித்த 10 காசு விலையுள்ள அஞ்சல் தலை இந்தியப் பல்கலைக் கழகங்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி வெளியிடப்பட்டது.

பின்னர், 15-6-'69-ல் சென்னைக் கடற்கரையின் எழிலகத்திற்கு எதிரில் எழுப்பப்பட்டுள்ள அழகிய தொழிலாளர் சிலையின் உருவம் பொறித்த 15 காசு விலையுள்ள அஞ்சல் தலை, சர்வதேச தொழிலாளர் அமைப்பின் நினைவாக வெளிவந்தது.

அதன் பிறகு, மனிதகுல ஒருமைப் பாட்டுக்கும், மனிதகுலத்தின் நல்வாழ்வுக்கும் உதவக் கூடிய வகையில் ஒப்பற்ற உலகப் பொது மறையான திருக்குறளை அருளிய திருவள்ளுவரைச் சிறப்பிக்கும் வகையில் 15-2-1960-ல், அன்னாரின் திருவுருவம் பொறித்த 15 காசு விலையுள்ள அஞ்சல் தலையை வெளியிட்டது.

தொடர்ந்து 11-9-'60-ல் கவியரசர் சுப்பிரமணிய பாரதியா

विशेष आवरण SPECIAL COVER

TANAPEX '78

6-2-1978






அட்டை சொல்லும் கட்டுரை

ரின் திருவுருவம் பொறித்த 15 காசு விலையுள்ள அஞ்சல் தலையை வெளியிட்டுச் சிறப்புச் செய்தது.

அடுத்து, ஆண்டுதோறும் திருவையாற்றிலே சிறப்பான முறையில் இசை விழாக் கொண்டாடி மகிழ்கிறோமே, அந்த இசை மேதை-சுந்தரத் தெலுங்கினில் கீர்த்தனைகள் இசைத்த தியாகராஜர் நினைவாக, அவரது திருவுருவம் பொறித்த 15 காசு விலையுள்ள அஞ்சல் தலை 6-1-1961-ல் வெளியிடப்பட்டது.

பிறகு, இந்திய உயர் நீதி மன்றங்களின் நூற்றாண்டு விழாவை யொட்டி, 6-8-1962-ல் சென்னை உயர்நீதி மன்றக் கட்டடத்தின் உருவம் பொறித்த 15 காசு விலையுள்ள அஞ்சல் தலை வெளியானது.

உலகப் புகழ் பெற்ற இந்தியக் கணித மேதை சீனிவாச இராமாநுஜத்தின் 15வது ஆண்டு நினைவு விழாவையொட்டி அவர் தம் உருவம் பொறித்த 15 காசு விலையுள்ள அஞ்சல் தலை 22-12-1962-ல் வெளியிடப்பட்டது.

யோகியும் தியாகியுமாக வாழ்ந்த அரவிந்தர் அவர்களின் 92வது பிறந்த நாளை யொட்டி 15-8-1964-ல் அன்னாரின் திருவுருவம் பொறித்த 15 காசு விலையுள்ள அஞ்சல் தலை வெளியானது.

புனித தோமையர் மலை, மயிலாப்பூர் சாந்தோம், சின்ன மலை போன்ற பலவற்றோடு வரலாற்றுத் தொடர்புடைய புனித தோமையரின் திருவுருவம் பொறித்த 15காசு விலையுள்ள அஞ்சல் தலை 2-12-1965-ல் வெளியிடப்பட்டது.

இராம காதை நல்கி, என்றுமுள தென் தமிழை இயம்பிஇசை கொண்ட கவிச் சக்கரவர்த்தி கம்பரின் திருவுருவம் பொறித்த 15 காசு விலையுள்ள அஞ்சல் தலை, 5-4-1966-ல் வெளியிடப்பட்டது.

மாபெரும் தத்துவ மேதையும் இந்தியக் குடியரசின் தலைவராகவும் வாழ்ந்து, புகழ் சேர்த்த டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் திருவுருவம் கொண்ட 15 காசு விலையுள்ள அஞ்சல் தலை 5-9-'67 அன்று வெளியிடப்பட்டது. இந்த அஞ்சல் தலையினை முதன் முதலாக அவரே பெற்றுக் கொண்டது சிறப்புடையதாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பெரும் முயற்சியினால், சென்னையில் தனிச் சிறப்போடு நடைபெற்ற 2வது உலகத் தமிழ் மாநாட்டினை யொட்டி, திருக்குறள் நூலின் மீது உலகக் கோளத்தையும் அதன் மேல் எழில் ஆர்ந்த கோபுரத்தையும்கொண்டு தோற்றமளிக்கும் 15 காசு விலையுள்ள அஞ்சல் தலை 3-1-1968-ல் வெளியிடப்பட்டது.

தமிழுக்கு வளமும் தமிழினத்திற்கு வாழ்வும் நல்கித் தமிழினத் தலைவராகி, நாலரைக் கோடித் தமிழர்களின் நாயகனாக விளங்கிய பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவம் பொறித்த 20 காசு விலையுள்ள அஞ்சல் தலை 3-2-1970 அன்று வெளியிடப்பட்டது.

வெள்ளி நாவுடையார் என்று வியந்து பாராட்டப் பெற்ற ஸ்ரீநிவாச சாஸ்திரி அவர்களின் நினைவாக 22-9-1970-ல் அவர் தம் திருவுருவம் பொறித்த 20 காசு விலையுள்ள அஞ்சல் தலை வெளியானது.

திருவண்ணாமலையில் ரமண ஆஸ்ரமத்தை எழுப்பிய அருளாளர் ரமண மகரிஷி அவர்களின் திருவுருவம் பொறித்த 20 காசு விலையுள்ள அஞ்சல் தலை 14-7-71-ல் வெளியிடப்பட்டது.

அறிவியல் மேதை சி. வி. இராமன் அவர்களின் நினைவாக 21-11-1971-ல் அவரது திருவுருவம் பொறித்த 20 காசு விலையுள்ள அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

தேசியமும் தெய்விகமும் இரு கண்கள் எனக் கருதி வாழ்ந்து புகழ் ஈட்டிய அரவிந்தரின் நூற்றாண்டுவிழாவை யொட்டி (Sage & Sean) கொண்ட 20 காசு விலையுள்ள அஞ்சல் தலை 15-8-72-ல் வெளியிடப்பட்டது.

கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரம் பிள்ளையின் நூற்றாண்டு விழாவையொட்டி, 5-9-1972-ல் கப்பலைப் பின்னணியாகக் கொண்டு எடுப்பான தோற்றத்துடன் விளங்கும் வ.உ.சியின் திருவுருவம் பொறித்த 20 காசு விலையுள்ள அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

இயேசுவின் முக்கிய சீடர் என்றும் செயிண்ட் தாமஸ் மலை, சின்னமலை போன்றவற்றின் வரலாற்றோடு தொடர்புடையவர் என்றும் போற்றப்படுகிற புனித தோமையரின் 1900வது நினைவு நாளையொட்டி 3-7-1973-ல் 20 காசு விலையுள்ள அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலும், தமிழகத்தின் தலைசிறந்த பெரியார்களில் குறிப்பிடத்தக்கவருமான ராஜாஜி (சி. ராஜகோபாலாச்சாரியார்) அவர்களின் திருவுருவம் பொறித்த 20 காசு விலையுள்ள அஞ்சல் தலை அன்னாரின் முதலாவது நினைவு நாளன்று 25-12-1973-ல் வெளியிடப்பட்டது.

இந்தியக் குடியரசுத் தலைவராக விளங்கிய திரு வி.வி. கிரி அவர்களின் அரும்பெருஞ் சேவைகளைப் பாராட்டும் வகையில், 24-8-1974-ல் அவரது திருவுருவம் பொறித்த 25 காசு விலையுள்ள அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

"நொய்யின் அளவேனும் பகிர்ந்து குடிமின்கள்" என்று பகுத்துண்டு பல்லுயிரோம்பும் கொள்கைக்கு வலுவூட்டிய-திருப்புகழ் பாடித் திருப்புகழ் ஈட்டிய அருளாளர் அருணகிரிநாதரின் 600 வது பிறந்த நாளையொட்டி, அவரது திருவுருவம் பொறித்த 50 காசு விலையுள்ள அஞ்சல் தலை, 14-8-1975-ல் வெளியிடப்பட்டது.

தமிழ்நாட்டின் சிறப்பான கலைகளுள் குறிப்பிடத் தக்கதான பரத நாட்டியக் கலையைச் சிறப்பிக்கும் வகையில், இந்திய நடனங்கள் என்ற வரிசையில், 20-10-1975-ல் 50 காசு விலையில் அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

ஆங்கில நாட்டில் பிறந்து, இந்தியப் பெண்ணாக வாழ்ந்து அரசியல், கல்வி, சமூக நலம் ஆகிய துறைகளில் அயராது பணியாற்றியுள்ளார். இந்திய விடுதலைக்கு அவர் ஆற்றியுள்ள பணிகள் பெருஞ் சிறப்புடையவை. சென்னை அடையாற்றில் அவர் நிறுவிய தியசாபிகல் சொசைடியின் 100வது ஆண்டு விழா நிறைவையொட்டி, 20-12-'75ல் அறுகோணமும் லோகோ கிராமமும் பொருந்திய சின்னம் பொறித்த 25 காசு விலையுள்ள அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

'சங்கீத மும்மூர்த்திகள்' எனப் பாராட்டப்படுகிறவர்கள் தியாக பிரும்மம், சியாமா சாஸ்திரிகள், முத்துசாமி தீட்சிதர் ஆகிய மூவர். மூவரும் திருவாரூரில் பிறந்தவர்களே. தியாக பிரும்மம் என்னும் தியாகராஜர் அஞ்சல் தலை ஏற்கெனவே வெளிவந்துவிட்டது. திருவாரூரில் தியாகராஜர் உற்சவம் நடைபெறுவது போல. ஆண்டுதோறும் முத்துசாமி தீட்சிதருக்கு அவர் முத்தி பெற்ற எட்டையபுரத்தில் உற்சவம் நடைபெறுகிறது. அவரது 200வது ஆண்டுவிழாவையொட்டி 18-3-1976ல் 25 காசு விலையுள்ள அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

காந்தி வழி நின்று, தமிழ் மக்களின் நல்வாழ்வுக்கும், தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கும் முழுமூச்சாக இறுதி வரை வாழ்ந்த பெருந் தலைவர் காமராசர் அவர்களின் நினைவாக, 15-7-1976ஆம் ஆண்டு, 25 காசு விலையுள்ள அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

பாரீஸ் நகரில் பிரெஞ்சுக் குடும்பத்தில் பிறந்து, திரு அரவிந்தரின் முக்கிய சீடராகவும் உதவியாளராகவும் வாழ்ந்து, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதற்கேற்ற புத்துலகம் ஒன்றைப் படைக்கவல்ல கனவுலகைக் கனவு கண்டு, 'உதயபுரி' என்னும் 'ஆரோவில்' நகரைப் படைத்த அன்னையின் நூற்றாண்டு விழாவை

யொட்டி, 21-2-1978ல் அன்னையின் திருவுருவம் பொறித்த 25 காசு விலையுள்ள அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

**தமிழ்நாட்டில் அஞ்சல் தலைக் கண்காட்சிகள் :**

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அஞ்சல், தந்தித் துறையின் சார்பில் 1973, 1975, 1978 ஆகிய மூன்றாண்டுகளில் முறையே முதலாவது, இரண்டாவது, மூன்றாவது அஞ்சல் தலைக் கண்காட்சிகள் நடைபெற்றுள்ளன.

முதலாவது அஞ்சல் தலைக் கண்காட்சி சென்னை நேரு ஸ்டேடியத்தில் 1973ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20-ஆம் நாள் தொடங்கி 23-ந் தேதி முடிய நான்கு நாட்கள் நடைபெற்றன. அப்போது: தமிழகத்தை நினைவுறுத்தும் வகையில், வானளாவிய கோபுரத்தையும், கோபுரத்தின் நடுவில் ஆடலார் கோமான் என்று பாராட்டப் பெறும் நடராஜர் திருவுருவத்தையும் புடைப்புரு (Mould Print) முறையில் தங்க நிறத்தில் அமைத்து சிறப்பு உறையாக வெளியிடப்பட்டது.

நான்கு நாட்களிலுமாக மொத்தம் 20 ஆயிரம் சிறப்பு உறைகள் விற்பனையாகியுள்ளன. இந்தச் சிறப்பு உறைகளில் தமிழகத்தின் கலைத் திறனை எடுத்துக் கூறும் வகையில் நான்கு நாட்களிலும் முறையே பரத நாட்டியம், மாமல்லபுரம் கற்கோயில், கரக ஆட்டம், பொய்க்கால் குதிரை, ஆகியவற்றைக் கொண்ட முத்திரைகள் குத்திக் கொடுக்கப்பட்டன.

தமிழ்நாட்டில் இரண்டாவது அஞ்சல் தலைக் கண்காட்சி 1975 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 6-ஆம் நாள் முதல் 10-ஆம் நாள் முடிய 5 நாட்கள் சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது.

முதல் நாள், மராத்தியர் காலத்தில் தஞ்சையில் அறிமுகப்படுத்தப்பட்ட — கலை வண்ணமும், தொழில் நுணுக்கமும் வாய்ந்த தஞ்சாவூர்க் கலைத் தாம்பாளம், இரண்டாம் நாள் மதுரை மீனாட்சி அம்மன் கோயில், மூன்றாம் நாள் 'சிற்பக் கலை'யின் சிறப்புத் தவழும் மாமல்லபுரத்திலுள்ள யானைகளின் சிற்பம், நான்காம் நாள், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் ஒருமைப்பாட்டுணர்வினை உணர்த்தும் வகையில் பாண்டிச்சேரியில் புதிதாக உருவாக்கப் பெற்ற 'ஆரோவில்' நகரம், ஐந்தாம் நாள் தமிழினத்தின் தனிப்பெருந் திருநாளான பொங்கல் விழாவினை நினைவுறுத்தும் வகையில் கோலமிட்ட பொங்கற் பானை, கரும்பு ஆகிய காட்சிகளை அழகுற அச்சிட்ட சிறப்பு உறைகள் வெளியிடப்பட்டன. இவற்றின் ஒவ்வொரு நாளும் முறையே அவற்றோடு தொடர்புடைய வகையில் பாவை விளக்கு, கோயில் தேர், வண்ணக் கோலம், நாதசுரம், கிராமங்களில் சதுக்க பூதத்தின் சாத்தன் உருவம் என்று கருதப் பெறுகிற ஐயனார் முத்திரைகள் சிறப்பு உறைகளில் குத்திக் கொடுக்கப் பெற்றன. 'தாநாபெக்ஸ் 75'ஐ ஒட்டி மொத்தம் 50 ஆயிரம் சிறப்பு உறைகள் வெளியிடப்பட்டன.

மூன்றாவது அஞ்சல் தலைக் கண்காட்சி சென்னை ஆபட்ஸ்பரியில் 1978—ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 4—ஆம் நாள் தொடங்கி 8ஆம் தேதி வரை நடைபெற்றது. இதை யொட்டி, முதல் நாள், திருச்செங்கோடு ஆலயத்திலுள்ள அர்த்தநாரீசுவரர் திருவுருவம் அச்சிட்ட சிறப்பு உறையில் சூரிய வட்டத்தோடு பூரண கும்பம் கொண்ட முத்திரை குத்தியும், இரண்டாம் நாள் கிழக்கிந்திய கம்பெனிக் (1799-ஆம் ஆண்டு) காலத்திய புனித ஜார்ஜ் கோட்டை (இன்றைய தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்) அச்சிடப்பட்ட சிறப்பு உறையில் 'Post Paid, Fort St., George' என்னும் முத்திரை குத்தியும், மூன்றாம் நாள் தஞ்சைப் பெருங் கோயிலும் அங்குள்ள புகழ்பெற்ற நந்தியும் அச்சிடப்பட்ட சிறப்பு உறையில் வீணை உருப் பொறித்த முத்திரை குத்தியும், நான்காம் நாள் விஜயந்தா டாங்க் அச்சிடப்பட்ட சிறப்பு உறையில், 18-ஆம் நூற்றாண்டில் புழக்கத்தில் இருந்த பீரங்கியின் உருவத்தை முத்திரை குத்தியும், ஐந்தாம் நாள் நீலகிரி மாவட்ட மலைவாசிகளான 'தோடா'வின் வண்ணப்படம் அச்சிடப்பட்ட சிறப்பு உறையில் தோடர்களின் கோயிலின் உருவத்தை முத்திரையாகக் குத்தியும் வழங்கினார்கள்.

தநாபெக்ஸ் '78-ஐ யொட்டி மொத்தம் 33,000 சிறப்பு உறைகள் வெளியிடப்பட்டன.

இவ்வாறு, அஞ்சல் தந்தித் துறை நடத்திய 3 'தநாபெக்ஸ்' தவிர, 1974, 1975 ஆகிய இரண்டு ஆண்டுகளில் முறையே கோவையிலும் உதகமண்டலத்திலும் இரண்டு அஞ்சல் தலைகள் சேகரிப்புக் கண்காட்சிகள் நடைபெற்றன.

**சிறப்பு முத்திரைகள் :**

இவ்வாறு அஞ்சல் தலைகளும், சிறப்பு உறைகளும் வெளியிடுவதோடு, பயணிகட்கும், அஞ்சல் தலைச் சேகரிப்பாளர்கட்கும் அறிமுகப்படுத்தும் நோக்கத்தோடும், அவ்வூர்களைச் சிறப்பிக்கும் நோக்கத்தோடும் அவ்வப்போது பல முத்திரை (Cancellation) களும் பயன்படுத்தப்படுகின்றன. அவ்










வகையில், தமிழ்நாட்டில் இதுகாறும் பயன்படுத்தப்பட்டுள்ள முத்திரைகளின் விவரம் :

**வேடந்தாங்கல்**

இதனைச் சிறப்பிக்கும் வகையில் பறவைகள் சரணாலய முத்திரை 3-6-1974 முதல் பதிக்கப்பட்டது.

**தஞ்சாவூர் :**

இதனைச் சிறப்பிக்கும் வகையில் வரலாற்றுப் புகழ் பெற்ற இராஜராஜ சோழன் எழுப்பிய தஞ்சைப் பெருங்கோயில் முத்திரை 16-12-1974 முதல் பதிக்கப்பட்டது.

**திருச்சிராப்பள்ளி :**

திருச்சிராப்பள்ளியின் நடுவே உயர்ந்து எழுந்து நிற்கும் அழகிய புகழ் பெற்ற மலைக்கோட்டையின் முத்திரை 17-12-1974 முதல் குத்தப்பட்டது.

**முதுமலை :**

முதுமலையில் உள்ள வன விலங்குக் காப்பகத்தின் முத்திரை 5-4-1975 முதல் குத்தப்பட்டது.

**கன்னியாகுமரி :**

முக்கடல்கள் கலக்கும் எழில்மிகு கன்னியாகுமரியில் இயற்கைப் பொலிவோடும் செயற்கைத் திறனோடும் விளங்கும் விவேகானந்தர் பாறையின் தோற்றம் கொண்ட முத்திரை 21-11-1975 முதல் குத்தப்பட்டது.










**திருவையாறு :**

ஐயாற்றையும், அங்கு ஆண்டு தோறும் இசை விழாக் கொண்டாடப்படுகிற இசை மேதை தியாகராஜரையும் சிறப்பிக்கும் வகையில் வீணையின் உருவம் பொறித்த முத்திரை 20–1–1976 முதல குத்தப்பட்டது.

**பேரூர் :**

கோவை மாவட்டத்தில் சிறப்பு மிக்க பேரூர் திருக்கோயிலை நினைவு படுத்தும் வகையில் 3-2-1976ல் அக்கோயிலின் உருவம் பொறித்த முத்திரை குத்தப்பட்டது.




**நாகூர் :**

முஸ்லீம்களாலும், இந்துக்களாலும் வணங்கப்படுகின்ற நாகூர் தர்க்காவை நினைவுபடுத்தும் வகையில் அத் தர்க்காவின் உருவம் பொறித்த முத்திரை 8-10-1976ல் குத்தப்பட்டது.

**மாமல்லபுரம் :**

பல்லவப் பேரரசின் கலைத் திறனுக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் மாமல்லபுரத்தை நினைவு படுத்தும் வகையில் அங்குள்ள தனிப் பெருஞ் சிறப்புடைய கற்கோயிலின் உருவம் பொறித்த முத்திரை 15-10-1976ல் குத்தப் பட்டது.




**வேளாங்கண்ணி :**

இந்துக்களும் கிறித்தவர்களும் ஒருங்கே வணங்குகின்ற வேளாங்கண்ணியைச் சிறப்பிக்கும் வகையில் அங்குள்ள அன்னை வேளாங்கண்ணி கோயிலின் உருவம் பொறித்த முத்திரை 29-11-'76ல் குத்தப்பட்டது.

**மதுரை :**

சென்னை மதுரைக் கிடையே புதிதாக வைகை எக்ஸ்பிரஸ் விடப்பட்டதன் நினைவாக, எக்ஸ்பிரஸ் ரயில் வரை கோட்டுருவம் பொறித்த முத்திரை 15-8-'77ல் குத்தப்பட்டது.






**குற்றாலம் :**

தமிழகத்தின் கோடை வாழ் தலமாக விளங்கும் குற்றாலத்தை நினைவுபடுத்தும் வகையில், அத் தலத்திற்கே தனிச் சிறப்புடையதாகத் திகழும் அருவியின் வரையுருவம் பொறித்த முத்திரை 7-8-'77ல் குத்தப்பட்டது.

**பவானி :**

விரிப்புகளுக்குப் பேர் பெற்ற பவானியை நினைவுபடுத்தும் வகையில் அங்குள்ள பவானி அம்மன் ஆலயத்தின் உருவம் பொறித்த முத்திரை 25-8-1977ல் குத்தப் பட்டது.

**கோடிக்கரை :**

கோடிக்கரையின் நினைவாக, நீர் வாழ் பறவையான நாரையின் உருவம் பொறித்த முத்திரை 2-12-1977ல் குத்தப்பட்டது.

**இராமேஸ்வரம் :**

இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஒரு திருத்தலமாக விளங்கும் இராமேஸ்வரத்தைச் சிறப்பிக்கும் வகையில், இராமேஸ்வரம் கோயிலின் மூன்றும் பிரகாரத்தின் உருவம் பொறித்த முத்திரை 7-3-1978ல் குத்தப்பட்டது.

**அஞ்சல் தலைச் சேகரிப்பு நிலையங்களும், விற்பனை நிலையங்களும்:**

அஞ்சல் தலைச் சேகரிப்பாளர்களுக்கு உதவியாக, தமிழ்நாட்டில் மூன்று அஞ்சல் தலைச் சேகரிப்பு நிலையங்களும், 21 அஞ்சல் தலை விற்பனை நிலையங்களும் உள்ளன.

**அஞ்சல் தலைச் சேகரிப்பு நிலையங்கள் :**

1. சென்னை அண்ணாசாலை, தலைமை அஞ்சலகம்.
2. கோயம்புத்தூர், தலைமை அஞ்சலகம்.
3. பாண்டிச்சேரி, தலைமை அஞ்சலகம்.

**அஞ்சல் தலை விற்பனை நிலையங்கள்:**

1. அண்ணாமலை நகர்
2. சிதம்பரம்
3. கடலூர்
4. தருமபுரி
5. காஞ்சீபுரம்
6. காரைக்குடி
7. கொடைக்கானல்
8. சென்னை ஜி. பி. ஓ.
9. மதுரை
10. மாமல்லபுரம்
11. நாகர்கோயில்
12. உதகமண்டலம்
13. பாளையங்கோட்டை
14. புதுக்கோட்டை
15. சேலம்
16. தாம்பரம்
17. தஞ்சாவூர்
18. தியாகராயநகர்
19. திருச்சிராப்பள்ளி
20. வேலூர்
21. ஏர்க்காடு

— சாமி பழனியப்பன்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை 600002

# தீண்டாமையை ஒழிப்போம்!

"இந்தியாவில் அரிசனங்களை ஒதுக்கித்
தனியே விடப்பட்டுள்ள பெருங்கொடுமையைப்
பார்த்தால், இதற்குச் சமமான கொடுமை
உலகத்தில் எங்குமே இருந்ததில்லை
என்று சொல்லத் தோன்றுகிறது."

— அண்ணல் காந்தியடிகள்.



இக்கொடுமையை
ஒழிக்கப் பாடுபடுவதே
அண்ணல் காந்தியடிகளுக்கு
நாம் செய்யும்
நன்றிக் கடனாகும்!

வெளியீடு :— இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.



# மதுவை ஒழித்து மகிழ்ச்சி நிலவச் செய்வோம்!



"சாராயம் நம் உடலையும், நடத்தையையும், அறிவையும் பாழாக்குகிறது!"

"மலேரியா முதலிய நோய்கள் உடலை மட்டுமே பாதிக்கும்; மது பானங்களும், கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும் பாதிக்கும்."

—அண்ணல் காந்தியடிகள்

"மதுவிலக்கு இல்லையேல் அரிசனங்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் விமோசனம் இல்லை!"

—பேரறிஞர் அண்ணா



வெளியீடு :—
இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.